Registered as a News Paper

பக்கம் – 16

# ஈழநாதம்

Eelanatham வெள்ளி நாதம்

விலை: 12.00

நாதம் –13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | கார்த்திகை 06 | 22-11-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 277

உங்கள் எண்ணம் போல்
கண்கவர் தங்க நகைகளுக்கு
உத்தரவாதம் தருபவர்கள்

**சிறி கருமாரி நகையகம்**

177–D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வன்னியில் நாச்சிக்குடாச் சந்தியில் செயற்பட்டு
வந்த எமது நிறுவனம் தற்போது
யாழ்ப்பாணத்தில் செயற்படுகின்றது.
(சி-7411)



# புனரமைப்பு உபகுழுவின் முதலாவது கூட்டம்



இனமென நிமிர்வதும்
இடைவெளி தகர்வதும்
கார்த்திகை
இருபத்தியேழில்
புதைந்தவர் விளைவதும்
விளைந்தவர் நிமிர்வதும்
கார்த்திகை
இருபத்தியேழில்



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 22.11.2002

## மன்னிப்புச் சபையின் குற்றச்சாட்டு....

1995இன் இறுதிப்பகுதியில் யாழ் குடாநாடு சூரியக்கதிர் தொடர் இராணுவ நடவடிக்கை மூலம் சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்புக்குள் சிக்கியதை அடுத்து, இடம்பெயராது நின்ற இராணுவப் பிடிக்குள் தாம் சிக்கப்போகும் அபாயத்தை உணராத, அப்பாவித் தமிழ் மக்கள் மீது சிறிலங்கவின் தமிழின அழிப்பையே'இலட்சியமாக'க் கொண்ட படையினர் நடத்திய கொலை வெறிச் செயற்பாடுகளால் சுமார் 600க்கும் அதிகமான பொதுமக்கள் வயது மற்றும் பால் வேறுபாடின்றி கைது செய்யப்பட்ட பின் கொல்லப்பட்டும் காணாமற் போயுமுள்ளனர் என்ற செய்தியின் பின்னால் உள்ள சிறிலங்காவின், சிங்கள பௌத்த அரச பயங்கரவாதத்தின் கொடூரக் கரங்களில் செறிந்து உறைந்துள்ள இரத்த வாடை இவ்வளவு காலத்தின் பின்னர்- அதாவது சுமார் ஏழு ஆண்டுகளின் பின்னர் உலக சமூகத்தின் பார்வைக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

செய்திகளையும், தகவல்களையும் அதற்கெதிரான சிறிலங்கா அரசின் மறுப்புக்களையும் மட்டும் கேட்டு மௌனம் காத்த உலக சமூகம் இம்முறை அப்படிச் செய்ய முடியாத வகையில் நேரடியாக சிறிலங்கா அரசின் மீதான சர்வதேச மன்னிப்புச் சபையின் குற்றச்சாட்டு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ் குடாநாட்டில் 1995ம் ஆண்டு இறுதியிலும் 1996இலும் 600க்கும் அதிகமான பொதுக்கள்- தமிழ் மக்கள் காணாமற் போனமைக்கு சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகாவும் , அவரின் படைத்தளபதிகளாக விளங்கியவர்களான ரோகான் தலுவத்த, ஜானகப்பெரேரா போன்றோருமே பொறுப்பு என சர்வதேச மனிப்புச்சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த விடயமேயாகும்.

'பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தம்', 'சமாதானத்திற்கான யுத்தம்' என்றெல்லாம் உலகை ஏமாற்ற வரைவிலக்கணங்களைக் கூறிக்கொண்டு. தமிழ் மக்களை அவர்களின் வாழ்விடத்தோடு முற்றாகவே துவம்சம் செய்யும் கொலை வெறியுடன் சந்திரிகா நடாத்திய போரின் அனர்த்தங்கள் மட்டுமல்ல சந்திரிகாவின் ஹிட்லரின் சாயலிலான இரண்டாவது முகமும் இப்போதுதான் உலக சமூகத்திற்குத் துலங்கத் தொடங்கியுள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னாலான,சமாதான முன்னெடுப்புக்களின் நம்பிக்கையூட்டும் நகர்வுகளை அடுத்து சர்வதேச ராஜதந்திரிகள் பத்திரிகை மற்றும் ஏனைய ஊடகவிலாளர்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின், தொண்டு நிறுவனங்களின், பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட மனிதநேய அமைப்புக் களின் குழுக்கள் போன்றவற்றின் வடக்கு-கிழக்கு நோக்கிய வருகை யானது சந்திரிகாவின் தலைமையிலான பொது சன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கால இராணுவ அட்டூழியங்கள் குறித்த உண்மை யான பதிவுகளை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பினை அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

அதன் விளைவின் ஒரு அங்கம்தான் சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தக் குற்றச்சாட்டாகும்.

காணாமல் போய்விட்டதாக கருதப்படும் அந்த 600க்கும் அதிகமான மக்களும்-பெரும்பாலும் இராணுவத்தினரால் விசாரணைகளுக்கென கைது செய்யப்பட்ட பின்னரே காணாமல் போயுள்ளனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளுள் சிக்கி வாழும் மக்களை அச்சுறுத்தி, பீதி கொள்ளவைத்து, உளவியல் ரீதியில் பலவீனர்களாக்கி, அவர்களை அவர்களின் இயல்புளை இழக்கவைத்தது தங்களுக்கு கொத்தடிமைகளாக்கி வைத்திருக்கும் ஒருவிதமான உளவியல் நடவடிக்கை உத்தியின் பிரதிபலிப்பே இந்தக் காணாமல்போன மனிதர்களின் கதைகளாகும்.

இதற்கு சந்திரிகாவின் கட்டளைகளை சிரமேற் கொண்டு செயற்பட்ட இராணுவம் வைத்த பெயர்தான் ' அறிவையும் மனதையும்' வெல்லும் நடவடிக்கை என்பதாகும்.

இந்த நடவடிக்கையை திட்டமிட்டு நடத்தியவர்களில் முக்கியமானவர்கள் ரோகான் தலுவத்தையும், ஜானக பெரேராவுமாவர்.

இந்த இரு உயர் இராணுவ அதிகாரிகளும் தாங்கள் மேற்கொண்ட தமிழின அழிப்பு நடடிக்கைகளுக்கான கௌரவ பரிசாக அரசினால் வெளிநாடுகளில் இராஜதந்திரிகளாக பணிப்பொறுப்பு வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளார்கள்.

இவர்களுடன் சிறிலால் வீரசூரியாவையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். இவரும் ராஜதந்திரியாகவே பாகிஸ்தானில் பணியாற்றுகிறார்.

இனப்படுகொலை வல்லுநர்களை வெளிநாடுகளுக்கு தூதுவர்களாக நியமித்து உயர் கௌரவத்தை அளிப்பதென்பது சிலங்காவில் ஒரு மரபாகவே ஆகிவிட்டது.

சனாதிபதியும், ராஜதந்திரிகளும் இப்போது சர்வதேச மன்னிப்புச்சபையின் இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகியுள்ளனர். இந்தக் குற்றச்சாட்டு இவர்களை எந்தவகையிலாவது பாதிக்கும் அளவுக்கு இவர்கள் மனித உணர்வுகளைக் கொண்டவர்களுமல்ல.. பதவி வெறியும் இனவெறியும் கொண்ட இவர்களின் மீதான மன்னிப்புச் சபையின் குற்றச்சாட்டு உலகளாவிய ரீதியில் இவர்களின் சுயரூபத்தையும் கடந்தகாலங்களில் சிறிலங்காவில் அரச பயங்கரவாதத்தால் ஒடுக்கப்பட்டு அழிக்கப்பட்ட தமிழீழ மக்களின் அவலத்தையும் எடுத்துக்காட்டியுள்ளது என்பதுதான் முக்கியமான விடயம்.

இதனடிப்படையில் தமிழ் மக்கள் உண்மையில் கடந்த நான்கு தசாப்த காலமாக ஒரு அரச பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தையே நடத்தி வந்துள்ளார்கள் என்ற உண்மையை உலகம் தெரிந்து கொண்டால் போதும்.

உலகளாவிய பயங்கரவாதம் குறித்து பெரிதாகப் பேசிவரும் நாடுகள் உலகளாவிய அரச பயங்கரவாத வலையமைப்பு குறித்தும் கவனத்தில் கொள்வது காலத்தின் கட்டாயமாகிவருகிறது. சர்வதேசப் பயங்கரவாதம் எனவும் பயங்கரவாதிகள் எனவும் இந்த நாடுகளால் வரையறுக்கப்படுவோர், சர்வதேச அரச பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தோர்களே என்பது தான் உண்மை.

இதனை வல்லாதிக்க சக்திகள் மறைக்க நினைக்கலாம். அதற்கான நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ளவும் முனையலாம். ஆனால் வரலாறு எதனையும் பதிவு செய்யாமல் விட்டதும் இல்லை, விடப்போவதுமில்லை, சர்வதேச மன்னிப்புச் சபையின் சிறிலங்காவின் பயங்கரவாத சனாதிபதிக்கும் இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் எதிரான குற்றச்சாட்டுக்களும் இத்தகைய வரலாற்றுப் பதிவுதான் என்பதில் ஐயமில்லை.

தூரனின் பார்வை

# குழு மட்டப் பேச்சுவார்த்தைகளும் நெடுந்தீவு தரையிறக்கமும்.

**தாய்லாந்தில்** நடைபெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் முடிவின் போது இருதரப்பினரும் பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக அமைந்தது என அறிக்கை வெளியிட்டு, அடுத்தகட்ட 'ஒஸ்லோ' விலான மிக முக்கிய சந்திப்புக்குறித்த அறிவிப்பையும் தெரிவித்தபோது, அமைதிகுறித்த நம்பிக்கையும் சமாதானம் விரும்பும் மக்களின் மனதில் மற்றொரு கட்டத்தை நோக்கிய முன்னெடுப்புக்கு தயாராகிறது.

வெளிநாட்டு பேச்சுக்களும் அதன்போது எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கும் அமைய உள்நாட்டில் நிலைமைகளை சீரமைக்கவும், மக்களின் இயல்பு வாழ்வை மேம்படுத்தவும், புனர்வாழ்வு , புனரமைப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும். இருதரப்பு பாதுகாப்பு மற்றும் இராணுவ ரீதியிலான பிரச்சினைகளை சுமூகமாக பேசித்தீர்க்கவும் அமைக்கப்பட்ட பல்வேறு குழுக்களின் சந்திப்புகள் நிகழத் தொடங்கியுள்ளன.

இக்குழுமட்டச் சந்திப்பின் போதான கலந்துரையாடல்களில் மிக முக்கியமான தமிழ் மக்களின் மீள் குடியேற்றம், இராணுவ அச்சுறுத்தல் அற்ற சூழலிலான அவர்களின் இயல்பு வாழ்வை மேம்படுத்தல், அதற்கான உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரிலான பாரிய இராணுவ ஆக்கிரமிப்புப்பகுதிகளில் விலகிக் கொள்ளப்படுதல் போன்ற பிரதான விடயங்களில் நம்பிக்கை ஊட்டக் கூடிய வகையிலான முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை என்பது ஏமாற்றமளிக்கும் விடயமாகவே உள்ளது.

வெறுமனே சந்திப்பதும் கைகுலுக்கிக்கொள்வதும் முடிவுகள் எதனையும் எட்டாது கலந்துரையாடல்களை முடித்துக் கொள்வதும் காலத்தைக் கடத்தும் ஒரு நடவடிக்கையாகவே இருக்கும்.

புரிந்துணர்வும், விட்டுக் கொடுத்தலும், ஆத்மாத்தமாகவே அமைதியிலும், சமாதானத்திலும் நம்பிக்கை கொண்டவர்களின் பிரச்சினைகளைச் சமூகமாக தீர்ப்பதில் விருப்பார்வம் கொண்டவர்களின் ஆதார பலமாக இருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் மக்களின் நன்மை, அவர்களின் எதிர்கால வாழ்வு, அவர்களின் வாழ்வியல் சுதந்திரத்திற்கான உத்திரவாதம் ஆகிய இவற்றின் அடிப்படையிலேயே உயர் பாதுகாப்பு வலயம், மீள்குடியேற்றம் போன்ற விடயங்களில் மிகவும் அக்கறை கொண்டவர்களாக உள்ளனர்.

மக்களின் -அச்சுறுத்தல்களும், அவமதிப்புகளுமற்ற இயல்பு வாழ்வை வழங்க அதனை உறுதி செய்ய பின்வாங்கும் சமாதானம் அர்த்தமற்ற ஒன்றேயாகும்.

இங்கே விட்டுக்கொடுத்தல் என்பதை பின்னடைவாகவோ, தோல்வியாகவோ அல்லது கௌரவக் குறைவாகவோ தமது சுயபாதுகாப்புக்கான அச்சுறுத்தலாகவோ இராணுவத்தரப்பினர் கருதுவார்களேயானால் அவர்கள் சமாதானம் பற்றிய இலக்கு அரசின் நகர்வுகளுடன் இணைந்து செயற்படும் புரிந்துணர்வு கொண்டவர்களாக இல்லை என்பதே அர்த்தமாகும்.

இந்தஅரசு -இராணுவப் புரிந்துணர்வு அற்ற நிலையானது சமாதானத்தை ஒரு தொலைதூரக் கனவாக நிரந்தரமாக்கிவிடும்.

எப்போதுமே பேச்சுவார்த்தைகளின்போது பாதிப்புற்றோரால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளின் நியாயத்தன்மைகளைப் புறந்தள்ளி அல்லது புரிந்து கொள்ள மறுத்து தமது சுயஅபிலாசைகளை அல்லது தமது உயரதிகாரிகளின் இலக்குகளைப் பாதுகாக்கும் நோக்குடன் கலந்து கொள்ளும் அரச தரப்பினர் ஒருபோதுமே சமாதானத்தளத்தில் காலூன்றி உறுதியாக நின்றதில்லை.

இத்தகையோரின் வறட்டுக் கொள்கைகளும் பிடிவாதங் களும் தான் பல பேச்சுவார்த்தைகள் தோல்வியடையக் காரணிகளாகியுள்ளன. யாழ்குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது சம்பந்தமாகவும் மக்களை மீளக் குடியமர்த்துவது சம்பந்தமா கவும் எந்த முடிவும் எட்டப்பட வில்லை. கடற்றொழிலாளர்கள் தொழிலை மேம்படுத்த கடற்பரப்புக் களில் மேலும் அனுமதிகள் வழங்கப்படவில்லை. மொத்தத்தில் இந்தப்பேச்சுக்கள் திருப்திகரமாக அமையவில்லை.

இவ்வாறு முகமாலையில் 16-11-2002அன்று அரச தரப்பும் விடுதலைப்புலிகளும் சந்தித்து மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் பின் செய்தியாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட விடுதலைப் புலிகளின் வடபகுதிக்கான கட்டளைத்தளபதி கேணல் தீபன் கூறியுள்ளமையானது மிகவும் முக்கியத்துவம்மிக்க பிரச்சினைகளில் முடிவுகள் எதனையும் எட்டும் நிலைக்கு அரசு தயாராக இல்லை. அல்லது பிரச்சினைகளை இழுத்தடிக்கவே அரசு மற்றும் இராணுவத் தரப்பு விரும்புகிறது என்பதையே வெளிக்காட்டுவதாக உள்ளது.

இராணுவத் தரப்பினர் இதுவிடயத்தில்தமது சுய விருப்புக்களை,நாட்டின் பாதுகாப்பு என்ற அடிப்படையில் மறைத்துச் செயற்பட முனைகின்றனர் என்பதில் ஐயமில்லை. மக்களின் பாதுகாப்பு என்றவிடயம் அவர்களால் முற்று முழுதாக புறக்கணிக்கப்படுவதாகவே உள்ளது.

எல்லாவற்றிலும் மேலாக சிறிலங்காவின் பாதுகாப்பு கட்டமைப்பு என்ற பெயரிலான இராணுவ இயந்திரத்தின் இயக்குநர் யார் என்ற போட்டி இராணுவத்தின் அரச கட்டுப்பாட்டுக்குள்ளான செயற்பாட்டை இழக்கவைத்தள்ள நிலையில், இராணுவத்தரப்பு அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சர் மாரப்பனவின் உத்தரவுகளுக்கு அமைய நடப்பதா அல்லது முப்படைத் தளபதிகளான சனாதிபதி சந்திரிகாவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதா என்ற குழப்ப நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

எதுவானாலும் சேவைநீடிப்பு, பதவியுயர்வு வழங்கல், இடமாற்ற உத்தரவுகளுக்கு அங்கீகாரம் வழங்கல் போன்ற அனைத்தும் சந்திரிகாவின் அதிகார எல்லைக்குள் அமைந்திருப்பதால் சனாதிபதியின் அபிலாசைகளுக்கு, கட்டளைகளுக்கு முன்னுரிமை கொடுத்து தலையசைக்க வேண்டிய நிலை இராணுவ அதிகாரிகளுக்கு இருக்கவே செய்கிறது.

சந்திரிகாவோ சமாதான நகர்வுகளை நம்பிக்கையின்மையுடன் நிராகரிப்பவர். இராணுவ வெற்றிகளை மட்டும் நம்பி நிற்பவர். எனவே அவரின் கட்டளைக் குச் செவிசாய்க்க வேண்டிய நிலையில் உள்ள படைத்தரப்பினர் எப்படி நடந்துகொள்வார்கள் என்பதை சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

சந்திரிகாவின் இராணு அதிகாரங்கள் பறிக்கப்படாத - அல்லது மட்டுப்படுத்தப்படாத நிலையில் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனவோ அல்லது அவ்வமைச்சின் செயலாளர் ஒஸ்ரின்பெர்னாண்டவோ எடுக்கும் எந்த முடிவும், இடும் எந்தக் கட்டளையும் அர்த்தமுள்ளவைகளாக இருக்குமென எவரும் நம்பமுடியாது.

இந்த நிலையில் கேணல் தீபன் அவர்கள் குறிப்பிட்ட முக்கிய விடங்களில் குழுநிலைக் கூட்டத்தில் கலந்துகொண்ட அரச தரப்பு பிரதிநிதிகளால் முடிவு எதுவும் - தீர்மானம் எதுவும் - எடுக்கமுடியவில்லை என்ற விடயம் ஆச்சரியமூட்டுவதாக இல்லை.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான சகல முடிவுகளும் , தீர்மானங்களும் தன்னாலேயே எடுக்கப் படுமெனச் சந்திரிகாவின் நிறைவேற்று அதிகார ஆணவக் குரல் பகிரங்கமாகவே ஒலித்துவருவதைக் கவனத்தில் கொள்வது அவசியமாகும். சந்திரிகா-ரணில் அதிகாரப் போட்டிக்கு ஒரு முடிவு தீர்க்கமாக எட்டப்படாத வரை இழுபறி நிலையில் உள்ள அதிகார வலுவற்ற அரசால் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க மட்டும்தான் முடியுமேயொழிய அதனால் எந்தத் தீர்வு குறித்தும் முடிவெடுக்க முடியாது என்பது தான் இன்றைய சிறிலங்காவின் அரசியல் யதார்த்தமாகும்.

-நெடுந்தீவு தரையிறக்கம்-

நெடுந்தீவு மக்களால் 'துண்டைக் காணோம் துணியைக்காணோம்' என ஓட ஓட விரட்டப்பட்ட ஈ.பி.டி.பி. யினரை அவர்களின் 'சகா'க்களான சிறிலங்காக் கடற்படையினர் மீண்டும் இழுத்துக்கொண்டு வந்து இரவோடு இரவாக நெடுந்தீவுக் கரையில் தரையிறக்கம்செய்து ஈ.பி.டி.பியினர் மீதான தமது விசுவாசத்தையும் நன்றியையும் காட்டியுள்ளனர்.

கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்திற்கும் அதிகமான காலம் கடற்படையினரின் ஆதரவில் ஈ.பி.டி. பியினரும், ஈ.பி.டி.பி.யினரின் அனுசரணையுடன் கடற்படையினரும் நெடுந்தீவில் அடித்த கொட்டம் பற்றியும், மேற்கொண்ட 'அட்டகாசம்' பற்றியும் தீவுப்பகுதி மக்கள் கதை கதையாகச் சொல்லுவார்கள்.

இப்போது மீண்டும் கடற்படையினரின் இந்தத் தரையிறக்கம் ஈ.பி.டி.பி.யினர் மீதான மக்களின் வெறுப்பினை மீண்டும் ஒருமுறை

(15 பக்கம் பார்க்க )

எளிய தூய்மையான, வாழ்வில் தான் உண்மைச் சிறப்பு அடங்கியுள்ளது. - ஸரதுஸ்திரர்

# கடன் வாங்கிச் சமாதானம்

**இன்னும்** மூன்று தினங்களில் ஒஸ்லோவில் இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் மினி மாநாடு ஒன்று நடக்க இருக்கிறது.

இலங்கைத் தீவுக்கான இதுவரையிலுமான எல்லா உதவி வழங்கும் நாடுகளின் கூட்டங்களோடும் ஒப்பிடுகையில் இது வித்தியாசமானது. அசாதாரணமானது.

இதற்கு முந்திய இத்தகைய எல்லாக் கூட்டங்களின் போதும் தரப்பட்ட நிதி ஏதோ ஒரு விதத்தில் யுத்தத்திற்கே திருப்பப் பட்டது.

அப்பொழுதெல்லாம் உதவி வழங்கும் நாடுகள் யுத்தமல்லாத வழிவகைகளைப் பற்றிப் பிரஸ்தாபித்தபோதிலும் அல்லது நிபந்தனைகளை விதித்த போதிலும் நடைமுறையில் வழங்கப்பட்ட நிதியில் பெரும் பகுதி யுத்தத்திலேயே வீணாகி யது. இது உதவி வழங்கும் நாடுகளுக்கும் தெரியும்.

ஆனால் இம்முறை ஒஸ்லோவில் நடக்க இருப்பது முழுக்க முழுக்க சமாதானத்துக்கான நிதிவழங்கும் நோக்கிலான ஒரு சந்திப்பு.

இதை வேண்டுமானால் சமாதானத்துக்கான சன்மானம் என்றும் கூறலாம்.

இதுவரை காலமும் இலங்கைத்தீவு கடன் வாங்கி யுத்தம் செய்தது. இப்பொழுது கடன் வாங்கிச்சமாதானம் செய்கிறது.

அதோடு இன்னுமொன்று முக்கியமானது - இதற்கு முந்திய இத்தகைய எல்லாக் கூட்டங்களின் போதும் இலங்கைத்தீவிலிருந்து அரச தரப்புப் பிரதிநிதிகளே கலந்து கொள்வதுண்டு. ஆனால் இம்முறை புலிகளின் தரப்புப் பிரதிநிதிகளும் கலந்து கொள்கிறார்கள்.

இப்படிப் பார்த்தால் ஒஸ்லோச் சந்திப்பு இலங்கைத் தீவில் இரண்டு அதிகாரமையங்கள் இருப்பதை - இரண்டு தலைநகரங்கள் இருப்பதை மறைமுகமாக ஒப்புக் கொள்கிறது என்றும் எடுக்கலாம்.

தமிழர்களோடு சேர்ந்து போய்க் கேட்டால்தான் இனிமேல் கடன் கிடைக்கும் என்ற ஒரு நிலைக்கு இலங்கைத் தீவின் அரசியல் வந்துவிட்டது.

தவிர - அதிகாரப் பகிர்விலும் இது ஒரு பிரகாசமான தொடக்கம்.

இங்கே நிதியைக் கையாளும் அதிகாரம் தமிழர்களுக்குத் தரப்பட்டுள்ளது. இது முன்பு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாணசபைகளில் உள்ளதைவிடவும் முன்னேற்றகரமான ஓரம்சம்.

சிலசமயம் மாகாணசபைகளை உருவாக்குவதற்கான 13 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் ஒரு இடைக்கால நிர்வாக சபையை உருவாக்க சனாதிபதி சம்மதித்திருந்தாலும் இப்படியொரு அதிகாரம் தமிழர்களுக்கு கிடைத்திருக்காது என்று ஈழப்போரைத் தொடர்ச்சியாக அவதானித்துவரும் ஒரு விமர்சகர் கூறினார்.

பெறப்படும் நிதி குறைநிரப்புப் பிரேரணை என்ற வடிவத்தில் பாராளுமன்றத்துக்கு பதில் கூறத்தக்கதாக மாற்றப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரச தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இம்மாதம் ஆறாந் திகதி உறுதியளித்திருப்பதாக ஒரு தகவல் கூறுகிறது.

மாறாக - மேற்படி நிதி ஏதாவது ஒரு பொறுப்பு வாய்ந்த உதவி வழங்கும் நாட்டிடம் கொடுக்கப்படும் என்றும் அந்த நாடு ஏற்கனவே இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் ஒப்புக்கொள்ளப்பட்டபடி சம்பந்தப்பட்ட உபகுழு அடையாளங்காணும் விசயங்களுக்கு நிதியை வழங்கும் என்றும் இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் பின் வெளியான சில செய்திகள் கூறுகின்றன.



சில சமயம் சமாதானம் முறிக்கப்பட்டால் மேற்படி நிதி அரசுக்கு மட்டுமே போய்ச் சேர்ந்துவிடாதபடி தடுக்கும் ஏற்பாடுகள் ஏதும் செய்யப்பட்டுள்ளனவா இல்லையா போன்ற விபரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்பதை ஈழப்போரைத் தொடர்ச்சியாக அவதானித்து வரும் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் அரசறிவியற்துறையைச் சேர்ந்த கலாநிதி நவரட்ணெ பண்டார கூறுகிறார் இம்முறை சமாதானத்தால் லாபமடையப் போவது அரசுமல்ல புலிகளுமல்ல என்று. பூகோள வர்த்தகத்தை ஆளும் சக்திகளே இந்தச் சமாதான முயற்சிகளால் அதிகம் லாபமடைவதாகவும் இதில் நட்டமடையப் போவது அப்பாவிகளான சாதாரண சனங்களே என்றுமவர் மேலும் கூறுகிறார்.

ஆனால் எது எவ்வாறாயினும் ஒஸ்லோ-மாநாடு புலிகளின் அந்தஸ்தை சர்வதேச அளவில் உயர்த்தப்போகிறது. கடந்த 10 மாதகால சமாதான முயற்சிகளின் பேறாய் சர்வதேச அளவில் உயர்ந்துவரும் புலிகளின் அந்தஸ்தைப் பொறுத்தவரை இனி ஒரு புதியகட்டம் ஒஸ்லோவில் ஆரம்பமாகிறது.

அங்கே ரணிலை பாலசிங்கம் சந்திக்கப் போகிறார். அமெரிக்காவின் இணையமைச்சர் ஆமிரேஜையும் ஏனைய சுமார் 20 நாடுகளின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளையும் பாலசிங்கம் சந்திக்கப்போகிறார். இந்தியாவின் பிரதி

**நிலாந்தன்**

நிதிகளையும் அவர் சந்திப்பார். ரஜீவ் கொலைக்குப் பின் இந்தியத்தரப்புப் பிரதிநிதிகளும் புலிகளின் பிரதிநிதிகளும் நேருக்குநேர் சந்திக்கப் போகிறார்கள்.

அரச தரப்புப் பிரதிநிதிகளுடன் தமிழர்களின் பிரதிநிதிகளும் சரிசமமாக சமபங்காளிகளாக ஒரு சர்வதேச அரங்கில் தோன்றப் போவதும் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளுடன் உரையாடப் போவதும் இலங்கைத் தீவின் நவீன வரலாற்றைப் பொறுத்தவரை முன்னெப்பொழுதும் நடந்திராத ஒன்று.

குறிப்பாக ஆமிரேஜ் யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது அருகிலிருந்த வன்னிக்கு வருவதையும் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திப்பதையும் தவிர்த்தார்.

ஆனால் ஒஸ்லோவில் அவர் கலாநிதி பாலசிங்கத்தைச் சந்திக்கப் போகிறார்.

இப்படியொரு மாநாடு கூட்டப்படுவதற்கு பின்னணியில்

> அரச தரப்புப் பிரதிநிதிகளுடன் தமிழர்களின் பிரதிநிதிகளும் சரிசமமாக சமபங்காளிகளாக ஒரு சர்வதேச அரங்கில் தோன்றப் போவதும் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளுடன் உரையாடப் போவதும் இலங்கைத் தீவின் நவீன வரலாற்றைப் பொறுத்தவரை முன்னெப்பொழுதும் நடந்திராத ஒன்று.



அமெரிக்காவே இருப்பதாக ஒரு ஊகம் கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் காணப்படுகிறது.

ஆமிரேஜ் யாழ்ப்பாணத்துக்கு வந்துவிட்டுத் திரும்பிச்செல்லும் போது இதற்கான சமிக்ஞைகளைக் காட்டிவிட்டுச் சென்றார் என்றும் இதுவிசயத்தில் யப்பான் உடனடியாகக் களத்திலிறங்கியது அவருடைய தூண்டுதலின் பெயராலேயே என்றும் மேற்படி அரசியல் வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதெல்லாம் எதைக்காட்டுகிறது என்றால் - ஈழப்போர் தொடர்பாக கடந்த பல ஆண்டுகளாக மேற்குலகில் நிலவிவந்த கருத்துருவங்கள் மாறத் தொடங்கிவிட்டன என்பதையே.

இதை இன்னும் சரியாக விளங்கிக் கொள்வதற்கு நாம் கிட்டத்தட்ட பத்தாண்டுகள் பின்னோக்கிச் சென்று பார்க்கவேண்டும்.

புலிகளுக்கும் இந்தியப் படைகளுக்குமிடையில் யுத்தம் வெடித்த பின் புலிகள் படிப்படியாகத் தமது அலுவலகங்களை ஐரோப்பிய நாடுகளில் திறக்கத் தொடங்கினார்கள். குறிப்பாக 90 களின் முற்கூறில் எங்கெல்லாம் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்தார்களோ அங்கெல்லாம் புலிகளின் அலுவலகங்கள் திறக்கப்பட்டன.

இது அந்நாட்களில் இலங்கை அரசாங்கத்துக்கு ஒரு பெரிய சவாலாகக் கருதப்பட்டது.

ஆனால் ரஜீவ் காந்தி கொல்லப்பட்டதையடுத்து இந்தியா முதலில் புலிகளைத் தடை செய்தது. இந்தப் பின்னணியில் லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச அளவில் புலிகளைச் சுற்றி வளைக்கும் வித்தத்தில் ஒரு பிரசார மற்றும் ராஜதந்திர யுத்தத்தைத் தொடங்கினார்.

முதலில் அமெரிக்காவும் பிறகு பிரிட்டனுமாகத் தொடர்ந்து கனடா ஒஸ்ரேலியா, மலேசியா போன்ற நாடுகளில் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டது. பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் புலிகள் இயக்கத்தின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப் பட்டன. இந்நாடுகளில் எல்லாம் புலிகளின் அலுவலகங்கள் மூடப்பட்டன. வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன.

சர்வதேச அளவில் புலிகளைத் தனிமைப்படுத்துவதில் கதிர்காமர் கணிசமான அளவு வெற்றியும் பெற்றார்.

ஆனால் இப்பொழுது நிலைமை தலைகீழாகிவிட்டது. எந்த நாடுகள் புலிகளைத் தடைசெய்தனவோ அந்த நாடுகளே மாநாடு கூட்டி சமாதானத்துக்காக நிதி உதவி செய்யப்போகின்றன. குறிப்பாக இதில் இந்தியாவும் கலந்து கொள்வது என்பது ஒரு மேலதிக வெற்றியே.

புலிகளைத் தனிமைப்படுத்தி அழிக்கும் வியூகங்களில் தாம் இதுவரை வழங்கிய நிதி உதவிகள் யாவும் வீணாகியது கண்டு களைத்துப் போன மேற்படி நாடுகள் ஒரு புதிய அணுகுமுறைக்கு வந்து விட்டது போலத் தோன்றுகின்றது.

அதாவது ஈழப்போரைத் தனிமைப்படுத்துவதற்குப் பதிலாக அதை சர்வதேச மயப்படுத்திவிடுவதன் மூலம் புலிகளை சர்வதேச சமூகத்திற்குப் பதில் கூறும் ஒரு அமைப்பாக மாற்றிவிடலாம் என்று அவர்கள் நம்புவது போலத் தெரிகிறது.காலப் போக்கில் புலிகளை அதிகம் ஐரோப்பிய மயப்பட்ட அமைப்பாக மாற்றிவிடலாம் என்றும் அவர்கள் நம்புவச [illegible] போலத் தெரிகிறது.

[illegible]ளிநாடுகளில் பெருகி வரும் [illegible]ம் பெயர்ந்த தமிழர்களின் தொகையும் இதற்கொரு காரணம்.

தற்சமயம் - கிட்டத்தட்ட ஏழரை லட்சம் தழிழர்கள் உலகமெல்லாம் புலம் பெயர்ந்து வாழ்கிறார்கள். இத்தொகை பத்து லட்சத்து ஏழாயிரம் வரை வரும் என்றொரு தகவலும் உண்டு.

எதுவோ - மொத்த சனத்தொகையில் சுமார் மூன்றில் ஒரு பகுதிக்கும் கூடுதலான தமிழர்கள் இப்பொழுது அமெரிக்க ஐரோப்பிய ஒஸ்ரேலிக் கண்டங்களில் வசிக்கிறார்கள்.

இப்பொழுது ஈழப்போரின் நிதிப்பின் தளம் இந்தப் புலம் பெயர்ந்த தமிழர்களே என்று தமிழ்நெற்றைச் சேர்ந்த ஒரு பத்திரிகையாளர் கூறுகிறார்.

இது எதைக் காட்டுகிறது என்றால் - ஈழத்தமிழர்கள் அதிகமதிகம் ஐரோப்பிய மயப்பட்டும் அமெரிக்க மயப்பட்டும் வருகிறார்கள் என்பதையே. அதோடு இம்முறை சமாதானம் எவ்வளவு தூரத்திற்கு ஐரோப்பியமயப்பட்டதாகவும் அமெரிக்கமயப்பட்டதாகவும் காணப்படுகிறது என்பதையும்.

இதுதான் உண்மை.

இம்முறை சமாதானம் அமெரிக்க ஐரோப்பிய ஆசீர்வாதங்களுடன் வருகிறது.

அமெரிக்க ஐரோப்பிய அரசுகளின் அபிலாசைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு அனுசரணையாளராகவே இங்கு நோர்வே சமாதானம் செய்து வருகிறது.

இந்நிலையில் நடக்கவிருக்கும் ஒஸ்லோ மினி மாநாடு சில செய்திகளைத் தெளிவாகக் கூறுகிறது.

முதலாவது - இலங்கைத் தீவுக்கு சமாதானத்தைத் தவிர வேறெந்த தெரிவையும் விட்டு வைக்க அவர்கள் தயாரில்லை என்பது.

மற்றது - சமாதானத்தின் சமபங்காளிகளாயுள்ள விடுதலைப் புலிகளை எதுவரை அவர்கள் அங்கீகரிக்கத் தயார் என்பது.

மற்றது - சமாதானத்தைக் குழப்புவது என்பதை தனது அரசியலமைப்புக் கடமைகளில் ஒன்றாகக் கருதும் சனாதிபதி சந்திரிகா சர்வதேச அளவில் தனித்துவிடப்பட நேரிடும் என்பது. ✱

# 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' ஈழத்தமிழர்கள்முன் வைத்துள்ள பணிகள். ——— 2



## போர்ச்சூழல் பிரசவித்துள்ள புதிய கலை,இலக்கிய கர்த்தாக்களும் — மரபுகளும்.

**'மானுடத்தின்** தமிழ்க்கூடல்' எய்தியுள்ள இலக்குகளும்,அதற்கான பங்கை ஆற்றியவர்களது சாதனைகளும் ஒருபுறமிருக்க, இந்த மாநாடு ஈழத் தமிழ்மக்கள் மத்தியில் எழுப்பிச் சென்றுள்ள கேள்விகள்,அவர்களுக்கு விட்டுச் சென்றுள்ள பணிகள்பற்றிச் சிந்திப்பதே இக்கட்டுரையின் பிரதான நோக்கம். ஈழத் தமிழர்களுடைய இன்றைய நிலை,17,648 மாவீரர்களின் உயிர்த்தியாகங்களாலும்,இன்னும் ஆயிரக்கணக்கான போராளிகள் சிந்திய குருதியினாலும்,அத்தோடு கூடவே இன்னும் ஆயிரமாயிரமாய் தமிழ் மக்கள் சிந்திய இரத்தம்,இழந்த உயிர்களால் எய்தப்பட்டதாகும். எனவே இத்துணை பெறுமதிவாய்ந்த விலைகளைக் கொடுத்து நாம் இப்போது எய்தியுள்ள இன்றைய நிலையை,எவ்வாறு எதிர்காலத்தை நோக்கி நகர்த்தப்போகிறோம் என்பதுதான் எமது பிரதான சிந்திப்பாக இருக்கவேண்டியதாகிறது.

ஈழத் தமிழர்களுடைய விடுதலைப் போராட்டம் என்பது கடந்த இருதசாப்தங்களுக்கு மேலாக முன்னெடுக்கப்பட்டுவருகின்ற ஒன்று. ஆனாலும், கடந்த சுமார் 6-7ஆண்டுகால ஈழப்போராட்டம், பிரதானமாக வன்னியில் மையங்கொண்டது. 1995இல் யாழ் குடாநாட்டில் மேற் கொள்ளப்பட்ட பாரிய படைநடவடிக்கையைத் தொடர்ந்து ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வும்,புலிகளது தற்காலிகமான வன்னிநோக்கிய நகர்வும்,போரை வன்னிக்கு நகர்த்தியது.அதன்பின்னர் வன்னிமண்ணில் நடைபெற்ற போராட்டமும்,அதில் தமிழர்கள் பெற்ற வெற்றியுமே இன்று தமிழர்களை இந்தளவுக்கு உயர்த்திவிட்டுள்ளது.(இதனர்த்தம் வன்னிக்கு வெளியே போர் நடக்கவில்லை என்பதல்ல. ஆனால்,வன்னிதான் பிரதான தளமாக இருந்தது. அதுதான் இறுதி வெற்றிதோல்விகளைத் தீர்மானித்தது என்றவகையில் முக்கியத்துவம் பெறுகிறது).

புலிகளை முற்றாக அழித்தொழிப்பதாகக் கூறி 'ஜயசிக்குறு'என்ற பெயரில் சிறிலங்கா அரசு தொடுத்த ஆக்கிரமிப்பு முற்றுகைப் போர் வன்னியில் முறியடிக்கப்பட்டிராவிட்டால், தமிழர்களுடைய இன்றைய நிலை கேள்விக் குறியானதே.ஆனால் இந்த வெற்றியை ஈட்டுவதற்கு வன்னிமண்ணில் புலிகளும், மக்களும் கொடுத்த விலைகள் மதிப்பிட முடியாதவை. உண்ண உணவில்லை. காய்ச்சலுக்குப் பனடோலும் கிடையாது. பட்டினியாலும், மலேரியாவினாலும் மக்கள் சதா மடிந்து கொண்டேயிருந்தனர். ஜயசிக்குறு ஏறத்தாள வன்னியை முழு முற்றுகைக்குட் படுத்தியபோது, வன்னி, உலகின் எந்தத் தேசமும் அடைந்திராத இழிநிலையை அடைந்தது.எந்த வெளியுத விகளும் இன்றி, வெளியாதரவும் இன்றி இந்தப் போரை வன்னிமண் எதிர்கொண்டது.இந்தப் போரில் வெற்றிபெறுவதைத் தவிர,ஈழத் தமிழ் மக்களுக்கு வேறு மார்க்கமே கிடையாது என்ற நிலையில் அந்தப் பொறுப்பை வன்னிமண் எடுத்துக்கொண்டது. அதில் வெற்றியும் கண்டது.

இவ்வாறு வேறெந்த வளங்களோ,பலங்களோ இன்றித், தனது சொந்த வளங்களையும் ஆளுமையையும் மட்டும் நம்பி இந்தப் போரை எதிர்கொண்டு தமிழர்கள் பெற்ற இந்த வெற்றி தமிழர்களுக்குப் பல விடயங்களைச் கற்றுத்தந்துள்ளது. போரியல் பரிமாணத்தில் தமிழர்கள் ஈட்டிய இந்த உலகம் வியக்கும் சாதனை அதற்கப்பாலும் விரிவுபடுத்தப்படுவது அவசியமாகிறது.தமிழர்களது சொந்தப் பலம் பற்றிய ஒரு நம்பிக்கையை அது எல்லா விடயங்களிலும் கட்டியெழுப்பியிருக்கிறது. மண்ணுக்கேயுரிய வாழ்க்கைமுறையையும், கண்டுபிடிப்புக்களையும்,அதன் வழியேயான சிந்தனைகளையும் அது தமிழ்மக்களுக்குக் கற்றுத்தந்திருக்கிறது.இது வேறெவரும் தமிழ்மக்களுக்குக் கற்றுத்தந்ததல்ல.எந்தப் புத்தகமும் சொல்லித்தந்ததல்ல.எந்த ஒரு ஆக்கிரமிப்பு நாடும் விட்டுச் சென்றுள்ள சொத்தும் அல்ல. இது, தமிழர்கள் தாமே கண்டுபிடித்த, அவர்களுக்கேயுரிய ஒன்று.

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தமது வரலாற்றில் சிறிலங்கா அரசின் ஒடுக்குமுறையை மட்டும் எதிர்கொண்டவர்களல்ல. அதற்கு முன்னர் ஆங்கிலேயர், ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், ஏன் அவ்வப்போது இந்த மண்ணை ஆக்கிரமிப்புச் செய்த இந்திய மன்னர்கள் என தொடர்ச்சியாக அவர்கள் ஆக்கிரமிப்புக்களுக்கு உள்ளாகி வந்துள்ளார்கள். இந்த ஆக்கிரமிப்பாளர்களின் ஆட்சிக் காலங்களில், ஈழத்தவர்கள் தம்முடைய பலவற்றையும் தொலைத் துள்ளார்கள். அவர்களுடைய கல்வி, அவர்களுடைய கலை,அவர்களுடைய பண்பாடு என எல்லாமே மாற்றங்களுக் குள்ளாகிவிட்டன. குறிப்பாக,ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஆட்சிக்காலத்தில் அவர்கள் முழுக்க முழுக்க ஆங்கில ஆட்சியாளர்களின் நலன்களை நிறைவுசெய்யும் பண்டப் பொருட்களாக்கப்பட்டுவிட்டார்கள்.ஆங்கில ஆட்சியதிகாரத்தை,அவர்களுக்கு விசுவாசமாக

**——— ருஷாங்கன்.**

இந்த மண்ணில் நிலைநிறுத்தக்கூடிய அதிகாரிகளாக அதிகம் தமிழ் மக்களே இருந்து அடிமைச் சேவகம் புரிந்துள்ளனர்.இந்தத் தொழில் தேவைக்காக ஈழத் தமிழர்கள்,அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தமிழர்கள் ஆங்கிலத்தையும்,அதன்வழியேயான மேலைத்தேயச் சிந்தனையையும் தம்முள் உள்வாங்கிக் கொண்டுவிட்டனர். இன்று வரையிலும் இந்த நாட்டில் இருக்கும் ஆங்கில ஏகாதிபத்திய நலன்களை மையப்படுத்தும் கல்விமுறைக்கூடாகவே கற்றவர்கள் என்று சொல்லப்படுவோர் உருவாக்கப்பட்டு வருவதால், தவிர்க்கமுடியாதபடி இந்தச் சிந்தனை மரபிலிருந்து விடுபடமுடியாத ஒரு நிலை,ஆங்கில ஆதிக்கத்தின்கீழிருந்த அனேக நாட்டு மக்கள் போல், இந்நாட்டு மக்களுக்கும் உண்டு.

ஆனால் ஈழவிடுதலைப் போராட்டம் எமக்கு இத்தகைய அனைத்து அடிமைச் சிந்தனை மரபுகளிலிருந்தும் விடுதலைபெறும் ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளது.அவ்வாறு அமைந்ததாலேயே நாம் இன்று தனித்து சிறிலங்கா அரச ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டமும், அதன் பலாபலன்களும் பற்றிமட்டுமன்றி, மானுட விடுதலை நோக்கிய திசையில் நாம் பயணித்துள்ள தூரம் பற்றியும், இன்னும் பயணிக்கவேண்டிய நெடுந்தொலைவு பற்றியும் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளோம். அதைத்தான் நாம் மானுடத்தின் தமிழ்க்கூடலில் செய்திருக்கவேண்டும்.ஆனால் அதைநாம் செய்திருக்கிறோமா என்பதையும் பார்க்க வேண்டியிருக்கிறது. இது யாரையும் குற்றஞ்சாட்டுவதற்கோ, குறைகூறுவதற்கோ, அல்லது மேதாவித்தனத்தைக் காட்டும் நோக்கிலோ சொல்லப்படும் ஒரு விடயமல்ல. பரஸ்பர கலந்துரையாடல்களையும், விவாதங்களையும் வேண்டிநிற்கும் ஒரு காலகட்டத்தில் இன்றுநாம் நிற்கிறோம்.

மானுடத்தின் தமிழ்க்கூடலில் ஆரம்பநாள் நிகழ்வில் சிறப்புரையாற்றிய, கவிஞரும், ஓவியரும், பத்தி எழுத்தாளருமான நிலாந்தன் அவர்கள் முன்வைத்த சில கருத்துக்களுடன், தமிழ்க்கூடலுக்குள் பிரவேசிக்கலாம் என்றிருக்கிறேன். அவர் முதலிலேயே குறிப்பிட்ட ஒரு விடயம், "ஆறாண்டுகால வனவாசத்தை முடித்துக்கொண்டு இன்று தமிழன் நகருக்குள் பிரவேசித்திருக்கிறான்" என்பது. உண்மை, வன்னிக்குள் வனவாசம் புரிந்தவர்கள் நகர்வந்துள்ளார்கள். இவர்கள் வரவுக்காகக் காத்திருந்த பலர் தமது அஞ்ஞாதவாசத்தை முடித்துக்கொண்டு தாம் இவ்வளவுகாலமும் காத்திருந்தவர்களின் வரவுடன் தம்மை இணைத்துக் கொண்டுள்ளார்கள். இந்த இணைவின் பிரகடனமாகவே 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' அமைந்திருந்தது. ஆனால, ஈழ விடுதலைப் போராட்டத்தில், தமிழ் மண்ணின் ஒரு பகுதி பெற்ற அனுபவங்களும், அதன் மூலம் பெறப்பட்ட பட்டறிவும் பரவலடைந்திராத, அதுபற்றி அறிந்து கொள்ளமுயலாத ஒரு சூழலும் நம்மத்தியில் நிலவுவதை 'கூடல்' உணர்த்திநின்றது.

இந்தப் போர்-போராட்டம் எமக்குத் தந்த அனுபவங்கள் பற்றி நிலாந்தன் அழகாக விளக்கியிருந்தார். போரிலக்கியங்கள் பற்றிய சில குறிப்புக்களை அடியாகக் கொண்டே சிறப்புரையாற்றிய அவர், கலை இலக்கியத் தளத்தில் நாம் எய்தியிருக்கும் புதிய நிலையை தெளிவாகப் புலப்படுத்த முயன்றார். அவருடைய கருத்துக்களுடனிணைந்தே பயணிப்போம்.



நிலாந்தன்

"போர் பல பரிசோதனைக் களங்களைத் தோற்றுவித்திருக்கிறது. காலங்காலமாகப் பேணப்பட்டுவந்த மரபு,வழமைகள் யாவும் போரினால் உடைக்கப்பட்டுள்ளது.அல்லது தலைகீழாக மாற்றப்பட்டுள்ளது.ஏலவேயிருந்த நம்பிக்கைகள் குழப்பப்படுகின்ற இந்தச் சூழலில் புதியது எதுவும் தோற்றுவதற்கான ஒரு களம் திறக்கப்பட்டுள்ளது. "என்று, போர்-போராட்டம் எமக்குத் தந்துள்ள வாய்ப்புக்கள் பற்றிக் குறிப்பிடுகிறார் நிலாந்தன். இரண்டாம் உலகமகா யுத்தகால ஐரோப்பாவிலும், போராட்டங்கள் நடந்த ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் இதுவே நடந்துள்ளது என்பதை நிலாந்தன் அங்கு சுட்டிக்காட்டிப் பேசினார். விடுதலைப் போராட்ட காலச் சூழலில் இந்தியாவில் இருந்த இத்தகைய ஒரு நிலையை மிக அதிகளவில் கையாண்டவராக, மகாகவி பாரதியாரை நிலாந்தன் குறிப்பிடுகிறார்.

தமிழ்ச் சூழலில் இவ்வாறு போரியல் இலக்கியங்கள் தோன்றிய காலகட்டங்கள் இரண்டு என்று குறிப்பிடும் நிலாந்தன்,அவற்றுள் ஒன்று பழந்தமிழ் இலக்கியங்கள் சுட்டும் காலம் என்கிறார்.ஆனால் இக்காலப்பகுதியில் நடைபெற்றது மன்னர்களுக்கிடையிலான ஆதிக்கப்போர், அல்லது நாகரிகங்களுக் கிடையேயான போரேயன்றி விடுதலைப் போராட்டம் அல்ல என்பதாலும், இதுபற்றி ஏலவே பல ஆய்வுகள் செய்யப்பட்டுவிட்டன என்பதாலும் அதனைத் தவிர்த்துவிடும் நிலாந்தன்,அடுத்து இரண்டாம் காலகட்டத்துக்கு வருகிறார்.

இரண்டாவதாக அவர் குறிப்பிடுவது ஈழப்போராட்டத்தை. இது வெறும் போர்அல்ல. தமிழர்கள் தாமே விரும்பி ஆரம்பித்த போரல்ல. அவர்கள்மீது திணிக்கப்பட்ட போர்.இதனை எதிர்கொண்டு அவர்கள் நடாத்திய போராட்டத்தின்வழி பிறந்ததே இன்றைய தமிழ்ப்போரியலக்கியம் என்கிறார் நிலாந்தன். இந்தச் சூழல் ஈழத்தமிழர்கள் மத்தியில் பல கவிஞர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், கலைஞர்களைத் தோற்றுவித்துள்ளமையை அவர் குறிப்பிட்டுக்கூறினார். இந்தப் போர்ச்சூழல்தான் ஓவியர் மாற்குவைக் கண்டுபிடித்தது என்பது அவருடைய விவாதம்.

"ஈழப்போர் திறந்துவிட்ட வழிகளுக்கூடாகத்தான் மாற்கு வெளிச்சத்துக்கு வந்தார்.மரபோவியங்கள் பற்றியிருந்த இறுக்கங்கள் தளர்ந்துபோயிருந்த, பலவீனப்பட்டுப்போயிருந்த ஒரு ஈழப்போர்ச் சூழலில் மாற்கு இலகுவாக வெளியில் வரக்கூடியதாக இருந்தது.ஈழப்போர்ச் சூழலில்தான் அவர் கண்டுபிடிக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்தன. "என போரிலக்கியம், கலை,இலக்கிய ஆக்க கர்த்தாக்களுக்கு வழங்கிநின்ற வாய்ப்பான சூழலை உதாரணத்துடன் விளக்குகிறார் நிலாந்தன்.

இந்திய அமைதிப்படைக் காலகட்டம்,அதற்கு முன்பின்னான காலகட்டங்கள் என மூன்றுகட்டங்களாகப் பிரிக்கப்படுகின்ற ஈழப் போராட்டக்காலகட்டங்கள்,அவ்வக் காலகட்டத்தின் தன்மைகளுக்கேற்ப பல ஆக்க இலக்கிய கர்த்தாக்களைத் தோற்றுவித்துள்ளது. இவற்றுள் மூன்றாவது காலகட்டம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி, படைக்கட்டுப் பாட்டுப் பகுதி என்ற இருபாகுபாடு களுக்கிடையில் கலைஇலக்கிய முயற்சி களுக்கான சூழலைத் தந்துநின்றது. இதில் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழிருந்த வன்னிக் களம்,அதன் நேரடிப் போரனுபவங்கள் காரணமாக பல புதிய அனுபவங்களைக் கலை இலக்கியச் சூழலுக்குத் தந்துள்ளது. இதனை, இந்த ஏழாண்டுகாலமும், புலிகளுடன் சேர்ந்து வனவாசம் புரிந்து, நகர்மீண்டிருந்த நிலாந்தனின் உரை பட்டவர்த்தனமாக நிரூபித்தது.

இந்தப் புதிய போரிலக்கியச் சூழலில்,இன்று எமது கலை இலக்கியச் சூழலில் நிலவுகின்ற 'சீரியஸ்' - ஜனரஞ்சகம் என்கின்ற பிளவுபற்றி நிலாந்தன் விரிவாக விவாதிக்கிறார். "மலையாள மொழிச்சூழல் போன்ற சில சூழல்களில் இந்த இடைவெளி மிகவும் குறைக்கப்பட்டுவிட்டதாகக் குறிப்பிடப்பட்டாலும், தமிழ்ச் சூழலில் இது மிகவும் பெரியதாக, விரோத மனப்பாங்குடையதாக, கொடூரமானதாகக் காணப் படுகின்றது" என்று குறிப்பிடுகிறார் நிலாந்தன். தமிழ் மக்கள் மத்தியிலிருக்கும் 'பொப்பியூலர் கல்ச்சர்' என்கின்ற ஜனரஞ்சக கலை இலக்கிய முயற்சிக்கு எதிரானதாக தன்னை நிலைநிறுத்த முனையும் 'சீரியஸ்' முயற்சிகள் சிறுசஞ்சிகைக் கலாசாரத்துக்குள் முடங்கிப் போயிருக்கும் நிலையையும் அவர் சுட்டிக்காட்டினார். குமுதம், ஆனந்த விகடன் போன்ற இதழ்கள் இன்று இந்த இடைவெளிகளைக் கடந்து செயற்படத் தொடங்கிவிட்டாலும், தமிழில் இந்த இடைவெளி ஒருவித பண்டித பாவனையில் நோக்கப்படுகிறது என்கின்ற வேதனையான நிலைமையையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால்,இந்தப் பண்டித பாவனை ரீதியிலான ஒரு இடைவெளியைக் கடப்பதற்கான ஒரு இலகுவான சூழலை யுத்தம் கொண்டு வருகிறது. இந்த 'சீரியஸ்'-ஜனரஞ்சக தளங்களிடையேயான இடைவெளியை யுத்தம் குறைத்துவிட்டது என்று குறிப்பிடும் நிலாந்தன், தனது இந்த விவாதத்தை தர்க்கரீதியாக விளக்கவும் தவறவில்லை.

'யுத்தம் பயங்கரமானது. மனித உயிர்கள் சம்பந்தப்பட்டது. இவ்வகையில் அது சீரியஸானது. ஆனால் அதேவேளை அது முழுச் சனங்களையும் பாதிக்கிறது. ஒருவரும் யுத்தத்திலிருந்து தப்பி விடமுடியாது. சீரியஸ் இலக்கியகாரர்கள் ,ஜனரஞ்சக இலக்கிய காரர்கள் என்ற பேதம் பீரங்கிகளுக்குத் தெரியாது.எனவே அது அனைத்து சனங்களும் சம்பந்தப்பட்டது.இது ஏக காலத்தில் யுத்தத்தை சீரியஸாகவும் வைத்திருக்கும், அதேசமயம் ஜனரஞ்சகம், அதாவது சனத்திரளுக்குரியதாகவும் வைத்திருக்கும். இதனால் யுத்தச் சூழலிருந்து வரும் படைப்புக்கள் இந்த இரண்டு தன்மைகளுக்குமிடையே ஒருவித சமநிலையை ஏற்படுத்தமுனைகின்றன. "என்று விளக்குகிறார் நிலாந்தன்.


"இந்த யுத்தம் சனங்கள் மத்தியில் நடப்பது என்பதால்,அதன் மொழி சனங்களுடையதாகவே இருக்கும். அதில் அதிகம் பண்டிதர்களுக்கும், படித்தவர்களுக்கும் இடமில்லை. பூடகமானதும், அரூபமானதுமான மொழிக்கு அங்கே வரையறைகள் உண்டு. இது மொழியை இயன்றளவு எளிமையானதாகவும், இலேசானதாகவும் மாற்றிவிடுகிறது. யுத்தம் புரிவோரின் சனநாயகத்தன்மையைப் பொறுத்து, வெளிப்பாட்டுச் சுதந்திரம் இருக்கின்ற ஒரு சூழலில்,மொழி வெளிப்படையானதாகவும், எளிமையானதாகவும் விளங்குகிறது. இது எல்லாவற்றையும் சேர்த்து,யுத்தத்தின் பேறாக வருகின்ற படைப்புக்கள், ஒரே நேரத்தில் சீரியஸானவையாகவும், அதேசமயம் ஜனரஞ்சகத் தன்மை நிறைந்ததாகவும் ஆகிவிடுகிறது." என நிலாந்தனின் விவாதம் தொடர்கிறது. இதன்வழியேயே, சீரியஸ் - ஜனரஞ்சகம் என்ற பாகுபாடு எம்மத்தியில் உடைக்கப்படுவதற்கான வழி ஏற்படுகிறது.

(இன்னும் வரும்)

மனித உழைப்பைத் தவிர, உண்மையில் வேறு செல்வம் கிடையாது. -பெர்ஸிபி. ஷெல்லி

# விரிந்து செல்லும் சமஷ்டியும் விரிய மறுக்கும் சிங்கள உயர் குழாமும்

மு.திருநாவுக்கரசு







"அரசு ஒரு ஜீவி" ஆதலால் அது இடையறாது வளர்ந்து செல்கின்றது. அதற்குரிய வளர்ச்சி விதிகளை ஏற்றுக் கொள்ளும் போது மனிதன் முன்னேறுகிறான். அதன் வளர்ச்சி விதிகளை நிராகரிக்கும் போது அவன் தன்னையும் கெடுத்து பிறரையும் கெடுத்து விடுகிறான்.

ஒரு தேசிய இனத்திற்கு அதற்கேயுரிய அரச உரிமையிலான பங்குகளை நிராகரித்தால் அது பெருக்கல் விதி விபரீதங்களுக்கே கொண்டு செல்லும்.

பொதுசன ஐக்கிய முன்னணி சார்பில் அண்மையில் லக்ஸ்மன் கதிர்காமர் வெளியிட்டுள்ள கீழ்க் காணும் அறிக்கையும் கருத்துக் களும் மேற்படி விபரீதத்தை மீண்டும் ஒரு முறை வரலாற்றிற் பதிவு செய்து விட்டன.

"நோர்வே அரசு விடுதலைப் புலிகளுக்குச் சாதகமாக ஒருபக்கச் சார்பாய் நடந்து கொள்கின்றது."

''அமெரிக்காவினதும் பிரிட்டனதும் நடவடிக்கைகள் விடுதலைப்புலிகளின் பயங்கர வாதத்திற்கு சன்மானம் வழங்குவனவாய் அமைந்துள்ளன."

"சர்வதேச நாடுகள் பங்கு பற்றும் இக்கூட்டத்தில் புலிகள் சார்பாக ஏன் அன்ரன் பாலசிங்கம் பங்குபற்ற வேண்டும்? இவர் பங்கு பற்றுவதற்கு என்ன தேவை இருக்கிறது? சிறிலங்கா அரசாங்கம் என்ற ரீதியில் அதனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளோ, அமைச்சர்களோ செல்லலாம். ஏன் புலிகள் இதில் பங்குகொள்ள வேண்டும்?

"அரசு ஒரு ஜீவி" என்ற வகையில் அதற்குரிய வளர்ச்சி விதிகளுக்கேற்பதான் வழிநடத்தல் களை மேற்கொள்ள வேண்டும். ஆனால் சந்திரிகாக்கள், கதிர்கா மர்களின் மேற்படி அறிக்கையானது ஆறுவயதுச் சிறுமியின் வலது காலில் இரும்புச் சப்பாத்தைப் போட்டு அவளது ஒரு காலின் வளர்ச்சியை தடைசெய்து அவளை காலமெல்லாம் நொண்டியாக்கிவிடும் பழைய சீன அணுகு முறையைத்தான் ஞாபகப் படுத்துகிறது.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஈழத்தமிழரின் சார்பில் ஒஸ்லோ சர்வதேச அரங்க மாநாட்டிற் பங்குபற்றுவதுதான் இவர்களின் பிரச்சினை. அதாவது அவர் பங்குபற்றுவது சிறிலங்காவின் இறைமைக்கு முரணானது என்பது தான் இவர்களது பிரச்சினை.

இதனை நாம் வளர்ச்சி விதிக் கூடாக பார்ப்போம். சமஷ்டி ஆட்சி முறையானது நவீன வரலாற்றில் தெளிவாக இருநூறு வயதைத் தாண்டி விட்டது. நவீன வரலாற்றில் இதன் தொடக்கத்தை சுவிட் சர்லாந்திலும், ஐக்கிய அமெரிக் காவிலும் காணலாம்.

இருநூறு வயதுகளைத் தாண்டி விட்ட சமஷ்டி முறை தொடங்கிய அதே அளவிலேயே இன்றும் தறுக் கணித்த நிலையில் நிற்கமுடி யாது. அரசுகள் தொடர்ந்து சர்வதேசிய வளர்ச்சியை அடைவதனாலும், ஒவ் வொரு மனிதனும் தொடர்ந்து சர்வதேச சமூகமாக இடையறாது மாறிச் செல்வதனாலும் அதற்கேற்ப சமஷ்டி அமைப்பிலுள்ளசமஷ்டி ஆட்சி அலகுகளும் சர்வதேச மயமாகின்றன. இதனால் சமஷ்டி அலகுகள் வளர்ச்சித் தேவைக் கேற்ப சர்வதேச அரங்கிற் பங்கெடுப்பதும் தவிர்க்க முடியாது.

அமெரிக்காவின் சமஷ்டி அலகுகள் (States) வெளிநாடு களுடன் வர்த்தக, பொருளாதார, தொழில்நுட்ப. கலாச்சார ஒப்பந்த ங்களை நேரடியாகச் செய்கின்றன. அரைச் சமஷ்டி முறையுள்ள இந்தியாவிற்கூட தகவற் தொழில் நுட்பத்தின் பொருட்டு வெளிநாடு களுடன் ஆந்திர மாநிலம் ஒப்பந் தங்கள் செய்வதை மத்திய அரசு வரவேற்கின்றது. வளர்ச்சி நிலைமை களுக்கேற்ப சமஷ்டி அலகுகள் வெளிநாடுகளுடன் தொடர்பு கொள் வதை அமெரிக்கா நெகிழ்ச் சியாகவே விடுகின்றது.

அத்தகைய நெகிழ்ச்சி கனடாவில் இல்லாதபோதுதான் லெவஸ்க் என்பவர் கியூபெக் மாநிலத்திற்கு இறைமையுள்ள கூட்டாட்சி (Sovereignty Association) வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். அதாவது பாதுகாப்பு வெளிவிவகாரம், பொது நாணயம் என்பன மத்திய அரசின் கையில் இருப்பதை ஏற்றுக் கொண்டு அவற்றிற்கு அப்பாலான வளர்ச்சிகளுக்கு மாநிலங் கள் வெளிநாடுகளுடன் உறவுகளை வைத்திருக்கலாம் என்பதே இது வாகும்.

அமெரிக்க மாநிலங்களை வெளிநாடுகளுடன் வர்த்தக, பொரு ளாதார உறவுகளைக் கொள்ள அனுமதித்தமையினால் மாநிலங்க ளும் (States) வளர்ந்தன. அவை மத்திய அரசின் வளர்ச்சிக்கு கூடுதல் உதவிகளும் புரிந்தன.

இன்றைய சர்வதேச சமூக வளர்ச்சியின் படி ஓர் அரசின் கீழான மாநில அரசுகள் மட்டு மன்றி தனிப்பட்ட தொழில் அதிபர்கள் கூட அரசுகளுடன் சமதையாக ஒப்பந்தங்கள் செய்யும் நிலை வளர்ந்துள்ளது. வரப்போகும் சில பத்தாண்டு களுக்குள் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவ னங்கள் ஐ.நா. சபையில் பெரிய நாடுகளுக்கு நிகரான அங்கத்துவம் பெறும் நிலை உருவாகும். பல பத்தா ண்டுகளின் பின்பு இது போன்ற உலக நிறுவனங்கள் ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரத்தைப் பெற்றாற் கூட ஆச்சரி யப்படுவதற்கில்லை.

விமான விபத்திற் காணாமற் போய்விட்ட இலங்கையின் தனிப் பெரும் தரகு முதலாளி உப்பாலி கூட சர்வதேச அரங்கில் இலங்கை அரசை விடவும் வளரும் நிலையில் காணப்பட்டார்.

இவ்வாறு தனிநபர்களே சர்வதேச அரங்கில் அரசுகளை விடவும் முக்கியத்துவம் பெறத் தொடங் கியுள்ள இந்த யுகத்தில், அரச தலைவர்களுடன் சமதையாக முதலாளிகள் ஒப்பந்தங்களைச் செய்யும் நிலைக்கு வளர்ந்துள்ள இந்த உலகில், ஈழத்தமிழரின் சார்பில் தமிழீழத் தேசியத்தின் சார்பில், கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அரச தலைவர்களுடன் சமதையாகக் கலந்து கொள்ளக்கூடாதென்பது இனவா தத்தின் குருட்டுத் தனத்தை, வளர்ச்சி விதிக்கெதிரான அதன் போக்கைத் தெளிவாகப் பறைய றைகின்றது.

சமஷ்டி முறையை நடை முறையில் அதன் தோற்ற நிலையைத் தாண்டி வளர்ந்து செல்கிறது. வளரும் சர்வதேசியத் திற்குப் பொருத்தமான வகையில் அதற்கு நிகராகத்தானும் வளர்ந்து செல்கின்றது. வளராத, அல்லது வளரவிட மறுக்கும் இடங்களிலெல் லாம் அது அறுவைச் சிகிச்சையின் மூலம் வளர்ச்சியை நாடி நிற்கின்றது. ஆனால் சிங்கள உயர் குழாத்தால் சமஷ்டியின் கருநிலையைக் கூட (தொடக்கநிலை) ஏற்கமுடியாமை தான் இங்குள்ள அவலம்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை ஒஸ்லோ மாநாட்டிற்கு பங்குபற்ற அனுமதிப்பதென்பது புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்க உதவும் செயலென ஜே.வி.பி.யும், சு.க.வும் கூறுகின்றன.

இதனை விவாதத்திற்காக இப்படிப் பார்ப்போம். தமிழரை ஒடுக்க சிங்கள அரசு சர்வதேச அரங்கிற்கு சென்றது. வெளிநாட்டு ஆயுத, இராணுவ உதவிகளையும், நேரடிப் படையுதவிகளையும் கூட பெற்றது. இதன்மூலம் தமிழர் பிரச்சினைகளை சிங்கள அரசே சர்வதேசமயமாக் கியது. தமிழர் பிரச்சினையை சர்வதேச மயமாக்கிவிட்டால் தீர்வுக்கான களமும் சர்வதேச அரங்கமாகத் தானே இருக்கமுடியும். எனவே தீர்வுக்கான களம் சர்வதேச அரங்காகும் போது தீர்விற் சம்பந்தப்பட வேண்டிய விடுதலைப் புலிகளின் பிரதிநிதியும் அதிற்பங் கெடுக்க வேண்டியது இயற்கை யானது.

இவற்றிற்கு அப்பால், சர்வதேச வளர்ச்சி விதிகளின்படி ஒரு தேசிய இனத்தின் பிரதிநிதி என்ற வகையில் இவ்வாறான சர்வதேச மாநாடுகளில் பங்குபற்றுவதற்கான உரிமையும் உண்டு.

பொதுசன ஐக்கிய முன்னணி இப்படி இனவாதம் கூறுகையில் ரணில் அரசாங்கம் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை ஒஸ்லோ மாநாட்டிற்கு அழைத்துச் செல்வது தமிழருக்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டுமென்ற விருப்பத்தின் பேரிலல்ல;மாறாக தமது தேவைக்கான சர்வதேச நிதியைப் பெறவேண்டுமென்றால் புலிகளின் பிரதிநிதியைச் சர்வதேச அரங்கிற் காட்சிக்குக் காட்டித்தான் அப்படி ஒரு நிதியைப் பெறவேண்டி யுள்ளது.

புலிகளின் பிரதிநிதியை ஒஸ்லோ மாநாட்டிற் பங்குபற்ற அனுமதிப்ப தென்பது புலிகளுக்குச் சர்வதேச அங்கீகாரம் கிடைக்கச் செய்யும் செயலென சந்திரிகாக்கள், கதிர்கா மர்கள், வீரவன்சாக்கள், அரசாங்கத் தைக் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் மறுவளமாக இதனை சிங்கள அரசின் பக்கம் இருந்து பார்த்தால் சிங்கள அரசுதான் தொடர்ந்தும் இனவாதத்தைப் பின்பற்றமாட்டேன் என்பதை சர்வதேச சமூகத்திற்குக் காட்ட வேண்டு மென்றால், தாம் இனவாதிகள் அல்லர் என்ற அங்கீகாரத்தை சர்வதேச சமூகத்திடம் பெற வேண்டும் என்றால் புலிகளைத் துணைக்கழைக்க வேண்டியுள்ளது. அதாவது புலிகள் சர்வதேச அங்கீகாரம் பெற ரணில் அரசாங்கம் உதவுகின்றது என்பதற்குப் பதிலாக சிங்கள அரசு இனவாதத்தை கைவிடு கின்றது என்பதற்கான சர்வதேச அங்கீகாரத்தைப் பெற புலிகளை அது அழைக்கின்றது. அதே வேளை இதன் தவிர்க்க முடியாத விளைவா கவே புலிகள் இதிற் சர்வதேச அங்கீகாரம் பெறலும் நிகழ்கின்றது. முதல் உண்மை அது; மறுபக்க உண்மை இது.

உடனடி நிலையில் சமாதா னத்திற்கான எளிமையான தர்க்கம் பின்வருமாறுள்ளது.

விரைவில் வளைகுடா யுத்தமொன்று தொடங்குமிடத்தோ அல்லது இப்பிராந்தியங்களில் அமெரிக்காவிற்கு இராணுவத்தள வசதியளித்துள்ள இஸ்லாமிய நாடுகளின் பேரம் பேசும் சக்திக ளைக் குறைப்பதற்கோ இலங்கை யில் அமெரிக்க பின்தளங்களுக்கான முகாந்திரமொன்று புஷ் நிர்வாகத் திற்கு அவசியப்படுகின்றது.

ஆதலால் இலங்கையில் ஒரு பின்தளத்தையோ அல்லது அதற்கான ஒரு முகாந்திரத்தையோ அமெரிக்கா கொண்டிருக்க வேண்டுமென்றால் சமாதானம் அவசியம்.

இந்நிலையில் சிங்கள அரசிற்கான நிதி உதவியை சமா தானத்திற்கான ஓர் ஆயுதமாக அமெரிக்கா பயன்படுத்துகின்றது.

இதில் சந்திரிகாவின் நிலை இனவாதத்திற்கூடாக ரணிலைக் கவிழ்த்துவிட்டுப் பதவிக்கு வருவது தான். ஆனால் சந்திரிகா அரசாங் கத்தை அமைத்தாலும் மேற்குலகின் நிதி அவருக்கும் அவசியம்தான்.

இப்படி ஓர் இக்கட்டான நிலை சிங்களஅரசுக்கு இருப்பதனால் சிங்கள அரசாங்கங்கள் எதுவாயினும் சமாதான முயற்சிகளை முறிக்குமி டத்து நிதி உதவி மட்டுமன்றி இராணுவ உதவிகளையும் மேற் குலகு நிறுத்தும் என்ற உத்தரவாத மேற்பட்டால் சிங்கள அரசினதும், அரச இயந்திரத்தினதும் கரங்கள் அதிகம் கட்டுப்பட வாய்ப்புண்டு.

## மதவடி மயிலர்



செய்தி : இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை ஏமாற்றம ளிப்பதாக உள்ளதாக ஈ.பி.டி.பி தெரிவிப்பு.

மயிலர்: இதென்ன அதிசயம்.... நம்பிக்கையளிப்பதாக இருக்குதெண்டு அவை சொன்னாத்தான் அதிசயம் பாருங்கோ... இந்தமுறை எண்டாலும் பேச்சுவார்த்தை குழம்பாதோ எண்டுதானே அவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகவும்... மாறாக இருதரப்பும் மட்டுமல்லாது உலகமும் பேச்சுவார்த்தையிலை திருப்தி தெரிவித்திருப்பது அவைக்கு ஏமாற்றமளிப்பதாகத்தானேயிருக்கும்.... அதுக்கு நாங்களென்ன செய்யிறது.... நல்லதை நினைக்கிறவைக்கு எல்லாமே நம்பிக்கை தருவதாகத்தான் இருக்கும்.....இவை அப்பிடி இல்லையே.....

செய்தி: ஐ.நா சட்டங்களுக்கு அமைவாக புலிகள் தனியரசு நிறுவலாம். தேவையான அனைத்தும் அவர்களிடம் உள்ளதாக ஜே.வி.பி கூறுகின்றது.

மயிலர்: அதெல்லாம் தெரிஞ்சு கொண்டும் ஏன் இப்பிடி வீணாய்ப் புலம்பிக்கொண்டு திரிய வேண்டுமாம்...! அது சரி ஐ.நா சட்டவிதிகளுக்கு அமைவாக தனியரசு அமைத்தால் தப்பில்லையே... மாறாக அமைத்தால் தானே பிழை ஆனால் தம்பியவை .... மன்னிக்கவும் தோழர்மார்.... வேறையொண்டையுமெல்லே இதோடை சேர்த்துக் கூறியிருக்கினம். யு.என்.பி அரசு தான் இதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்யுதெண்டேல்லே அறிக்கை விட்டிருக்கினம்.... உதுதான் பிழைபாருங்கோ... புலிகளுக்கு யாரும் எதையும் ஏற்பாடு செய்ய வேண்டியதில்லை. அவை தாங்களாத்தான் மக்கள் ஆதரவுடன் போராடிப் போராடித்தான் இன்று இந்த அளவுக்கு வந்திருக்கினம்.... ஜே.வி.பிக்கு இப்ப பார்க்கிறதெல்லாம் யு.என்.பியாத்தெரியுது.... அதுதான் அவையின்ரை புலம்பலுக்கெல்லாம் காரணம்.....

செய்தி: பேச்சுக்கள் இழுபட்டால் தமது கட்சிக்கு சாதகம் என்கிறார் கதிர்காமர்.

மயிலர்: என்ரை கதிர்காமக் கந்தனே.... உந்தாளுக்கேன் உந்தக் குறுக்காலை போன புத்தியை கொடுத்தனி.... நாட்டுக்கும் மக்களுக்கும் பேச்சுக்கள் எப்படியும் நல்லதையும் அமைதியையும் கொண்டு வரவேண்டும். விரைவாக நல்ல தீர்வு ஒன்று ஏற்பட வேண்டும் எண்டு நினைப்பது தான் நல்ல மனிசனுக்குரிய பண்பு... இதென்னடா எண்டால் பேச்சுக்கள் இழுபடவேண்டுமாம். அதாலை தன்ரை கட்சிக்கு நல்லதாம்... இந்தாளை என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை...!

செய்தி: சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிராக எவரும் கருத்து வெளியிட வேண்டாம்.... கட்சி உறுப்பினருக்கு சந்திரிகா அறிவுறுத்தல்.

மயிலர்: நல்லவேலைகளையும் சந்திரிகா அம்மையார் சிலவேளை செய்யிறார் என்று நினைக்கிறியள் போல.... அதுதான் இல்லை.... பேச்சுவார்த்தைக்கு எதிராக பேசத்தான் ஜே.வி.பி ஆட்களை ஒட்டுமொத்தமாக கூலிக்கு அவர் அமர்த்தியிருக்கிறாரே. அவைதான் இப்ப எல்லாத்தையும் செய்யினமே... விமல் வீரவன்ச இப்ப ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளர் மட்டுமில்லை... பொ.ஐ.முன்னணியின் பிரச்சாரச் செயலாளராகவுமெல்லே இயங்குகிறார்.... தங்கடை ஆக்களிலை பிழைவராம ஜே.வி.பி காரரிலை விழுகிற பழியெல்லாம் விழட்டும் எண்டு அம்மணி நினைக்கிறாபோல......

நிகழ்காலம் பிரிவதற்கு முன், வெகு விரைவில் எதிர்காலம் வந்து சேர்கிறது. - லெயோன் கம்பெத்தா



# தாய்லாந்து: சமாதானப் பேச்சின்- புதுப்பரிமாணம் பயணமும்- பார்வையும்





தி. தவபாலன்

இன்றைய சூழலில் ஒரு வெளிநாட்டுப் பயணம் என்பது தமிழனாகப்பட்ட ஒருவனுக்கு பெரிய விடயமல்ல. ஏனெனில் இன்று வடதுருவத்துக்கு அண்மையான பகுதிகள் முதல் தென்துருவத்துக்கும் அண்மையான பகுதிகள் வரை தமிழன் சிதறி வாழ்கிறான். அப்படியிருக்க தமிழருக்கு வெளிநாட்டுப் பயணம், விமானப் பயணம் என்பது புதினமானதொன்றல்ல.

ஆனால் எமது பயணம் புதினமானதுதான். ஏனென்றால் விடுதலை அமைப்பின் தாயக விடுதலையின் குரலாக, எதிரிகளின் பொய்ப்பிரச்சாரத்தை முறியடிப்பதில் முன்னின்று செயற்பட்டு அதற்கும்அப்பால் போர்க் களங்களில் எதியிரியிடமிருந்து மீட்கப்பட்ட பகுதிகளில் போர்நடக்கும் முனைவரை சென்று எதிரியின் பாதுகாப்பு வியூகங்களை அறிந்து எதிரியின் ரகசியங்கள் என்று சொல்லப் படுபவற்றை கடந்த 12 ஆண்டுகளாக பகிரங்கப்படுத்தி இதன் காரணத்தால் எதிரியினால் பலதடவைகள் எறிகணைகள் மூலமும், விமானங்கள் மூலமும் தாக்கி சேதப் படுத்தப்பட்டு தொடர்ந்து இயங்கிவரும் ஒரு வானொலி- அந்த எதிரியின் உயர் வலயங்கள் ஊடாக அந்த எதிரியினால் அங்கீகரிக்கப்பட்டு சென்றதுதான் எமது பயணத்தின் புதினம்.

இரகசியமாக எவருக்கும் தெரியாது ஊடுருவி உள்நுழைந்து போராளிகளால் அழிக்கப்பட்ட கட்டுநாயக்க விமானநிலையமூடாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் உயர்பாதுகாப்புக்களுடன் சென்றதும் தடைசெய்யப்பட்ட வானொலி, இரகசிய வானொலி என்று தன்வாயல் கூறிய அரசினுடைய- விமானநிலையமூடாக அந்த் வானொலியின் பெயருடன் செல்லக் கூடிய வரலாற்று மாற்றம் தான் இந்தப் பயணத்தின் முக்கியத்துவம்.

புலிகளின் குரல் என்ற முத்திரையைக் கண்டதுமே அமோக வரவேற்பளித்து 'விசா' தந்து ஏற்பாடுகளை செய்த தாய்லாந்தின் கொழும்புத் தூதரகத்தின் பணியையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

புலிகளின் குரல்- விடுதலைப்புலிகளின் வானொலி என்றதும் கட்டுநாயக்க விமாநிலையத்தில் அதிகாரிகளிடையே நிலவிய பரபரப்பும், தற்போதைய சமாதானம் நிலைக்கும் என அவர்களிடமிருந்து எம்மிடம் தொடுக்கப்பட்ட வினாக்களும் கூட முக்கியமானவை.

இதே கட்டுநாயக்க விமானநிலையப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல்வேளையையும் இன்றைய வேளையையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது - இன்று நாம் இந்த விமான நிலையத்தை பயன்படுத்த முன்னையது காரணம் என்ற கூற்று எம்மில் உறைத்தது.

'தாய் எயர் வேஸ்' என்ற தாய்லாந்து அரசின் விமானசேவையே எமது பயணத்துக்கானதாகும். நள்ளிரவு தாண்டி 1.50 மணிக்கு விமானம் புறப்படத் தயாரானபோது அதில்நாம் ஏறினோம்.

வாசலில் தாய் விமானப் பணிப்பெண் கும்பிட்டு நம்மைப்போல் குனிந்து தனது மொழியில் வணக்கம் கூறி வரவேற்றார். எத்துணை மொழியிலான வெளிநாட்டு பயணிகள் வருகின்ற போதும் அவர்கள் பொதுமொழி எனப்படும் ஆங்கிலத்துக்கு மாறவில்லை.

வணக்கத்தை தமது மொழியிலேயே கூறிக்கொண்டார்கள். விமானம் கட்டுநாயக்கவை விட்டு புறப்பட்டு சுமார் 3மணி நேரத்தில் தாய்லாந்து தலைநகரின் பாங்கொக் விமான நிலையத்தை அடைந்தது.

அங்கு நாம் செல்லவேண்டிய இடமான நகோன்பதோம் மாவட்டத்தின் சம்பிரான் நகரிலுள்ள றோஸ் கார்டன் சுப்ரைம் றெசோட்டுக்கு போவதற்கான மார்க்கங்களை தேடினோம். விமான நிலையத்தில் சுற்றுலா வழிகாட்டி மையங்கள் இடம் வழிகாட்டி மையங்கள் இருந்தன.

அவற்றிலிருந்த தாய்லாந்தவரிடம் ஆங்கிலத்தில் அந்த இடத்துக்கு செல்லும் மார்க்கம் பற்றிக் கேட்டோம்.

அவர்களால் ஆங்கிலத்தை முழுமையாக விளங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்கள் வழங்கிய பதிலும்தாய்மொழி கலந்த ஆங்கிலமுமாக இருந்தது. சுமார் அரைமணி நேரம் அங்கு நபருக்கு நபர் மாறி மாறி விசாரித்தும் பயனில்லை. தாய்மொழியை விட்டு அவர்கள் வரத் தயாரில்லை என்பது விளங்கியது. வெள்ளையின சுற்றுலாப் பயணிகளும் திணறிக் கொண்டிருந்தனர். எமக்கு அவர்களது நடவடிக்கை வெறுப் பூட்டவில்லை. பதிலாக தமது தாய்மொழியில் உள்ள உறுதியையிட்டு பெருமிதம்கொள்ளவே முடிந்தது. நாம் ஆங்கிலத்தை பிரிட்டிஸ் பாணியில் உச்சரிப்பதற்கே முனைப்புறுகிறோம். ஆனால் தாய் மக்கள் அப்படி போகாதிருப்பதில் இருந்த உறுதியை நாம் மனதார போற்றினோம்.

போகுமிடத்துக்கு எப்படிச் செல்வது என யோசித்துக் கொண்டிருக்கையில் விமான நிலைய வாசலிலிருந்து TTN தமிழ் ஒளி தொலைக்காட்சி சேவை பணிப்பாளர் குகன்குணரட்ணம் தன்னை அடையாளப்படுத்தினார்.

மனதில் நிம்மதி வர அவருடன் இணைந்து கொண்டோம். அவர் தனது வீடியோ ஒளிப்படக்காரனை டென்மார்க்கிலிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். எங்களை வாடகை வாகனத்தில் ஏறுமாறு அனுப்பினார் அவர். தாய்லாந்து காலைப் பரபரப்பில் ஆழ்ந்திருந்தது. எமது கடிகாரத்தைப் பார்த்தோம். காலை 4 மணி எமது தாயக நேரம். அதனை நாம் தாய்லாந்துக்கு மாற்ற முயலவில்லை. எமது தாயக கடமைகளை வானொலி நேரங்களை கொண்டு செயற்பட இது இடையூறாக இருக்கும். இதைவிட நேரத்தில் இன்னொரு தகவலும் இருக்கிறது.

கடந்த ஏப்ரலில் கிளிநொச்சியில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் செய்தியாளர் சந்திப்புக்கு 'மலேசிய நண்பன்' நாளேட்டின் செய்தியாளர் சுகுமாரன் வந்திருந்தார். தற்செயலாக அவரது கடிகாரத்தைப் பார்த்தபோது அதில் எமது நேரத்தைவிட 2மணி நேரம்வரை அதிகமாக இருந்தது.

மணிக்கூடு பிழையா என கேட்டோம். இல்லை இது மலேசிய நேரம் என்றார். ஏன் நேரத்தை மாற்றவில்லை எனக் கேட்டோம்.

நான் என் தாயகத்தைவிட்டு வந்துவிட்டேன். இப்பொழுது இந்த நேரத்தில்தான் என் தாயகத்துடன் வாழ்கின்றேன் என்றார் அவர். நம்மனதைத் தாக்கிய பதில் அது.

தாய்லாந்தில் நேரம் மாற்றக் கூடாது என்பதற்கு இதுவும் ஒரு காரணம்தான்.

சரி விமானநிலையத்துக்கு வெளியே குகன் ஒப்பந்தம் செய்திருந்த வாடகை வாகனத்துக்குச் சென்று பயணப்பொதிகளை வைத்தோம்.

அங்கு ஒருவர் சிரித்தார். தலைநரைத்த கண்ணாடி அணிந்த 55 வயதுதாண்டிய அவர்தான் வாடகை வாகனத்தின் ஓட்டுனர். மங்கோலிய இனக்குழுமம் அதன் தாய் மக்களும் அவரின் முகத்தில் அந்த விம்பம் உறைந்திருந்தது.

அவர் தாய் மொழியில் பேச வெளிக்கிட்டார். அப்போதுதான் அந்த ஓட்டுனர் ஒரு பெண் என்பதை உணரமுடிந்தது. வயதுபோன ஒரு மூதாட்டி HIACE வகை வாடகை வாகனத்தை ஓட்டுகிறார் என்ற அடுத்த தகவலும் எமக்கு முக்கியமானது. அந்த மூதாட்டிக்கும் தாய்மொழி தவிர பிறமொழி தெரியாது. ஆனால் உல்லாசப் பயணிகளை அவர் தனது வாகனத்தில் ஏற்றிச் செல்கிறார்.

ஓரிரு ஆங்கிலச் சொற்களை கிரகித்து அவர் விமானநிலைய வளாகத்தை விட்டு புறப்படுகிறார்.

விமானநிலையத்தைவிட்டு வெளியேற ஆரம்பித்த வாகனம் வேகமாக நேரத்துக்கு நகோன்பத்தோமை சென்றடைய வேண்டுமென்பதால் நெருக்கடியான சாலைகளைத் தவிர்த்து மேம்பாலங்கள் வழியாக அவர் பயணத்தை மேற்கொண்டார்.

ஒவ்வொரு மேம்பாலத்துக்கும் வீதி வரியை அவர் ஆங்காங்கு நிலையங்களில் செலுத்தினார். உலகின் வாகன நெரிசல் மிக அதிகமான நகரங்களில் ஒன்றாக பாங்கொக் உள்ளது. இதனால்மேம்பாலங்கள் அதிகளவில் அமைக்கப்பட்டுள்ளன. புதிதாகவும் மேம்பாலங்கள் கட்டப் பட்டுக் கொண்டிருக்கின்றன.

போகும் வழியில் ஆறு ஒன்றினுள் கப்பல்கள் கொண்டுவரப்பட்டு அவற்றிலிருந்து பொருட்கள் இறக்கப் படுவதை காணக்கூடியதாக இருந்தது.

பாங்கொக் கடற்கரைகயிலிருந்து உள்வாங்கியிருப்பதால் கப்பல்களை ஆறுகளுக்கூடாக பாங்கொக் நகருக்குள் கொண்டுவந்து பொருட்களை இறக்குகின்றனர்.

சாலைகளில் கடைத்தொகுதிகள், பெயர்ப்பலகைகள் காணப்பட்டன. அவற்றில் என்ன உள்ளது என்பதை அறிய முயன்றோம். முடியவில்லை. காரணம் அவையும் தாய் மொழியிலேயே இருந்தன. ஓரிரு பெயர்ப்பலகைகளில் மட்டும் பெயர்கள் ஆங்கிலத்தில் இருந்தன. Sony, Toshiba, Panasonic போன்ற பல்தேசிய பெயர்களே அவை. இவை கூட 100வீதத்தில் 2 வீதமாகவே இருந்தன.

தலைநகரில் கோவில்கள் கூட குறிப்பிடக் கூடிய எண்ணிக்கையில் இல்லை. விமானநிலையமருகே ஒரு விகாரை, பிறகு நகோன் பத்தோம்வரை ஒரேயொரு பௌத்தகோயிலை மட்டும் காணமுடிந்தது. தாய்லாந்தின் பிரதான மதம் பௌத்தம்.

ஆங்காங்கு ராமர் சீதை, அனுமார் படங்கள் காணப்பட்டன. ஆனால் தாய்மன்னர் பூம்பாலின் படங்கள் அனேகமான இடங்களில் காணப்பட்டன. இந்த மக்கள் மன்னரை மிகவும் போற்றுகிறார்கள்.

இப்படியான காட்சிகளை பார்த்தவாறு எமது வாடகை வாகனத்தில் ஒருமணிநேர பயணத்தின் பின்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும்- சிறிலங்கா அரசுக்குமிடையிலான பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ள றோஸ்காடன் சுப்ரைம் றெசோட் விடுதியை அடைந்தோம்.

75 ஏக்கரில் ஒரு கிராமமாக அந்தவிடுதி பரந்திரந்தது. நுழை வாசலிலிருந்து 10 நிமிட வாகனப் பயணத்தின் பின்னரே நாம் விடுதியின் மையத்தை அடைந்தோம்.வெள்ளை வண்ணத்தில் 9 மாடிகளைக் கொண்ட விடுதியின் பிரதான கட்டடம் அமைந்திருந்தது. அங்கு அந்த வளாகம் எங்கணும் தாய்லாந்து பொலிசாரும், கொமாண்டோக்களும், புலனாய்வுப் பாதுகாப்புப் படையினரும் காணப்பட்டனர்.

[அடுத்தவாரமும் வரும்...]

# அமெரிக்க மனித நேய கண்ணி வெடி அகற்றும் திட்டம்

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக கட்டம் கட்டமாக நீடித்த 'ஈழப்போர்'கள் ஓய்ந்து அமைதிப் பேச்சு வார்த்தைகள் என்ற நீண்ட இருண்ட பாதையொன்றின் முடிவிலே ஒளிக்கதிர்கள் தெரிந்தும் தெரியாததுமான ஒரு நிச்சயமற்ற சூழ்நிலை நிலவுகிறது. 17000க்கு மேற்பட்ட மாவீரர்களையும், 60000க்கு மேற்பட்ட பொதுமக்களையும் காவு கொண்ட இந்தப் போரை நடத்திச் செல்வதற்கு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் சிறிலங்கா அரசுக்கு பல நாடுகள் உதவியிருக்கின்றன.



விடுதலைப்புலிகள் மீது தடைவிதிப்பதிலிருந்து இராணுவப் பயிற்சிகள், ஆயுத உதவிகள் வழங்கி முண்டு கொடுப்பது என உதவிகளின் பட்டியல் நீண்டு செல்கின்றது.

அண்மையில் போர் ஓய்வு ஏற்பட்டதிலிருந்து குற்றுயிராக் கிடக்கும் எம் தாயகத்தின் மீது முதலாளித்துவ நாடுகள் எஞ்சியிருக்கும் குருதிச் சொட்டுக்களை உறிஞ்சி எடுத்துவிட பிணந்திண்ணிக் கழுகுகளாக சிறகு விரித்து வருகின்றன. மனித நேயப்பணி ஆற்றப்போகிறோம் என்று வருபவர்களுக்கும் குறைவில்லை. மனித நேயப்பணி என்ற பெயரிலே எங்கள் தாய்மண்ணின் மூலை முடுக்கெல்லாம்சென்று மண்வளத்திலிருந்து மூளைவளம் வரையான தகவல்களை சேகரிக்கும் இவர்கள் ஐ.நா. அமைப்புக்களுக்கு அறிக்கை என்ற பெயரிலே அவற்றை அனுப்பிவைக்கிறார்கள். அவை இறுதியில் புலனாய்வு அமைப்புகளின் கைகளுக்கு போய்ச் சேரும். சந்தேகமிருந்தால் அண்மையில் UNHCR வெளியிட்ட பணி வெற்றிடங்களின் கடமை விரிப்புக்களை பாருங்கள்.

இடம் பெயர்ந்த மக்கள் மீளக் குடியேறவென பல்வேறு உதவிகள் வழங்கப்படுகின்றன. நூற்றுக்கணக்கான எமது மக்களின் உயிரையும் அங்கங்களையும் சிதறடித்த கண்ணிவெடிகள் மற்றும் வெடிப் பொருட்களாக 60 லட்சம் வரையில் புதைக்கப்பட்டிருப்பதாக வெளிநாட்டு நிபுணர்கள் மதிப்பீடு செய்துள்ளார்கள். எம்மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு இவை அகற்றப்பட வேண்டியது மிக அவசியமானது தான். அவசரமானது தான். ஆனால் இங்கே என்ன நடக்கிறது.

போர் ஓய்வு அறிவிக்கப்பட்ட உடனேயே அமெரிக்க அரசு தனது மனித நேயப்பணித் திட்டத்தின் கீழ், குடாநாட்டில் கண்ணி வெடிகளை அகற்றப் போவதாக மிக ஆரவாரத்துடன் அறிவித்தது. றொங்கோ என்ற நிறுவனம் இதற்கென அமர்த்தப்பட்டது. மொசாம்பிக் நாட்டைச் சேர்ந்த 37 பேர் ஒருவாறு இலங்கை வந்து சேர்ந்தனர். 2001 பெப்ரவரியில் வந்து சேர்ந்தவர்கள், தமது உபகரணங்கள் வந்து சேரவில்லை என்பதால் ஆறு வாரங்களுக்கு மேல் எதுவுமே செய்யாமல் காத்துக் கொண்டிருந்தனர். மிகநவீன உபகரணங்கள், மோப்ப நாய்கள், பாதுகாப்பு சாதனங்கள் என மிகப் பாதுகாப்பான முறையில் தங்கள் வேலையைத் தொடங்கினார்கள். 2002 ஒக்டோபர் மாதத்திலே தங்கள் ஒப்பந்த காலம் முடிந்து விட்டதாக கூறி பணியை நிறைவு செய்து சென்று விட்டார்கள். இந்தக் காலப்பகுதியில் 50,000 சதுர மீற்றர்களை துப்புரவு செய்து 800 துருப்பெதிர்ப்பு கண்ணி வெடிகளை மீட்டதாக அறிவித்திருக்கிறார்கள். (டெய்லிநியூஸ் 3.10.2002) 37 பேர் 20 மாதங்கள் மிக நவீன உபகரணங்களுடன் வேலை செய்து 50,000 ச.மீ களை துப்புரவு செய்து 800 கண்ணி வெடிகளை அகற்றியிருக்கிறார்கள். நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த வேளையில் முன்பொரு முறை வந்த சிம்பாப்வே கண்ணி வெடி நிபுணரின் நினவு வந்திருக்குமே? ஆமாம் நீங்கள் நினைப்பது சரிதான்.அந்த நிபுணர் எமது மண்ணிலிருந்து அகற்றியதை விட எமது மண்ணில் விதைத்த வையே (எய்ட்ஸ் கிருமிகள்) அதிகம். அதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.



அனபாயன்

சரி இப்போ தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தனிப்பட்ட ஆதரவவோடு எமது மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பணிகளை ஒரு ஒப்பீட்டுக்காகப் பார்ப்போமா? (கீழே தரப்படும் தகவல்கள் மேற்படி பிரிவின் பணிப்பாளரானதிரு. யோகனிடமிருந்து பெறப்பட்டன.)

திரு. யோகன் தலைமையிலான இப்பிரிவு 2000 ஏப்பிரல் 20 ம் திகதி செயற்படத் தொடங்கியது. இன்று (2002 ஒக்டோபர்) வரையான இப்பிரிவின் சாதனைகளைப் பார்ப்போம். இதற்குள் அவர்களுக்கு பயிற்சியளித்த காலமும் அடங்கும். 31 மாதங்கள் இடைவெளியில்

150 பேருக்கு கண்ணி வெடி அகற்றுதலில் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. (அண்மையில் மேலும் 50 பேர் பயிற்சியை முடித்திருக்கிறார்கள்) 94500 துருப்பெதிர்ப்புக் கண்ணி வெடிகளும் 71000 வெடி பொருட்களும் அகற்றப்பட்டுள்ளன. 41,000,000 (41 மில்லியன்) சதுர மீற்றர்கள் எமது மக்களின் துரித குடியேற்றத்துக்கென துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

பணியின் போது 02 உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். 03 உறுப்பினர்கள் சிறு காயமடைந்தனர். மோப்ப நாய்களோ, நவீன கருவிகளோ இன்றி இந்த மகத்தான மனிதர்கள் தங்கள் சாதனையை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

| | அகற்றியசராசரி கண்ணிவெடிகள் | துப்புரவுசெய்த நிலப்பரப்பு |
|---|---|---|
| றொங்கோ | 1.07 | 32 ச.மீ |
| எம்மவர்கள் | 331 | 9111 ச.மீ |

(ஒருமனிதமாதத்துக்கு)

சரி. அமெரிக்காவின் மனித நேய கண்ணிவெடி அகற்றும் திட்டத்துக்கும் எமது மனித நேய கண்ணி வெடி அகற்றும் முயற்சிகளுக்குமிடையேயான ஒப்பீட்டு அலகாக ஒருமனிதமாதத்தை (1 மனிதன்X 1மாதம்) கொண்டோமானால் பெறுபேறுகள் அட்டவணையில் கீழே காட்டப்பட்டுள்ளவாறு அமையும். இந்தப் பாரிய சாதனை வேறுபாட்டுக்கு காரணம் என்ன? 10.11.2002 புலிகளின் குரல் வானொலிக்கு அளித்த பேட்டியிலே பணிப்பாளர் பின்வருமாறு கூறியுள்ளார்.

"எமது மக்கள் துரிதமாக குடியேற வழிசமைப்பதற்கென அர்ப்பணிப்பு உணர்வுடன் இயங்கியதாலேயே இவ்வளவு தொகையில் உயிராபத்தான வெடிப் பொருட்களை எம்மால் அகற்ற முடிந்தது."

ஒலிம்பிக் போட்டியிலே தங்க மெடலை நீங்களேபெற்றது போன்ற உணர்வு வருகிறதா? பொறுங்கள் கதை இங்கே முடியவில்லை.

கடந்த 29.10.2002 அன்று சிறிலங்கா வானொலியின் மதிய செய்தியில் தெரிவிக்கப்பட்ட செய்திக்கு உங்கள் கவனத்தை ஈர்க்கப் போகின்றன. சிறிலங்காவின் தமது பணியை முடித்துக் கொண்ட மொசாம்பிக் நாட்டவர்கள் தங்கள் உபகரணங்களை சிறிலங்கா இராணுவத்துக்கு அன்பளிப்புச் செய்து விட்டுச்சென்றாதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. எப்படிப் போகிறது பார்த்தீர்களா கதை? மனிதநேய கண்ணிவெடி அகற்றும் திட்டத்தின் உபகரணங்களை இன்னொரு மனிதநேய கண்ணிவெடி அமைப்புக்கு வழங்குவதில் பொருளிருக்கிறது. சிறிய சாட்டை வைத்தும் இந்த அமைதியை குழப்பிவிடத் துடிக்கின்றவர்களைக் கொண்ட இராணுவத்துக்குக் கையளிப்பதன் பொருள் என்ன?

அட, இது மறைமுக இராணுவ உதவி போல இருக்கிறதே என்கிறீர்களா? இக்கட்டுரை உங்களுக்கு தரவிரும்பிய செய்தியும் அதுதான்.

# மீண்டெழும் முல்லைத்தீவு நகர்

தனது நகரத்தை முழுமையாக இழந்த ஒரு நகரம் மீள துளிர்க்கிறது. வங்கக்கடலின் பேரலைகள் ஓயாது கரையை முட்டி மோதிக்கொண்டிருக்க அதனருகே அழகான வெண் மணலால் கரை மிளிர மருத்துவமனை, மாவட்டச் செயலகம், பேருந்துசாலை, பாடசாலைகள், கடைத்தொகுதிகள், வீடுகள் என பெருமளவிலான கட்டடங்கள் நிறைந்த பரபரப்பாக எப்பொழுதும் மக்கள் நடமாட்டத்துடன் கொழும்புக்கான மீன் லொறிகளின் இரவு பகலான பரபரப்புடன் இயங்கி வந்த முல்லைத்தீவு நகரம் - 1990 ல் சிறிலங்கா இராணுவத்தால் அழிக்கப்பட்டபின் மீண்டும் முளைவிடத் தொடங்குகின்றது.

1968 முதல் சிறிய இராணுவ முகாம்களாக இருந்த முல்லைத் தீவு நகர முகாமை 1990 ல் விரிவாக்க சிறிலங்கா இராணுவம் Sea Breeze என்ற பாரிய படை நடவடிக்கையை நடத்தியது. இதன் விளைவு நகரம் முழுதும் இழந்தது. அது இராணுவ மயப்பட்டது. ஒரு பெரிய பிரிகேட் இராணுவத் தளமாக மாறியது. நகரில் இயங்கிய அரச, அரச சாரா நிறுவனங்கள் புதுக்குடியிருப்பு, முள்ளியவளைப் பகுதிகளுக்கு நகர்ந்து தற்காலிக கட்டடங்களில் இயங்கின.



அறிவன்

1996ல் ஓயாத அலைகள் - 01 நடவடிக்கை மூலம் முல்லைத் தீவு நகரை விடுதலைப்புலிகள் மீட்டனர். இழந்தழிந்த நிலையில் அந்த நகரம் மீட்கப் பட்டது.

கடலில் சிறிலங்கா கடற் படையினர் ஆதிக்கம் இருந்த காரணத்தால் அங்கிருந்து இடம் பெயர்ந்த மக்கள் உடனடியாக மீளக்குடியேற முடியவில்லை. மந்த கதியிலேயே முல்லைத்தீவு நகரில் மீளக் குடியேறல் நடைபெற்றது.

முல்லைத்தீவு நகரத்தில் 7043 குடும்பங்கள் மீளக் குடியமர வேண்டியுள்ளன. இதுவரை 2038 குடும்பங்கள் நகரத்தில் மீளக் குடியமர்ந்துள்ளன. இக்குடும்பங்கள் தற்காலிக குடிசைகளிலேயே தங்கியுள்ளனர்.


இந்தச் சூழலில் புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைக்கு வந்த நிலையில் முல்லைத்தீவு நகரம் வேகமாக முன்னேறி வருகிறது.

பாடசாலைகள் நகரத்துக்கு திரும்பி விட்டன. அரச அலுவலகங்கள், மருத்துவமனை என்பன திரும்ப தயாராகின்றன.

முல்லைத்தீவு நகரத்தில் 7043 குடும்பங்கள் மீளக் குடியமர வேண்டியுள்ளன. இதுவரை 2038 குடும்பங்கள் நகரத்தில் மீளக் குடியமர்ந்துள்ளன. இக்குடும்பங்கள் தற்காலிக குடிசைகளிலேயே தங்கியுள்ளனர். இதற்காக 15 ஆயிரம் ரூபா மட்டுமே ஒவ்வொரு குடும்பத்துக்கும் முல்லைத்தீவு அரச செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு நிரந்தர வீடுகளைக் கட்ட அடுத்த ஆண்டே தமக்கு நிதி கிடைக்க வழி உள்ளதாக முல்லைத்தீவு அரச செயலக புனர்வாழ்வு பகுதி புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

நகரத்தில் அரச செயலகம், கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் செயலகம், கரைதுறைப் பற்று பிரதேச சபை, கரைதுறைப் பற்றுபலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், மாவட்ட மருத்துவமனை, மாவட்ட தபாலகம், உதவி விவசாயப்பணிப்பாளர் செயலகம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, தெங்கு பனம் பொருள் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம் என அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும், பாடசாலைகளும் இயங்க நிரந்தர கட்டடங்கள் அமைப்பதற்கான தேவைகள் மிக அதிகமாகவே உள்ளன.




# தெளிவு



ஆயிற்று,எல்லாம்.

கடந்த இரு மாதங்களும் நிலவிவந்த இழுபறி ஒரு வழியாக முடிவிற்கு வந்து கண்டி-யாழ்-'ஏ 9' வீதி திறக்கப்பட்டாயிற்று. வீதி திறந்திருக்கும் வாரத்தின் ஆறு நாட்களும் நெருக்கடி மிகுந்திருந்தது. ஒருவரை மற்றவர் முந்திச்செல்ல விழையும் பாதசாரிகள்... பிதுங்கி வழியும் சாமான்களுடன் தெருவை நிறைத்தபடி விரையும் லாரிகள்....

இவற்றின் நெருக்கத்துக்குள் நின்றவாறு போராளிகள் வீதிச் சோதனை, கண்காணிப்பை மேற் கொண்டவாறுள்ளனர்.

சிங்களத்தில் 'சிறி' இலக்கம் பொறித்த பேருந்தொன்று முகமாலை உறவுகளே வருக வளைவில் பெருமூச்சுடன் நிற்கிறது.

" வன்னிக்கு வந்தவர்கள் இறங்கி வலப்பக்கமும், புளியங்குளத்துக்கு அப்பால பயணிக்கிறவையள் இடது பக்கமும் இருக்கிற ஓலைக் கொட்டிலுக்கை போங்கோ" நடத்துநர் விசிலை வாயிலிருந்து துப்பியபடி கூறினார்.

பயணிகள் முழுவதுமாக இறங்கி முடிப்பதற்கிடையில் பின்னால் வந்த இன்னொன்று "வழிகேட்டு" கோர்ண் அடித்தது.

சிவகாமி இடறுப்பட்ட செருப்பை பாதத்தினுள் திணிக்க முயல பேருந்து அப்பால் நகர்ந்தது.

"தம்பி சாக்கில கொண்டு வந்த உடமைகள் கிடக்கு"அவசரமாக் கூவினாள். நகர்ந்து கொண்டிருந்த பேருந்திலிருந்து நடத்துநர் அதை உருட்டிவிட்டான்.

'வீதியில குறுக்க கிடக்குது ஓரத்திற்கு நகர்த்த வேணும்' மூச்சைப் பிடித்துத் தூக்க முயன்றாள்: முடியவில்லை. பாஸ் அனுமதியினை முடித்துக்கொண்டு வசுவிற்குரிய ரிக்கற்றும் எடுத்து வருவதாகச்சென்ற கந்தர் இன்னும் வந்து சேரவில்லை. கண்களால் வீதியைத் தேடிக் கொண் டிருந்தவளை பின்னாலிருந்து வந்த குரல் கலைத்தது.

"என்ன ஆச்சி, யாராவது குண்டுப் பார்சலை வீதியில வச்சிட்டதாக பயந்து கொண்டிரு க்கிறியே?" வெளிர் சேர்ட், நீல ஜீன்ஸ் சீருடையில் உத்தியோகத்தர் ஒருவர் சிரிப்புடன் கேட்டார். தோள்பட்டையில் புலியொன்று சிரித்தபடி -இல்லை உறுமியபடி இருந்தது. தமிழீழ காவல்துறை.

ஏழு வருடங்களுக்கு முன்னர் பார்த்த சீருடை உத்தியோகத் தர்களை மீண்டும் இப்போதுதான் பார்க்கிறாள். மேதின ஊர்வலங்களின் போது ஏனைய தொழிலாளர்களுடன் தமிழரின் காவல் படையாக பலாலி வீதிவழியே சென்ற அவர்களின் அணிநடை....

" சமான்கள் என்னுடையதுதான் தம்பி. என்ரை இவரும் பிள்ளையும் அலுவலாக போட்டினம். இப்ப வந்திடுவினம்"என்றாள்.

" சிவகாமி, சாமான் மூட்டையை ஒரு கை பிடி. ஓரத்தில் கொண்டு போய் வைப்பம்'' கந்தர் வந்து விட்டிருந்தார்.

"இஞ்சாருங்கோ தொண்டை வறண்டு போச்சு. கொட்டில் முகப்பில யிருக்கிற கொள்கலனி லிருந்து தண்ணீர் மொண்டு வாறியளே?'' சிவகாமி தாகத்துடன் வெற்று சோடாப்போத்தலை நீட்டினாள்.

அதைப் பெற்றுச் சென்ற கந்தர் போன வேகத்தில் திரும்பி வந்தார். "அதில அறவே இல்லையப்பா.... போகிறவழியில நிரப்பிக் கொள்ளுவம்"

"மூத்தவனைப்பற்றி விசாரிச்சுப் பார்த்தனீங்களே. இப்ப அவன் நிக் கிற இடத்தை அறிஞ்சாலாவது சென்று தேடிப்பார்க்கலாம். இதில தடை முகாமில நிற்கிற அத்தனை போராளிகளிட்டையும் விசாரிச்சனான். ஆரம்பத்தில என்னை நம்ப மறுத்திட்டினம்."

சிவகாமி ஏன் என்ற வினாக் குறியோடு நோக்கினாள்.

" குடும்பக்காட்டில பிள்ளைகள் விபரத்தில பொடிச்சியின்ர பெயர் மட்டும்தானே பதிஞ்சிருக்கு. அப்படியெண்டா குகன் எண்ட பெயரை ஏன் பதியேல்ல எண்டவையள்"

"நீங்கள் என்னப்பா சொன்னீங்கள்"

" பிள்ளைகள் மொத்தம் மூணு. மூத்தவை இரண்டு பேரும் ஆம்பிளைப் பிள்ளைகள்... இரண்டாமவன் தொண்ணூத் தொண்டில மணலாத்தில நடந்த சமரில வீரச்சாவடைஞ்சவர்.... அவரின்ர பொடி கூட நாங்கள் பார்க்கக் கொடுத்து வைக்க வில்லை. நாங்கள் இப்ப தேடி வந்தது மூத்தவரை.... சொந்தப்பெயர் குகன். தொண்ணூத் தைஞ்சுக்குப் பிறகு அவரை நாங்கள் சந்திக்க வில்லை. அதன் பிறகு இராணுவ வேலிக்குள்ள தான் வாழுறம். அதால தான் போராளிகளா யிருந்த காரணத்தால வேற சிக்கல் ஏதேனும் வரலாமெண்டு ரண்டு பேரையும் குடும்ப அட்டையிலி ருந்து நீக்கிப் போட்டம்" எண்ட தைச் சொன் னனான்.

சிவகாமி நீண்ட பெருமூச் சொன்றை உதிர் த்தாள்.

"உதில இருமப்பா, நானொருக்கா மிதிலாவைத் தேடிக்கொண்டு வாறன். புது இடத்தில வந்து இடம்வலம் புரியாமல் எங்க தடுமாறிக்கொண்டு நிக்கிறாளோ!''

"குகன் கடைசியாக நிண்ட இடத்திலயிருந்து கிடைச்ச விபரத்தையும் கொண்டு போங்கோ...." என்ற சிவகாமி மார்புச் சேலையினுள் கைவிட்டு ரவிக்கையினுள் பத்திரப் படுத்தி வைத்திருந்த காகிதத்தைக் கொடுத்தாள். நான்காக மடித்து வைத்து நைந்துபோயிருந்த அதை பத்திரப் படுத்தியபடி கந்தர் நகர்ந்தார்.

தனிமையிலிருந்த சிவகாமி வீதியோரமாக விரைந்து வந்த சிறுமியைக்கண்டு முகமலர்ந்தாள் அவள் கையில் அரைவாசி நிறைக்கப்பட்ட தண்ணீர்ப்போத்தல்.

"பிள்ளை, தண்ணீர்ப் போத்தலைக் கொஞ்சம் இப்படித்தா... வந்தநேரத்திலிருந்து தவிப்பாயிருக்கு" சிறுமியை அருகே அழைத்தாள். சிறுமி சற்று நேரம் அமைதியாய் நின்றாள். இதுநாள்வரை பழகியிராத சிவகாமியை உற்றுப்பார்த்தாள். பின் ஏதோ நினைத்துக் கொண்டவளாய்,

"அம்மம்மா எதிர்பார்த்திக் கிட்டிருப்பாங்க அவங்க கூட காலையில் எதுவும் சாப்பிடலை... அரைவாசியை மீதியா கொடுத் திடணும்!" நிபந்தனை போட்டாள்.

"சரிம்மா நீ சொல்லுறபடியே செஞ்சுக்கிறேன்" போத்தலைச் சரித்து மடக் மடக்கென இரண்டு மிடறு அருந்தினாள். தாகத்திற்கு அமிர்தமெனச் சுவைத்தது.

"உன்னோட அம்மம்மா எங்கையிருக்காங்க உன்னைத் தனியாவா அனுப்பிச்சாங்க"

"அவங்களா , அதோ தெரிகிற மரத்துக்கு அந்தப் பக்கமா இருக் காங்க. அவுங்க உங்கள மாதிரி நடந்துக்க மாட்டாங்க"

"ஐயோ. பாவம்! வாதம் வந்து முடங்கிட்டாங்களா"

"இல்ல எங்க ஊர் அதான் சுதந்திரபுரத்தில செல்லடிச்சதில இடது காலை இழந்திட்டாங்க"

"அப்படியா நடந்திடிச்சு... நான் கேள்விப்பட்டதேயில்லையே?"

"அது தொண்ணூத்தெட்டில நடந்தது. அம்மம்மாவைத் தூக்கிட்டு வரப்போன அப்பாவும் செத்துப்பூட்டாரு சொல்லிவிட்டு சிறுமி கண்கலங்கினாள்.

சிவகாமி 'ஏன் பழைசயெல்லாம் கிளறினோம்' என தன்னையே நொந்து கொண்டாள்.

"இங்க வாம்மா... உம் பேரென்ன...?"

"மங்கா, பள்ளிக்கூடத்தில ரீச்சரம்மா மங்களம்னு கூப்பிடுவாங்க"

"நீ கூட காலையில சாப்பிட்டியோ... இல்லியோ?'' சிறுமி இல்லையென தலையாட்டினாள்.

சிவகாமி பயணப்பொதியைத் திறந்து இரு கைகளாலும் துளாவினாள்.

"என்னப்பா, ஏதேனும் ரிசீற்றுக்களை துலைச்சுப்போட்டு அரக்கப் பரக்க தேடுறீரோ!'' மகளைத் தேடிச்சென்ற கந்தர் வந்துவிட்டார்.

"பொக்கற்றுக்கை சில்லறையேதும் கிடக்குதேப்பா''

" ஏன் இப்ப சில்லறைக்காசுக்கு அவசரப்படுகிறாய்?" சட்டைப் பையைத் தடவி, ஐந்துருபா நாணயத்தைக் கையில் எடுத்தார். சிவகாமி தன்னிடமிருந்த பத்துடன் சேர்த்து பதினைந்தாக சிறுமியிடம் கொடுத்தாள்.

"பிள்ளை மங்களம் இதப்பிடி. கடையில பணிஸ் இல்லாது போனால் பாண் வாங்கி ரண்டு பேருமாகச் சாப்பிடுங்கோ''

சிறுமி தயக்கத்தின் பின் அதைப் பெற்றுக்கொண்டு நகர்ந்தாள். அந்தச் சிறிய கண்களில் நிறைந்து நின்ற மகிழ்ச்சியினை சிவகாமி உணர்ந்து கொண்டாள்.

"பிள்ளை மிதிலா, நீயெண்டாலும் மூத்தண்ணாவைப் பற்றியேதும் அறிஞ்சனியே?'' என்று மகளிடம் கேட்க, இல்லை யென்று உதட்டைப் பிதுக்கினாள்.

"அப்ப இனிமேல் .... என்ன செய்கிறதப்பா" சிவகாமி கணவனிடம் கேட்டாள்.

"ஆங்... ஒரு விஷயம் சொன்னவர். அதாவது தொண்ணூற்றைந்தில யாழ்ப்பாண இடம்பெயர்வு நேரம் புதிதாக இயக்க த்தில சேர்ந்த பிள்ளைகள் இம்ரான் பாண்டியன் படையணியிலதான் ஆரம்ப பயற்சியெடுத்தவையாம்.

"என்னப்பா நீங்கள் யோசிக் காமல் கதைக்கிறீயள். மூத்தண்ணா தொண்ணூ றில பயிற்சியெடுத்து ஆயுதத்தோட தானேயப்பா சண்டைக்குப்போனவர்... தொண்ணூத் தொண்டில ஆ.க.வெ சமரிலை வயித்திலை காயப்பட்ட நேரம் ஒரு 'கொம்பனி'ப் பொறுப்பாளராகவெல்லே இருந்தவர். பிறகேனப்பா அவரைத் திருப்பி அடிப்படைப் பயிற்சி முகாமிலை பயிற்சிக்கு விட்டிருப் பினமே?" மிதிலா தகப்பனிடம் இடைமறித்துக் கேட்டாள்.

"பொறு பிள்ளை, பிறகு வயித்துக்காயம் குணமடைய இயக்கத்திலயிருந்து விலகி வீட்ட வந்திட்டானெல்லோ! அதன் பிறகு பொதுமகன் தானப்பா!! தொண்ணூத்தைந்தில சேர்ந்தப்போ ஒரு புதிய போராளியாகத்தான் இயங்க வேணும்... ஆரம்பப் பயிற்சி, இயக்க விதி முறைகளுக்கு ஒழுகுகிறது எல்லாமே ஆரம்பத்தில யிருந்து தான் தொடங்கும்"

" ம்.... இன்னும் எவ்வளவு நாள் தேடியலைய வேணுமோ?'

"சும்மா சலிக்காதையப்பா இப்ப பிரச்சினைகள் மெல்ல தனிஞ்சிருக்கு... எல்லா இடமும் சல்லடை போட்டுத் தேடிப்பார்ப்பம். அடுத்த கட்டமாக அரசியல்துறைச் செயலகத்திலையும் எங்கட விபரத்தைக் குடுத்துப் பார்க்கலாம்.''

"ஆ.....!மறந்து போனீங்களப்பா. மாவீரர் பணிமனையிலும் தொடர்பு கொள்ளச் சொன்னவரெல்லே- இனம் காணப்படாத மாவீரர் பட்டியல்ல..."மிதிலா சொல்லிக்கொண்டே போக, சிவகாமி அதைக் கேட்கப் பொறுக்காது கண்களை மூடினாள்.

"கர்த்தரே அப்படியேதும் ஆகியிருக்கக் கூடாது"

"பிள்ளை உன்ர பாட்டில கதைச்சு அம்மாவைக் கலவரப்படுத்தாதை. எல்லாம் நல்லபடியா நடக்குமென்று நினையுங்கோ அந்தா... புதுக்குடியிருப்பு போர்ட்போட்ட வசு வருகுது. எழும்புங்கோ" உடமைகளைத் தூக்கிக் கொண்டு மற்றவர்களையும் அவசரப்படுத்தினார். கந்தர்.

முகமாலை, பளை, இயக்கச்சி வீதிவழியே வசு விரைந்த போது வித்தியாசம் எதுவும் தெரியவில்லை. தென்மராட்சியைக் கடந்து வந்தபோது தரிசித்தது போன்ற காட்சிகள். தலையிழந்து போன தென்னை பனைகளுடன் ஏனைய பயன்தரு மரங்கள்... குடியிருப்புக்கள் இருந்ததற்கு அடையாளமாக எஞ்சிநிற்கும் அத்திவாரங்கள்.... எல்லாமே அங்கு போலவே இங்கும்!

இரைந்து வீசிய காற்று சனநெருக்கத்தினூடே புகுந்து பயணிகளின் மேனி தடவிச் சென்றது.

இருநூறு மீற்றர் இடைவெளியில் சிவப்பு நிறத்தில் எழுதப்பட்ட அறிவுறுத்தல் பலகைகள் வீதியோரங்களில் நிமிர்ந்து நின்றன. மண்டையோட்டுக் குறியின் கீழிருந்த வாசகங்கள் எச்சரிக்கையூட்டின.

'மிதிவெடிகள் கவனம்'

யன்னலூடாக வேடிக்கை பார்த்து வந்த பயணியொருவர் பத்திரிகையில் படித்ததை இன்னொருவருக்குச் சொல்லிக்கொண்டிருந்தார்.

" தமிழ்ப் பகுதிகளில் நாற்பது லட்சம் மிதிவெடிகள் விதைச் சிருக்காம்''

"அப்ப தமிழருக்கு தலைக்கு நாலு, அஞ்சு எண்ட விகிதத்தில விதைச்சிருக்கெண்டு சொல்லுங்கோ! நெல் விளைஞ்ச பூமியில இனி மிதிவெடிகளைத்தான் அறுவடை செய்யவேணும் பாருங்கோ!!'' இன்னொரு பயணி நகைச்சுவையாக கூறிக்கொண்டார்.

மிதிலா இதுவரை சமூகக்கல்விப் பாடத்தில் கேள்விப்பட்டிருந்த இடங்களை நேரில் தரிசித்தபடி வந்தாள். இடையில எழுந்த சந்தேகங்களுக்கு கந்தரிடம் கேட்டுத் தெளிந்தாள்.

"இந்தப்பிரதான வீதி எதுவரைக்கும் அப்பா செல்கிறது?"

"முதலில வாறது பரந்தன் அடுத்து கிளிநொச்சி, அங்கால மாங்குளம், அப்பிடியே தொடர்ந்தால்போல் விளக்கு வைச்ச குளம் , புளியங்குளத்தோட தடைமுகாம்"

"இவ்வளவு ஊர்களுக் கிடையில தொண்ணூறு மைல் நீளமேயப்பா!" ஆச்சரியப்பட்டாள்.

"வன்னியில ஒவ்வொரு ஊர்களும் வலு விசாலமானவை பிள்ளை. பெரும்பாலும் குளங்களின்ரை பெயரிலைதான் ஊர்களும் நிலை பெற்றிருக்கு "

"உப்பளத்துக்கு நிறையத்தூரம் போக வேணுமே?' இதுவரை பாடத்தில் படித்து கற்பனையில் கண்டிருந்த உப்பளத்தைப்பற்றி கேட்டாள்.

"அது பரந்தனுக்கு முன்னுக்கு உள்ளது. இப்ப அங்க உப்பு விளைஞ்சிராது - மண்மேடு தான் எழுந்திருக்கும்"

"எண்பது காலப்பகுதியில நீங்கள் வேலை செய்யேக்க எங்கையப்பா தங்கிறனீங்கள்"

"நாங்கள் இருபத்தைஞ்சு 'சீ.'.ப் ஒபீசர்மார்' அதனருகில தனி குவாட்டசில தங்கிறனாங்கள்... லேபர்சுக்குரிய தங்குமிடம் தூர அமைஞ்சிருந்தது.''

சிவகாமி இந்த உரையாடலில் பங்கெடுக்கவில்லை. 'காணாமற்போன மகனின்' நினைவுகளில் மூழ்கியிருந்தாள்.

எதிரே ஆங்கில 'வை' வடிவில் பெருந்திருப்பம் கந்தர் உற்சாகமானார்.

"இது தான் பிள்ளை இயக்கச்சிச் சந்தி நேர் வீதி இப்படியே புல்லாவெளிக்குப் போகுது " பின்னர் மகளுக்கு மட்டும் "தொண்ணூத் தொண்டில ஆ.க.வெ சண்டைநேரம் புல்லாவெளியிலிருந்து முன்னேறிய இராணுவத்தோட இந்த இடத்தில பெரும் மோதல் வெடித்தது. மூத்த அண்ணாவும் பங்கெடுத்தவன். அந்தச் சமயத்தில தான் வயிற்றில வெடி கொழுவினது"

கந்தர் கூறியது வியப்பை ஏற்படுத்தியது. கூடவே கந்தர் கூறிய விதம் சிரிப்பை வரவழைத்தது.

" நீங்கள் இப்பவும் இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில இருக்கிற நினைப்பில அருகிலயிருக்கிறவைக்கு கேட்காதமாதிரி பறையிறியள்"

அதைக்கேட்டு கந்தர் அசடு வழிந்தார்.

வசு திருப்பத்தில் வேகம் குறைந்து திரும்ப முயல, சிவகாமியிடம் புதிதாக பரபரப்பொன்று உருவாகியிருந்ததைக்கண்டு கந்தர் என்ன ஏதென்று கேட்க நினைக்க வெளியே 'படார்' என பெருமோசை.

நீண்ட நாள் அமைதிக்குப் பின்னர் கேட்ட வெடியோசை அனைவரையும் ஒரு கணம் நிலைகுலைய வைத்தது.

திடுக்குற்ற கந்தர் வெளியே பாத்தார். சாரதியின் பக்கச் சக்கரம் காற்றுப்போயிருக்கு பயணிகள் வெளியே உதிர்ந்தார்கள்.

"இஞ்சேருங்கோ வேகமாக வாங்கோ. பிள்ளை நீயும் இறங்கி வா"

"என்னப்பா திடீரென்று பரபரக்கிறாய்...... விஷயத்தை முதல்ல சொல்லன்"

"எங்கட வசுவிற்குப் பின்னால மிதிவண்டியில வந்துகொண்டிருக்கிற பெடியனைத் தெரியுமே ஆரெண்டு யோசிச்சுப்பாருங்கோ? எனக்கெண்டால் கையும் காலும் பதறுது"

கந்தர் கண்களை இடுக்கிக்கொண்டு

> ''கண்ணனை இறுதியாக இந்த இடத்தில் தான் வழியனுப்பி வைச்சனான்.'' அவன் காட்டிய இடத்தை மூவரும் எட்டிப் பார்த்தனர். இடிந்த காவலரண்கள், தூக்கியெறியப்பட்ட பனை மரங்கள், சிலிப்பர் கட்டைகள்..... நீண்டு செல்லும் மூவிங் பங்கர்கள்..... அனைத்துமே நீண்டகால ஆக்கிரமிப்பின் சின்னங்களாக.....

நான் நேரத்தை விரயமாக்கினேன்; இப்பொழுது நேரம் என்னை விரயமாக்குகிறது. - வில்லியம் ஷேக்ஸ்பியர்

தொலைவைப்பார்த்தார்.

“கிட்ட வரட்டும் பார்ப்பம் - ஆராயிருக்குமெண்டதை”

“எனக்கு எந்தச் சந்தேகமுமில்லைப்பா. வந்து கொண்டிருக்கிறது தொண்ணூத்தைஞ்சுக்கு முதல் குகனோட வீட்டுக்கு வந்து போகிற பெடியனப்பா. உத்துப்பாருங்கோ புரியும்!”

“ஆர் அருணைச் சொல்லுறியே.. அவன்வாட்டசாட்டமான சிவலைப் பெடியனெல்லே.... எதுக்கும் அருகில வரட்டும் பார்ப்பம்.”

மிதிவண்டி நெருங்கி வர மிதிலாவும் சந்தோசத்தினால் பூரித்துப்போனாள். “அம்மா சொன்னது மெத்தச்சரியப்பா வந்துகொண்டிருப்பது அருண் மாமாவேதான்.

அருண் மிதிவண்டியிலிருந்து திகைப்போடு இறங்கினான். வலது தோளில் இருந்து வழுக்கிச்சென்ற “ரைபிளை” சரிசெய்து முதுகுப் புறமாகத் தொங்கவிட்டான்.

“எப்படித்தம்பி இருக்கிறீர் ஆள் அடையாளம் முற்றிலுமாக மாறிவிட்டிருக்கு.....” ஒரு தகப்பனின் வாஞ்சையோடு கந்தர் வினவினார்.

“பிள்ளை நல்லா மெலிஞ்சு கறுத்துப்போனான்” சிவகாமி பரிவோடு கன்னத்தை வருடினாள்.

“வலது கையில் என்ன மாமா நடந்தது. அது தன்பாட்டில் செயற்பாடில்லாமல் தொங்கிக் கிடக்குது

“மிதிலாக்குட்டி நல்லா வளர்ந்து விட்டாள். மோட்டார்ச் சைக்கிளிலை ஏத்திக் கொண்டு போகச் சொல்லி புழுதியில் விழுந்து அடம்பிடிக்கிற பிள்ளை திடுதிப்பென்று பெரிய மனுசியாகி முன்னால் நிற்கின்றபோது ஆச்சரியமாக உள்ளது!” என்றான்.

“ஏன் வீதியில் நிற்பான்.... வாருங்கோ மரநிழல்ல இருந்து கதைக்கலாம்.” கந்தர் கூற, மிதிவெடிகள் கவனம் ‘போர்ட்டுக்கு’ முன்பாக சரிந்திருந்த மரத்தில் அமர்ந்தார்கள்.

சிவகாமி வீட்டில் செய்து வந்த பலகாரங்களில் கொஞ்சம் எடுத்து பரிமாறினாள்.

“காலிலயும் பெரிய காயமோ தம்பி, கிந்தி கிந்தி நடக்கிறாய்? புறப்பாதத்திலிருந்து மேலெழுந்து ஜீன்ஸ் விளிம்பினுள் காணாமற் போகும் தழும்பைப் பற்றிக் கந்தர் கேட்டார்.

அவன் சற்று நேரம் எதுவும் பேசவில்லை.

“ஏன் தம்பி பதில் சொல்லுகிறாயில்லை... உந்தக் காயத்தால உனக்கு பெரிய தாக்கமோ தம்பி?”

“ஆமாம் ஐயா. வடு காயத்திலயில்ல. மனதில! என்றைக்குமே அழிக்க முடியாத சுமை அது.”

“என்ன தம்பி சொல்லுகிறீர்.... எங்களுக் கொண்டால் ஒண்டும் விளங்கேல்ல.”

“மன்னியுங்கோ ஐயா....அம்மா நீங்களும் தான்..”சன்னமாக ஒலித்தது அவன் குரல். கோல்சர் சிப்பை விடுவித்து பழுப்பு வண்ண குறிப்பேடு ஒன்றை வெளியே எடுத்தான்.

மிதிலா அதை வாங்கி அவசரமாக அட்டையைப் பிரித்தாள்.

“கண்ணன் - விசேட தாக்குதலணி அம்மா அண்ணாவோட டயறி” உற்சாகமானாள்.

சிவகாமி கண்களை ஒடுக்கிக் கொண்டு உற்றுப் பார்த்தாள் சந்தேகமில்லை - அது மூத்தவனின் குண்டுகுண்டான எழுத்துக்கள் தான்.

கந்தரது சிந்தனையில் ‘பொறி தட்டியது’ பார்வையைத் திருப்பி வானத்தில் தனித்து பறந்து கொண்டிருந்த பறவையை வெறித்தார்.

“வயிற்றுக் காயத்திற்குப் பிறகு இயக்கத்திலிருந்து விலகி வீட்டில் நின்றதும்.....பிற்பாடு சூரியக்கதிர் நடந்த நேரம் மீள இணைந்ததையும் நான் முன்னர் அறிந்திராதவையம்மா. அந்நேரம் நான் வேறு துறையில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். தாக்குதலணியில கண்ணனைக் கண்டதும் ஆச்சரியப்பட்டு போனனம்மா. பிறகு பழைய மாதிரி ஒரு அணியிலதான் நின்றனாங்கள்.”

“எது வரைக்கும்....”

“போன வரியம் ஆனையிறவு முகாமில புலிக்கொடியேறியதற்கு முதல் நாள் வரைக்கும் அம்மா” அவன் குரல் நலிவடைந்திருப்பதை சிவகாமியால் உணர முடிந்தது.

“அப்படியென்றால்....”

“கிளாலிக் கடல்வழியாக தப்பியோடின இராணுவத்தை எதிர் கொண்ட சண்டையில கண்ணன் எங்களை நிரந்தரமாக......” அருண் துயரத்துடன் இடைநிறுத்தினான்.

இதைக் கேட்டதும் “அண்ணா... மகனே இனி உன்னைக் காணவே முடியாதா...ஐயனே நான் என்ன செய்வேன்...” அந்தக் குடும்பத்தின் பிரிவுத்துயர் அங்கு வியாபித்தது.

சிவகாமியின் கையிலிருந்த தோற்பை நழுவி தரையில் விழுந்தது. அதனுள்ளிருந்த பொலித்தீன் பை வயிறுவெடிக்க பயற்றம்மா உருண்டைகள், தட்டு வடைகள் வெளியே சிதறின. நீண்ட காலத்திற்குப் பின் சந்திக்கப் போகும் மகனுக்காக பக்குவமாக செய்யப்பட்டவை.

“இவ்விடயத்தை இந்நாள் வரை அறியத் தராது விட்டமைக்காக என்னை மன்னியுங்கோ அம்மா...ஐயா..!” உண்மையில் அவன் விழிகளிலும் நீர் கோர்த்திருந்தது.

“ம்.....” நீண்ட பெருமூச்சின் பின் கந்தர் சொன்னார்:

“நாங்கள் செய்தி அறிஞ்சிருந்தாலும் என்ன செய்திருக்கேலும் தம்பி....நாலு திசையிலும் இராணுவ வேலிக்குள் அடைபட்டபடி ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டு அழத்தானும் முடியாத நிலை!”

“அண்ணையின்ர வித்துடலை எங்கை விதைச்சிருக்கு அருண் மாமா” டயரியைப் புரட்டிக் கொண்டிருந்த மிதிலா கேட்டாள்.

“விசுவமடு துயிலும்

**கோணாவில் கிருபா**

இல்லம்...‘இ’வரிசையில.....”

“சிவகாமி, எழும்புமப்பா இடிஞ்சு போய் இருக்கிறதால மேற்கொண்டு ஆகப்போறது ஏதுமில்லை. வெளிக்கிடும்.....விசுவமடுவுக்குப் போவம்.”கந்தரின் குரலில் தன்னைத் தேற்றிக்கொண்டமை தெரிந்தது.

“நானும் கூட வாறன் ஐயா” எதிர்த்திசையில் சென்று கொண்டிருந்த போராளியை அழைத்து ஓட்டிவந்த சைக்கிளை ஒப்படைத்துவிட்டு அவர்களுடன் வசுவில் ஏறினான். அவர்கள் சாப்பிடாது வைத்துவிட்டு வந்த பலகாரங்களை சில காகங்கள் கவர்ந்து சென்றன. முகமாலையிலிருந்து வந்தவர்களில் அரைவாசிப்பேர் இடையில் வந்த வாகனங்களில் தொற்றிச் சென்றிருந்தார்கள். எஞ்சியவர்கள் ஆசனங்களில் அமரக் கூடியதாய் இருந்தது.

அதன் பின் அவர்களால் சாவசமாக பேசிக் கொள்ள முடியவில்லை. ஒரே இறுக்கம் உள்ளுக்குள் நிறைந்திருந்தது.

மிதிலா டயரியின் கடைசிப் பக்கத்துடன் பைன்ட் செய்திருந்த கண்ணனின் சீருடை தரித்த படத்தை அடிக்கொரு தடவை விரித்துப் பார்த்தாள். கறுத்த மீசை அழகு சேர்க்க.... தேசியத் தலைவர் அருகில் சிரித்தபடி எடுப்பாக நின்றான். அவளுக்கு பரிச்சயமாய் இருந்த போது அண்ணாவுக்கு மீசை முளைக்கவில்லை. படத்தில் என்ன கம்பீரமாய் தெரிகிறான்.... சாகும் போதிற் கூட இப்படித்தான் இருந்திருப்பனோ?

வீதியில் பெயின்ட் மங்காத நடுத்தர வாகனங்கள் மனிதர்கள், சுமைகளுடனும் யாழ் நோக்கியும்.... சில அங்கிருந்து தென் பகுதியை நோக்கிய திசையிலும் விரைந்தன.

எதிரே சிறு பள்ளம் எதிர்ப்பட வசு வேகம் குறைந்தது. அருண் யன்னலுக்கு வெளியே தலையை நீட்டி எதையோ தேடினான்.

“கண்ணனை இறுதியாக இந்த இடத்தில் தான் வழியனுப்பி வைச்சனான்.” அவன் காட்டிய இடத்தை மூவரும் எட்டிப் பார்த்தனர். இடிந்த காவலரண்கள், தூக்கியெறியப் பட்ட பனை மரங்கள், சிலிப்பர் கட்டைகள்..... நீண்டு செல்லும் மூவிங் பங்கர்கள்..... அனைத்துமே நீண்டகால ஆக்கிரமிப்பின் சின்னங்களாக..... கூரையிழந்து காணப்பட்ட கட்டடங்களைக் காட்டி மினி முகாம்கள் என்றான்.

வீதியின் வலது பக்கம் ஐந்நூறு மீற்றரிலும் நீளமான மண் அணை அரைப்பனை உயரத்திற்கு எழுந்து நின்றது. “அது ஆட்டிலறி ரெஜிமென்ட்”நிலை கொண்டிருந்த பகுதி - அவர்களைப் பொறுத்த வரைக்கும் ‘இரும்புக் கோட்டை போன்றது’ என்றான். எண்ணிலடங்காதவர்களின் இல்லிடங்களை அழித்த... வகை தொகையின்றி உயிர்ப்பலி எடுக்கக் காரணமானது முகவரியிழந்து கிடக்கும் கோலம்!

ஆனையிறவுப் பெயர்ப் பலகையும் சேதங்களைத் தாங்கி மங்கிக் கிடந்தது. பிரயாணிகள் கேட்டதற்கிணங்க ‘றைவர்’ வாகனத்தின் வேகத்தை குறைக்க முயல கடாமுடாவென சத்தம் பிறந்தது.

“பிறேக் லிவர் உடைச்சுப் போட்டுது” றைவர் புறுபுறுத்தபடி சாக்கொன்றைச் சுமந்து கொண்டு சாவிப் பெட்டியுடன் கீழிறங்கினார்.

இனி வெளிக்கிட காலோ அல்லது அரை மணித்தியாலமோ செல்லலாம்.

பயணிகள் வீதியில் இறங்கி ஆனையிறவுப் பிரதேசத்தை வியப்போடு பார்த்தனர்.

இவர்களைப் போல எதிர்த் திசையிலிருந்து வந்த சிங்களக் குடும்பமொன்றும் ஆனையிறவை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றது. அவர்கள் யாழ்ப்பாணம் போகிறார்கள். அந்தக் குடும்பம் இவர்களை நெருங்கி வந்தது.

“நாங்கள் இப்போது தான் இந்தப் பகுதிக்கு வருகிறோம்.” சிநேக பூர்வமாக புன்னகைத்தார் அந்தக் குடும்பத் தலைவன்.

“நாங்கள் கூட பதினைந்தாண்டுகளுக்குப் பிறகு இன்று தான் இவ்விடம் வருகிறோம். இங்கிருந்த உப்புக் கூட்டுத் தாபனத்திற் தான் முன்னர் வேலை பார்த்தேன்.” என்று பதிலளித்தார் கந்தர்.

“அப்படியா, அது இருந்த அடையாளமே!” தெரியவில்லை ஆச்சரியப்பட்டார்கள்.

“இன்று அது இருந்திருப்பின் எங்கள் நாட்டுப் பொருளாதாரத்தில் முக்கிய பங்குவகித்திருக்கும். என் பெயர் பண்டார....போரை எப்போதுமே வெறுப்பவன்! போர் காரணமாக நிறைய ஆட்கள், பொருள் பண்டங்களை இழந்திட்டம்.” வெளிப்படையாக பேசினார்.

கந்தர் வரட்சியாக புன்னகைத்தார். “தமிழர்கள் மட்டும் என்ன வீம்புக்காகவா எதிர்க்கிறார்கள்?”

“இது என்னோட மனைவி சுமண. இவர்கள் வணக்கம் சொன்னார்கள்.

“எங்கள் ஒரே ஆண் பிள்ளை - ஆட்டிலறி ரெஜிமென்டில இருந்தவர். சென்ற ஆண்டு இங்கு தான் பணியிலிருந்தார். முகாம் தாக்கப்பட்ட போது காணாமல் போய்விட்டாரென எமக்குக் கூறப்பட்டது. அதன் பிறகு நாம் அவரைப்பற்றிய தகவலெதையும் பெறவில்லை. எங்களுக் கெண்டால் அவர் உயிரோடு இருப்பதாக நம்பிக்கை இல்லை.” என்று சுமண வேதனையோடு கூறினாள். அவள் பார்வை முன்பு பார்த்த மண் அணைக்குவியலில் நிலைத்திருந்தது. விழியோரங்களில் நீர் கோர்ப்பதை இவர்களாலும் பார்க்க முடிந்தது.

கந்தர் பதிலெதுவும் கூறவில்லை.

வசுவின் இயந்திரம் உறுமும் ஒலி கேட்டது. அதில் வந்தவர்கள் ஏறிக்கொண்டார்கள். கந்தர் குடும்பம் அந்தச் சிங்களவர் குடும்பத்திடமிருந்து விடைபெற்றது.

இப்போது இவர்களுக்கு இதுவரை புரியாதிருந்த ஏதோவொன்று புரிந்து விட்ட தெளிவு! இதுவரை மூடப் பட்டிருந்த சாளரமொன்று திடுதிப்பென திறந்து கொள்ள ஆதவனின் அத்தனை கதிர்களும் அதனூடே பிரவேசிப்பது போன்ற புதுமை.

ஆசனத்தில் அமர்ந்தபடி சிவகாமி அருணிடம் சொன்னாள்.

‘தம்பி, கிளிநொச்சியிலிருக்கிற உங்கட முகாமுக்கு முதல்ல போவம்....இந்தப் பலகாரங்களைக் கொடுத்து போராளிகளோட அளவளாவ வேணும். கண்ணன்ர போராட்ட கால வாழ்க்கையைப் பற்றி நிறைய அறிய வேணும்..... அவனின்ர சாதனைகளைப் பற்றி கேட்க வேணும்....பின்னேரம் போல விசுவமடு துயிலுமில்லத்துக்கு எல்லாருமாகப் போய் பிரார்த்திப்பம்......”

அருண் பதிலுக்கு ‘ஆம்’ என தலையசைத்தான்.

வசு நேரான தார் வீதியில் வேகமெடுத்து ஓடத் தொடங்கியது.

(ஒருபோராளியின் வாழ்விலிருந்து)

●

# நூல்நோக்கு



நூல் : ச.வே.பஞ்சாட்சரம் கவிதைகள்

ஆசிரியர் : ச.வே.பஞ்சாட்சரம்

விலை : 200/=

வெளியீடு : யாழ். இலக்கிய வட்டம்

சமூகம், காதல், சான்றோர் பண்டிகை ஆன்மீகம், இயற்கை. மெய்யியல், மழலை இன்பம், கதைக் கவிதை என்ற பகுதிகளாக கவிஞர் தனது கவிதைகளை தொகுத்துள்ளார். பஞ்சம் தலைவிரித்தாடும் சமூகத்தில் உயிர் வாழ விரும்பும் ஒருவன் உழைப்பின் அவசியத்தை உணர வேண்டும். தொழில் பலவகையாக இருந்த போதும் எல்லாத்தொழிலும் ஒரே வகையானது. தொழில்கள் வேறுபாடு என ஒன்று இல்லை. அந்நிய மோகத்தை அகற்றி ஆடம்பரமாக வாழ்வதைத் தவிர்த்து அமைதியாக வாழவேண்டும். உயிரோடு இருக்கும் போதே பெற்றோரை மதிக்க வேண்டும். இரத்ததானம் செய்ய வேண்டும். துயர் துடைக்கும் மானுடம் வாழவேண்டும். ஆசை, வெறி, கோபம், கொடுமை, ஆளும்நெறி, சோம்பல் நாசம் பெறவேண்டும். சாக்கடையைப் போக்கப் பாரதியைப் போல் பாட வேண்டும். “வீழ்வோம் எழுவோம் வீழ்விலும் வாழ்வோம்.” என்பதாய் கவிஞரின் சமூகப் பார்வை அமைகிறது.

கவிஞரின் காதல் பாடல்கள் இன்பம் பயக்கும் பாடல்களாக உள்ளன. அகத்திணை இலக்கியங்களைப் பாடுவதற்கு ஒரு மரபு உண்டு. அகத்திணை மரபைப் பின்பற்றி அவ்விலக்கியங்கள் பாடப்படுதல் மரபு. அம்மரபுக்கு இசைவாக அன்பின் ஐந்திணை, கைக்கிளை, மற்றும் தூதுப் பாடல்களையும் இவரின் கவிதைத் தொகுப்பில் காணமுடிகிறது.

சான்றோர் என்ற பகுதியில் உள்ள இவரின் பாடல்கள் வள்ளுவர், காந்தி, விபுலானந்தர், தந்தை செல்வா முதலான சான்றோரைப் போற்றி பாடுவதாக உள்ளது. இக் கவிதைகளில் இருந்து அவர்களிடம் கவிஞருக்கு இருந்த மதிப்பு புலப்படுகிறது.

பண்டிகை என்னும் பகுதியில் தீபாவளி, தைப்பொங்கல் சமயங்களில் வெளிவந்த கவிதைகளாக உள்ளன. விடிவுப் பொங்கல் என்ற கவிதையில் பல்வேறு பொங்கல்களை குறிப்பிடும் கவிஞர் “நாள் நெருங்கிவர வேண்டும் விடிவுக்கீதம் நாம்பாட என்றுரைப்போர் நயக்கும் விடிவுப் பொங்கல்” என பொங்கல்களைக் குறிப்பிடுகிறார்.

ஆன்ம வலிமை குறைவால் மலியும் இச்சைகள் உந்த நலிகின்றவர்களையும், தருமப் பிரசங்கங்களை இன்ன வகையில் செய்ய வேண்டும்எனவும் ஆலயங்களுக்கு அன்பளிப்பு வழங்குவோர் தமது பெயரையும் விளம்பரப்படுத்தும் இழி நிலைமையும் ஆன்மீகம் என்ற பகுதியில் கவிதைகளாக காணமுடிகிறது.

இயற்கையின் பல்வேறு அம்சங்களையும் கவிஞர் பாடியுள்ளார். ‘வன்னித் தமிழ் நாடு’ என்ற கவிதையில்

“அன்னைத் தமிழ் நாடு
ஆண்மை திகழ் நாடு
முன்னம் புகழ் தாங்கும்
எங்கள் வன்னித் திருநாடு” என வன்னியின் சிறப்பையும் உரைக்கின்றார்.

கதைக்கவிதை என்ற பகுதியில் ‘கயமைக்கு முன்னால் கனன்று நிற்கும்” தன்மை பற்றி உரைக்கின்றார். கடமை முடியட்டும், என கடமைக்கு முதலிடம் வழங்குகின்றார்.

மெய்யியல் என்ற பகுதியில் ‘பல கோடி’ என்ற கவிதை மண்டைக்கனம், சோர்வு கொள்ளாது ஊக்கம் காட்டிமகிழ வைத்திடுவோம் என்கிறார். ‘தொண்டு வாழ்க்கை’ என்னும் கவிதையில்

“பிறர்க்குதவும் வாழ்வு
பெருமைமிகும் வாழ்வு
சிறந்ததிது போலே
தீங்கில் காக்கும் உலகம்”

என தொண்டு புரிந்து வாழ வேண்டும் என்கிறார்.

மழலை இன்பம் என்ற பகுதியில் மழலைகளுக்கு ஏற்ற பாடல்கள் சிலவற்றை காணமுடிகிறது. மழலைகள் நினைவில் வைத்திருக்கத் தக்க வகையில் இப்பகுதியில் உள்ள கவிதைகள் எளியநடை, சாதாரண சொற்கள், ஓசைநயம் என்பவற்றை உடையதாக விளங்குகிறது.

மரபுக் கவிதையில் ஊறி அதனை அறிந்து அனுபவித்து விட்டு புதுக்கவிதை எழுதுபவர்களிடம் ஒரு ஒழுங்கு இருப்பது இயல்பு. அவ்வொழுங்கு ச.வே.யின் கவிதையில் கண்டு கொள்ள முடிகிறது. புதுக் கவிதை சிறப்படைவது அதன் தலையங்கத்தில் என்ற அறிஞர் கருத்திற் கேற்ப இவரின் புதுக்கவிதைத் தலையங்கங்கள் சிறப்பாய் அமைகின்றன. பாவம் ஏழை என்ற கவிதையில் நாகரீகமோகம் கொண்டு பெண்கள் அணியும் அரைகுறை ஆடைகளை ‘பன்னாடை’ எனக் கிண்டல் செய்கிறார். விலையேற்றம் என்ற கவிதையில் ஒன்றுக்கு மட்டும் விலையிறக்கம். அது தான் மனித உயிர் என மனித உயிரின் அவலத்தை உரைக்கின்றார்.

இவ்வாறு ச.வே. யின் கவிதை இயல்புகளின் ஊடாக நகைச்சுவை உணர்வும் வெளிப்படுவதை காணமுடிகிறது. அதாவது குடிகாரன் ஒருவன்கள் வாங்குவதற்கு காசில்லாத நிலையில் தனது வேட்டியை அவிழ்த்துக் கொடுக்க முன் வருகிறான். வேட்டியை அவிழ்த்துக் கொடுத்து கள் வாங்கிக் குடிக்கும் இயல்பை சித்திரிக்கின்றார். பஸ் வண்டியில் போகும் பயண அனுபவங்களை நகைச்சுவையூடாக விளக்குகின்றார். திருமண வீட்டில் திருமணத்தினை விரும்பாத அயலவர் ஒருவர் திருமணத் தம்பதிகள் உணவில் அதிக தூளினை கலந்து கொடுக்கும் நிகழ்வினை நகைச் சுவையாகத் தருகின்றார்.

போறான், புலம்புறான், என்ற பேச்சோசை சொற்களை கையாளுகின்ற கவிஞர் அச் சொற்களை இலக்கண முறைப்படுத்தி கையாளுகின்ற தன்மையைக் காணமுடிகிறது. “போறான், புலம்புறான் இவ்வாறு சொற்களை கையாளும் does not என்பதை does n't என்று எழுதும் ஆங்கில மரபுக்கு இசைவதாக அமைகிறது. ச.வே. யின் கவிதைகளை முழுமையாக நோக்குகின்ற போது வள்ளுவரின் போதனைகளையும், பாரதியின் உணர்ச்சி வேகதையும் தேசிய விநாயகம் பிள்ளையின் மனிதாபிமானப் பண்பையும் தாயுமானவரின் பராபரமே என்ற ஆன்மீகக் குரலையும் தரிசிக்க முடிகிறது எனலாம்.

பூலோகராஜா நகுலன்
B.A(Hons)




## குட்டிக்கதை

## பேராசையை உணர்ந்த பெண்

சோலையான ஓர் வளங் கொழிக்கும் ஊரில் வண்ணன் என்ற ஏழை ஒருவன் இருந்தான். அவன் மிகவும் நல்லவன். அவன் மனைவி எழிலோ ஒரு பேராசைக்காரி. அத்துடன் தான் மிகுந்த அழகி என்றும் தன் கணவன் தனக்குப் பொருத்தமே இல்லாதவன் என்றும் நினைத்தாள். இதனால் தன் கணவனை எப்போதுமே ஓர் எடுபிடி போல நடத்துவாள்.


ஒரு நாள் மனவேதனையோடு காட்டிற்குச் சென்றான் வண்ணன். அங்கே ஒரு கரடி ஒன்று கிழவன் ஒருத்தனைத் துரத்திக்கொண்டு வந்தது. என்னைக் காப்பாற்றுங்கள் என்று கிழவன் ஓடி வந்தான்.

வண்ணன் கையில் ஆப்பிட்ட தடியொன்றை எடுத்து கரடியின் தலையிலே அடித்தான். அடிபட்ட கரடி கத்தியபடியே ஓடியது. கிழவன் வண்ணனுக்கு நன்றி கூறி விட்டு மூன்று விதைகளைக் கொடுத்தான்.

இந்த விதைகளை நீ என்ன வேண்டும் என்று நினைத்துக் கொண்டு கீழே போடுகிறாயோ அது உனக்கு கிடைக்கும் என்று சொல்லிவிட்டு கிழவன் மறைந்து விட்டான்.

மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு வந்த வண்ணன் மனைவியிடம் விஷயத்தைச் சொன்னான். உடனே இப்பவே போடவேண்டும் என்று அவசரப் பட்டாள் எழில்.

“வாழ்க்கைக்குப் போதுமான பொன் வேண்டும்” என்று கேட்கப் போகிறேன் என்றான் வண்ணன்.



மனைவி சொன்னாள் “நீ முதலில் ஆணழகனாக மாற வேண்டும் பிறகுதான் பொன் பொருள் எல்லாம்” என்றாள் எழில்.

“ஏன் எனக்கென்ன குறைச்சல்?” என்றான் வண்ணன். “பணம், பொருள் வந்தவுடன் நான் இளவரசி மாதிரி இருப்பேன். அப்போது நீ இந்த முஞ்சியுடன் இருந்தா நல்லா இருக்காது. என்றாள் எழில்.

இப்படி சண்டை முற்றவே ஆத்திரமடைந்த வண்ணன் சண்டையை நிறுத்து என்பதற்காக நாய் போல குறைத்துக்கொண்டு நிற்கிறாய் என்று சொல்லவும் அவன் கையிலிருந்த விதையை எழில் பிரிக்க முயற்சிக்க அது கீழே விழுந்தது. எந்த நேரமும் நாய் போல குரைத்தபடியே இருந்தாள் எழில் இவளின் நிலையைக் கண்டு வண்ணன் பயந்தான். பயந்து போன எழிலும் நாய்போலக் குரைக்கக் கூடாது என்று சொல்லி இன்னொரு விதையைப் போடுங்கள் என்றாள். அப்படியே செய்தான். அடுத்த நிமிடம் எழில் ஊமையாகி விட்டாள். அவர்கள் திடுக்கிட்டனர். அவள் அழுதபடியே சைகை மூலம் தான் கதைப் பதற்காக விதை ஒன்றைக் கீழே போடவும் என்றாள். அவன் விதையைக் கீழே போட்டான்.

அவள் மீள தன் சுய உருவத்திற்கு வந்து விட்டாள்.

முகத்திலே கைகளால் அடித்து பெரும் ஓலமிட்டு அழுதாள். என்னோட பேராசையாலும் அழகின் மீது கொண்ட காமத்தாலும் தான் நமக்கு கிடைத்த அருமையான சந்தர்ப்பத்தை வீணாக்கி விட்டேன். என்னை மன்னிச்சிடுங்கள் இனிமேல் நான் உங்கள் அழகை. உங்களுக்கு நல்ல மனைவியாக வாழ்வேன் என்றாள். அப்படியே செய்தாள். இருவருக்கும் வாழ்க்கை இனித்தது.

மனமகிழ்ச்சி பணத்தில் இல்லை அவரவர் மனதைப்பொறுத்தது. “போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து” என்பதை உணர்ந்து இன்புற்று வாழ்ந்தனர் வண்ணனும் எழிலும்.

S.T உமா.கோணாவில்

## வாரம் ஒரு குறள் அறிவோம்



நம்மை ஒருவர் துன்புறுத்துகின்ற போது நாம் எப்படித் துன்படைகின்றோமோ, அதே போல அடுத்தவர் துன்படையக் கூடியவாறு நாம் நடந்து கொள்ளக்கூடாது எமக்கு ஒருவர் உதவி புரியும் போது நாம் எப்படிச் சந்தோசமடைகின்றோமோ, அதேபோல அடுத்தவர் சந்தோசமாக இருக்க நாம் உதவ முயல வேண்டும். எனக்கு ஒரு முதலாளி இருக்கக் கூடாதெனில், நான் யாருக்கும் முதலாளியாக இருக்கக்கூடாது. நான் ஒருவருக்கும் அடிமையாக இருக்க முடியாதெனில் எனக்கு ஒருவரும் அடிமையாக இருக்கக் கூடாது. நான் சுதந்திரமாக இருக்க விரும்பினால், அடுத்தவரும் சுதந்திரமாக இருக்க வழிவிடவேண்டும். சமயங்களும் கூட இதனையே வலியுறுத்துகின்றன. வள்ளுவரும் இதனையே தனது குறளில் பின்வருமாறு கூறியுள்ளார்.

**“வலியார்முன் தன்னை நினைக்க தான்**
**தன்னின் மெலியார் மேல் செல்லுமிடத்து”**

## ரதனும் சுதனும்




ரதன்: எமது உடலில் வியர்வை வருகிறதே எவ்வாறென்று உனக்குத் தெரியுமா?

சுதன்: உடலின் முக்கியபணிகளில் ஒன்று வியர்வையை வெளியேற்றுவது இதனால் உடலில் உள்ள சில அழுக்குகள் வெளியேற்றப்படுகின்றன. அத்துடன் உடலின் வெப்பநிலை போதுமான அளவு கட்டுப்படுத்தப்படுகிறது. அதாவது வெப்பத்தை இழக்க வேண்டும் என்று உடல் விரும்பினால் அது வியர்வையை வெளியேற்றுகிறது. கோடைகாலத்தில் மட்டுமல்ல குளிர்காலத்திலும் வியர்ப்பது உண்டு கோடையில் அதிகமாக வியர்க்கும். குளிர் காலத்தில் குறைவாக வியர்க்கும். கடின உழைப்பினால் திடீரென்று உணர்ச்சிவசப்படுவதனாலும் வியர்வை வரும் உடல் முழுக்க வியர்வையை வெளிக்கொணரும் சுரப்பிகள் இருக்கின்றன. இவற்றின் எண்ணிக்கை 10 இலட்சத்திற்கும் அதிகம் அக்குள் உள்ளங்கை பாதம் ஆகிய பகுதிகளில் இவற்றின் எண்ணிக்கை மிகுதி. அதனால் இந்த உறுப்புக்களில் மட்டும் வியர்வை சற்று அதிகமாகவே வரும் வியர்வையில் 98 சதவீதம் நீர் 2 சதவீதம் இரசாயனப் பொருட்கள் இந்த இரசாயனப் பொருட்களில் சோடியம் குளோரைட் சாதாரண உப்பு யூரியா சல்பேற்று கொழுப்புச்சத்து நிறைந்த அமிலங்கள் ஆகியவை இருக்கின்றன.

ஆ. மோகனதாசன். [illegible] வித்தியாலயம்.

## பள்ளிக்காலம்...



கல்விக் கடலில் ஒளி வீசி
கலங்கரையாய் வழிகாட்டி
உயர் படிப்பு- வழி-(படிக்க)-
உருவாக்கியவர் ஆசிரியர்கள்
நல்ல பல உள்ளங்கள்
நாம் கற்ற பாடசாலையில்
சிரிக்கின்ற கபடமில்லை-பூக்களில்
சிந்தனை சிலரின் உயர்படிப்பு.
பலரின் நினைவுகள்-என்றும்
பாடசாலை வளாகம் வரை
வாழ்வில் உயர்வோம்-இனி
வாழ்வே போகுமிடம் நாம்
நன்றியோடு நினைப்போம்.



முரசுநகர்-துஷி

## பொது அறிவு வினாவிடைகள்

01) மலேரியா நோய்க்கிருமிகளை கண்டுபிடித்தவர் யார்?நாடு எது? கண்டு பிடித்த ஆண்டு எது?
கிளெய்ஸ்லா.:.லெர்,பிரிட்டன், 1884

02) விசர் நாய் தடுப்பூசியை கண்டுபிடித்தவர் யார்? நாடு எது? கண்டுபிடித்த ஆண்டு எது?
லூயிபாஸ்டர், பிரான்ஸ், 1860

03) முதல் செய்மதி அனுப்பிய நாடு எது?
ரஷ்யா


04) இத்தாலி நாட்டின் தேசிய சின்னம் எது?
வெள்ளைத்தாமரை

05) இரட்டைக்குருதிச் சுற்றோட்டத்தை கண்டு பிடித்தவர் யார்?
வில்லியம் காபே

06) தென்னை மரத்தை தேசிய சின்னமாகக் கொண்ட நாடு எது?
மாலைதீவு.

சி.சாந்தகுமார்
கிளி/வன்னேரிக்குளம்
ம.வி

## கண்டுபிடியுங்கள்




எந்த பாதை வழியே சென்றால் நாய் தனது உணவை சென்றடையும்?

## பிரதான உற்பத்திகள்

01) மோட்டார் வாகனம்:-
ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மன்.

02) கம்பளி ஆடைகள்:-
அவுஸ்திரேலியா

03) தேயிலை:-
சீனா, இந்தியா,இலங்கை.

04) செம்பு:-
சிலி

05) கொக்கோ:-
கானா

06) சணல்:-
வங்காளதேஷ், இந்தியா

07) பிளாஸ்டிக் பொருள்:-
ஐக்கிய அமெரிக்கா

08) பட்டு:-
சீனா

09) தங்கம், வைரம்:-
தென்னாபிரிக்கா

10) கோப்பி:-
பிறேசில்

11) இறப்பர்:-
மலேசியா

12) வெள்ளி:-
மெக்சிக்கோ

13) தகரம்:-
மலேசியா

14) பால்மா:-
டென்மார்க்

15) போதைவஸ்த்து:-
தாய்லாந்து, ஆப்கானிஷதான், லாவோஷ்

பா.மோகனகலா,
கிளி/திருவையாறு ம.வி

## உங்களுக்குத் தெரியுமா?

☆ உலகிலேயே பெரிய சமுத்திரம் பசுபிக் சமுத்திரமாகும். ஏனைய பெரிய சமுத்திரங்கள் மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து பார்த்தாலும் கூட பசுபிக்கே பெரியதும் ஆழமானதுமான சமுத்திரமாகக் காணப்படுகின்றது. உலக உருண்டையை நீங்கள் எடுத்துப் பார்த்தால், அதில் அரைவாசி இடத்தை பசுபிக் சமுத்திரம் பிடித்திருப்பதைக் காணலாம்.

☆ உலகின் பெருமளவு நீர் உப்பு நீராகும். மிகச் சிறிய அளவிலேயே நன்னீர் காணப்படுகின்றது. எதிர்காலத்திலே குடிநீர் தங்கத்தைவிடப் பெறுமதிமிக்கதாகப்போகின்றது.

☆ செங்கடல் உண்மையிலேயே சிவப்பானதா? செங்கடலின் எதிரே நின்று பார்த்தால் அதன் சில பகுதிகள் சிவந்து நீரோடுவதாகத்தெரியும். குளிர் காலத்திலே லட்சக்கணக்கான சிறிய சிவப்புத்தாவரங்கள் இக்கடலில் தோன்றி பரவுகின்றன. அப்போது இக்கடலில் சில பகுதி சிவப்புநீர் போலக் காணப்படுகிறது. இந்தக் கடலில் நீங்கள் பயப்படாமல் குளித்து எழலாம்! உங்கள் உடல் நிறம்மாறவே மாறாது.

– யோகன் –

## விடுகதைகள்

01) ஒரு வீரனுக்கு இரண்டு குல்லாய் அவன் யார்?
02) கொம்புகளை நகர்த்தி வருது தொடப் போனால் கொம்போடு மறையுது அது என்ன?
03) செடியில்லாமல் சிரிக்கும் வெள்ளைப் பூ என்ன?
04) இந்த ஊரில் அடிபட்டவன் அடுத்த ஊரில் போய்ச் சொல்லுகிறான் அவன் யார்?

**ஆர்.இசைப்பிரியன்**
**கோணாவில்.**

01)பட்டாணிக் கடலை 02)நத்தை 03)உப்பு 04)தந்தி

உழைப்பே அதன் வெகுமதி: அவ்வண்ணம் தான் மனிதன் படைக்கப்பட்டுள்ளான். -ஸேம்யஸ் ஜான்ஸன்



சென்றவாரத் தொடர்ச்சி...

# தமிழில் மருத்துவ அறிவியல் நூல்கள்.

**வல்வை. ந.அனந்தராஜ்**

ஈழத்தில் இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய வரலாற்றில் 1905 இல் எம். ஞானப்பிரகாச பண்டிதர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியாகிய "பூலோக ஔஷ தோகாரி" என்ற பத்திரிகையே முதன் முதலில் மருத்துவ முறைகளைப் பற்றி எழுதுவதற்காக எழுந்த பத்திரிகையாகும். ஆயுள்வேத வைத்தியத்தை ஊக்குவிப்பதற்கு எழுந்த இப்பத்திரிகை கொழும்பு சோனகத்தெரு வைத்திய சீவன அச்சகத்தில் வெளியிடப்பட்டது.

டாக்டர் கிறீன் அவர்களின் பாதையில் தரமான மருத்துவ நூல்களை ஈழத்திற்கு வழங்கிய வர்களில் பேராசிரியர் டாக்டர் அ. சின்னத்தம்பி அவர்களின் பங்களிப்பு மகத்துவமானது. குறிப்பாக அவரது

"மகப்பேற்று மருத்துவம்" என்ற நூல் தாய்மைப் பேறு அடைந்தபெண்களுக்கு ஒரு சிறந்த அனுபவ ஆசான். இந்நூல் உடற் கூற்று மருத்துவம் தொடர்பான செய்திகளை தமிழில் விளக்கி யுள்ளதுடன் ஒரு பெண் கர்ப்பந் தரித்த நாளில் இருந்து எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற விடயங்களையும் மகப்பேற்றுச் சிகிச்சை முறைகளையும் கூட தமிழில் விளக்குகின்றது. பேரா சிரியர் சின்னத்தம்பி அவர்களின் மருத்துவ அறிவியல் நூல்கள், மருத்துவக் கருத்துக்களைத் தமிழில் எடுத்துக் கூறிய போதும் இதில் இடம்பெற்றுள்ள கடினமான சொற் பிரயோகம், சாதாரண மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்திருக்கவில்லை. ஆயினும் இவை பல்கலைக்கழக மாணவர்க ளுக்கும், மருத்துவத்தை அறிய விரும்புவோர்களுக்கும் ஒரு வழிகாட்டியாகவே இருந்தன என்று கூறப்படுகின்றது.

பேராசியர் அ. சின்னத்தம்பி அவர்களின் இப் பணியைத் தொடர்ந்து நீண்ட இடைவெளியின் பின்னர், டாக்டர் ச. இராசரத்தினம் அவர்களின் "தாயும் பிள்ளையும்" என்ற நூல் 1934 இல் முதற் பதிப்பாக வெளியிடப்பட்டு, மீண்டும் 1974 இல் மறுபிரசுரம் செய்யப்பட்டது. இது மகப் பேற்று மருத்துவம் தொடர்பாக தமிழில் எழுதப்பட்ட ஒரு சிறந்த நூலாகும்.

இதே போன்று டாக்டர். தி.ராஜேந்திரன் 1979 இல் "அறுவை வைத்திய நலன் பேணல் கைநூல்" என்ற நூலும், 1983 இல் "நச்சுப்பாம்புகளும் அவற்றின் கடிளும், தீர்வுகளும்" என்ற நூலும் வெளியிட்டதன் மூலம் மருத்துவ அறிவியல் அறிவை மேலும் நளினப்படுத்தியுள்ளமை குறிப் பிடத்தக்கது.

அவர்களைத் தொடர்ந்து மருத்துவ அறிவியல் செய்திகளை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் எளிமை யாக எழுதிப் பல நூல்களை வெளியிட்ட பெருமை பேராசிரியர் டாக்டர் சிவஞானசுந்தரம் அவர்களையே சாரும். "நந்தி" என்ற புனை பெயரில் ஆக்க இலக்கியத் துறையில் தடம் பதித்த பேராசிரியர். மருத்துவபீட பேரா சிரியராக இருந்த அனுபவத் தையும், எழுத்துத்துறையில் பெற்ற அனுபவத்தையும் கண்டு வெளி யிட்ட நூல்கள் மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்றிருந்தன.

டாக்டர் நந்தியின் பல்வேறு தரத்திலான நூல்களுள்
அன்புள்ள நந்தினி
நந்தினி உன் குழந்தை
இதய நோய்களும் தடுப்பு முறைகளும்
அன்புள்ள தங்கைக்கு

ஆகிய நூல்களில் சிக்கலான மருத்துவக் கருத்துக்கள் மிக எளிமையாகக் கதை சொல்லும் பாணியில் தமிழில் சுவைபடக் கூறியமை குறிப்பிடத்தக்கது. இவை அறிவியல் இலக்கியத் துறையில் ஒரு பாரிய பங்கை வகிக்கின்றன.

1980 களில் இருந்து மிகவும் பிரபல்யம் வாய்ந்த ஒரு மருத்துவ நிபுணராகக் கடமையாற்றும் டாக்டர் எம். கே. முருகானந்தன் அவர்கள் ஆக்க இலக்கியத் துறை யிலும் பெயர் பெற்று விளங்கி யவராக இருந்தார்.

இலக்கிய முயற்சிகளினூடாக அவர் பெற்ற அனுபவங்களும், சிருஷ்டி இலக்கியத்திறனும் மருத்துவ அறிவியல் துறை சார்ந்த நூல்களை ஆக்குவதற்கு டாக்டர் எம். கே. முருகானந்தனுக்கு உதவியது.

அவர் எழுதிய மருத்துவ அறிவியல் நூல்களுள் 1998 ல் வெளியிடப்பட்ட நலவியல் நூலான "நீங்கள் நலமாக....." என்ற நூலுக்கு இலங்கை தேசிய வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிபுணராகக் கடமை யாற்றும் டாக்டர். ம. கணேச ரத்தினம் வழங்கிய வாழ்த்துரையில்

"வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் அவர்கள் நீங்கள் நலமாக...என்ற வைத்திய நூலை அவளியிட்டு எமது மக்களின் வைத்திய அறிவை முன்னேற் றுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. மிகவும் சுலபமாக விளங்கக்கூடிய விதத்தில் கேள்வி - பதில் வடிவத்தில் அவர் தனது நூலை எழுதியுள்ளார். இந்நூல் அவரது பரந்த வைத்திய அனுபவத்தையும் நவீன அறிவை யும் பிரதிபலிக்கின்றது என்று கூறினால் மிகையாகாது.

இந்நூலை அவர் சாதாரண அறிவுள்ளவர்களுக்காக எழுதியி ருந்தாலும் வைத்திய மாணவர்க ளுக்கும் வைத்தியர்களுடன் தொழில் செய்பவர்களுக்கும் மிகவும் உதவியாக இருக்கும் என்பதில் ஒரு வித ஐயமு மில்லை...."

என்று குறிப்பிட்டுள்ளமை மருத்துவ அறிவையும் கூட எளிய முறையில் சாதாரண மக்களு க்கும்பரிமாற்றம் செய்யமுடியும் என்பதை உணர்த்துகின்றது.

ஒரு தகவல் பரிமாற்றத்தில் மிகச் சிறந்த ஊடகமாக "நூல்கள்" விளங்குகின்றன என்பதில் டாக்டர் எம். கே. முருகானந்தனின் நூல்கள் எடுத்துக்காட்டாக உள்ளன. அந்த வகையில் டாக்டர். எம். கே. முருகானந்தன் தமிழில் பல்வேறு மருத்துவ அறிவியல் துறை சார்ந்த நூல்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். அவரது நூல்களுள்

- சிறுவர்களின் கண்களைக் காக்க வாரீர்.
- தாயாகப் போகும் உங்களுக்கு
- எயிட்ஸ்
- போதையைத் தவிருங்கள்.
- பாலியல் நோய்கள்.
- நீங்கள் நலமாக.

என்பன எளிய தமிழில் சுவையாக சாதாரண மக்களுக் கென ஆக்கிய நூல்களின் வரிசை யில்முதன்மை வகிப்பவையாகும். இவை மருத்துவத் துறையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மட்டுமல்லாது சாதாரண மக்களுக் கும் கூடப் பயன்படும் வகையில் உள்ளமை அறிவியல் இலக்கிய நூல் வரிசையில் இன்னொரு சாதனையாகும்.

இக் காலப்பகுதியில் தமிழில் மருத்துவத்துறை சார்ந்த பல்வேறு நூல்கள் வெளியாகிக் கொண்டி ருந்த நேரத்தில் வடக்கு - கிழக்குப் பிரதேசம் எங்கும் போர் மேகங்க ளால் சூழப்பட்டு, மக்கள் அல்லல் பட்டுக் கொண்டிருந்த ஒரு சூழ் நிலையில் காலத்தின் தேவை யறிந்து மருத்துவத் துறையின் ஒரு பிரிவான முதலுதவிச் சிகிச்சை முறைகளுக்கான நூல்கள் வெளிக் கொணரப்பட்டன. இப் பெரும் பணியில் டாக்டர். ந. சிவராஜனின் ''முதலுதவி'' நூல் டாக்டர் கனகசுகுமாரின் ''முதலுதவிச் சிகிச்சை , நா. போஜனின் ''முதலுதவி'' டாக்டர் எஸ் பத்மலோஜினியின் ''போர்க் காயங்களும் அவற்றுக்கான முதலுதவிகளும்'' ஆகிய நூல்களும் காலத்திற்கேற்ப பயனுள்ள நூல்களாக அமைந்திருந்தன.

1994 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சுகாதார நிலையத்தினரால் வைத்திய கலாநிதி எஸ். பி. ஆர். சீர்மா றனால் எழுதப்பட்ட "சில நோய் களும் சில ஆலோ சனைகளும்" என்ற வைத்திய நூலில் பொது வான நோய்களும் அவற்றைத் தடுப்பதற்கான ஆலோசனைகளும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதில் உள்ள ஆலோசனைகள் பலவற் றுக்கு விஞ்ஞான ரீதியான விளக் கங்கள் கொடுக்கப்பட்டு வாசிப் போரின் சிந்தனையை தூண்டும் வகையில் தகவல்கள் வழங்கப் பட்டுள்ளன.

அவை போன்ற எளிமையான மருத்துவ நூல்கள் மருத்துவ தொழில் நுட்பம் தொடர்பாக அடிப்படை அறிவையேனும் பெற்றிருக்காத சாதாரண மக்களின் மருத்துவ அறிவை வளர்க்கும் வகையில் சிறந்த ஊடகங்களாக இருக்கின்றன.

1983 - 1987 காலப்பகுதியில் யாழ்ப்பாணக் குடா நாட்டில் பரவலாக எறிகணைத் தாக்கு தல்களும் விமானக் குண்டு வீச்சுக்களும் கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்பட்டிருந்த வேளை யில் பல நூற்றுக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டே வந்தனர். இவற்றுள் இரத்தப் பெருக்கினாலேயே பெருமளவில் மரணங்கள் ஏற்பட்டன.

இந்த நேரத்தில் இவை போன்ற முதலுதவி நூல்களும் வைத்திய ஆலோசனை நூல் களும் சாதாரண மக்களும் வாசித்து மருத்துவ அறிவைப் பெறக்கூடியதாக இருந்தமையால் இரத்தப் பெருக்கினால் ஏற்படக் கூடிய மரணங்கள் பெருமளவில் தடுக்கப்பட்டன. அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஒவ்வொருவரும் நடமாடும் மருந்தகமாகவே செயற்பட்ட மைக்கு இத்தகைய அறிவியல் துறை சார்ந்த நூல்களே காரணமாக இருந்தன எனலாம்.


1989 ல் பலாலி ஆசிரியர் கலாசாலை விஞ்ஞான மன்ற வெளியீடான "போதை" டாக்டர். கனகசுகுமாரின் "மது அடிமை நிலையும் மதுப் பிரச்சினைகளும்" போன்ற போதை வஸ்துக்களில் அடங்கியுள்ள இரசாயனப் பொருட்களை பற்றியும் அவற்றால் மூளையின் மைய நரம்புத் தொகுதி, சுற்றயல் நரம்புத் தொகுதி ஆகியவற்றில் ஏற்படக் கூடிய விளைவுகளைப் பற்றியும் விஞ்ஞான ரீதியாக விளக்கு கின்றன. இவை மனித சமூக நடத்தைகள், அவர்களது பண் பாட்டு விழுமியங்களில் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் பற்றியும், அவற்றுக் கான தீர்வுகள் பற்றிய ஒரு தெளிவை ஏற்படுத்தும் நூல்களாக இருந்ததுடன், ஒரு மனிதனை சமூகப் பிறழ்வு நடத்தையில் இருந்து காப்பாற்றும் சாதனங்க ளாகவும் விளங்குகின்றன.

"சீனியைக் கூடுதலாக சாப்பிட்டால் சலரோகம் வரும்"

என்ற மூட நம்பிக்கையிலிருந்து மீளாது, நீரிழிவு நோய் தொடர்பான அறிவைப் பெற்றிராத சாதாரண மக்களுக்கு "நீரிழிவு" நோய் ஏற்படுவதற்கான மருத்துவக் காரணங்களையும் அவற்றுக்கான தீர்வுகளையும் விளக்கும் வகையில் "நீரிழிவுக் கைநூல்" என்னும் நூல் அமைந்துள்ளது.

1984 ல் டாக்டர் செ. நாகநாதனால் வெளியிடப்பட்ட "நீரிழிவுக் கைநூல்" வீட்டில் உங்கள் ஒவ்வொருவருக்கும் மருத்துவ ஆலோசகனாக விளங்குகிறது.

எனவே அறிவியல் நூல்களுக்கான அடித்தளம் அமைத்துக் கொடுத்ததில் அகரா திகள் ஆக்கத்தையடுத்து தமிழில் வெளிவந்த மருத்துவ நூல்களின் தோற்றம் எடுத்துக் காட்டுகின்றது. இன்று மருத்துவ தொழில் நுட்ப வளர்ச்சியானது முன்னேற்ற மடைந்துள்ள இந்த நேரத்தில் புதிய மாற்றங்களின் தேவைகளை அடியொற்றி யதாகவே மருத்துவ அறிவியல் நூல்களும் வெளியி டப்பட வேண்டியதும் அவசிய மாகின்றது.



## ஆருக்குச் சொல்லுறது?

**விடுப்பு** நாளில் வீடு செல்வதற்காகப் புறப்பட்டு, முகமாலையை காலை 10.00 மணியளவில் அடைந்திருந்தேன். அடிக்கடி சென்று வருவதால் எந்தவித தாமதமுமின்றி எனக்கான இராணுவப் பரிசோதனைகளை முடித்துக் கொண்டு எனக்காகக் காத்து நிற்பதுபோல நின்ற தட்டி வானொன்றில் ஏறி உட்கார்ந்தேன். எனக்கு முன்னால் அறுபது வயது மதிக்கத்தக்க ஒரு வயோதிபத் தாய் அமர்ந்திருந்தார். வெற்றிலை பாக்கை கொதுப்பியபடி பெண் இராணுவத்தினர் பரிசோதிக்கும் திசையைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய பார்வை எதையோ எதிர்பார்ப்பது போல இருந்தது.

வான் புறப்பட நேரமாகி விட்டது தெரிந்தது. நடத்துநர் உரத்துக் கத்தியபடி ஓடித் திரிந்தார். நேரக்கணிப்பாளர் வானை எடுக்கும்படி சொல்ல, நாலு சில்லும் மெல்ல உருண்டது.

"ஐயோ கொஞ்சம் பொறுங்கோ தம்பி'' என்று கூறிய அந்த வயோதிபத்தாய் இறங்கி ஓடினாள். எங்கு போகிறாள் என்பதையே எல்லோரும் கவனித்தனர். இராணுவப் பெண்கள் பகுதியில் வாக்குவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்க, இவர் அங்கே போய்க் கொண்டிருந்தார். பதினாறு வயது நிரம்பிய ஒரு யுவதி அங்கே ஏதோ பிரச்சினைப் பட்டுக்கொண்டிருப்பது தெரிந்தது. அங்கு நடைபெறும் பேச்சு வார்த்தைகள் எங்கள் செவிகளுக்கு எட்டுவதாக இல்லை. ஆனால் ஏதோ பிரச்சினை என்பது மட்டும் தெரிந்தது.

அப்படி என்ன பிரச்சினை இப்போது? சமாதான காலமல்லவா? மக்கள் சந்தோசமாகப் பிரயாணம் செய்யும் நேரமல்லவா? ஏதாவது களவு நடந்திருக்குமோ? இப்படிப் பலவாறான எண்ணங்கள் பிரவாகித்தன. ஆனால் ஒருவர் தானும் அங்கு செல்வதாக இல்லை. அந்த அம்மா கைகளை உயர்த்திப் பேசுவது மட்டும் தெரிந்தது. அந்த யுவதியை இழுத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார்.

தனக்கு அருகில் அந்த யுவதியையும் அமர வைத்துக் கொண்டு பெருமூச்செறிந்தார்.

"என்ன நடந்தது?"

பலகுரல்கள் ஒலித்தன. எனக்கு மனதுக்குள் ஆத்திரமாக வந்தது. ஒரு பெண்ணுக்கு ஏற்பட்ட இன்னலுக்கு முகம் கொடுக்க விரும்பாதவர்கள். ஏனென்று கேட்க முடியாதவர்கள், இப்போது பூராயக் கேள்வியல்லவா தொடுக்கிறார்கள்.

"சேட்டை விடுகினம். கண்ணுக்குக் குளிரான பிள்ளையளைக் கண்டால் அவைக்கொரு விசாரணை. ஆயிரம் கேள்வி. இயக்கத்திலை இருந்தனியோ? பயிற்சி எடுத்தனியோ? பம்மாத்தெல்லே காட்டுகினம். சமாதானப் பேச்சுவார்த்தையெண்டு சொல்லி உலகமெல்லாம் பேசத் திரியினம். பிளேனிலை ஆக்களை ஏத்தி இறக்கித் திரியினம். இயக்கத்தை தரையாலும் கடலாலும் அழைச்சுத் திரியினம். கந்தோர் திறக்கினம். இப்படியெல்லாம் செய்து கொண்டு, சும்மாயிருந்த குமரைப் பிடிச்சு இயக்கத்திலை இருந்தனியோ? பயிற்சி எடுத்தனயோ? இதென்ன கேள்வி எண்டு கேக்கிறன். உவளவைக்கு ஆர் மறுமொழி சொல்லுறது."

வயோதிபத் தாயின் வாய் வார்த்தைகளை வாரியிறைத்தது. வாய்பேசாதிருந்த பருவ மங்கையின் உடலின் நடுக்கம் இன்னும் குறைந்ததாக இல்லை. தட்டி வான் தடையைத் தாண்டி விரைவெடுத்தது. தடைமுகாமுக்குள்ளாலை எத்தனை தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கிறது என்பதை நினைக்க நினைக்க வாழ்வே கசந்து போவது போல இருந்தது.

▲ மாவன்னா

உழைப்பில் ஈடுபடும் நேரம் எதுவும், விரயமாவதில்லை என்பதே, விவேகத்தின் சாரம். -ரால்ஃப் வால்டோ எமெர்ஸன்



# குதூகலம்

## தந்தை சொல்மிக்க..



பிரிட்டிஸ் சாம்ராஜ்யத்தின் ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் கண்டிப்பானவர் அதுமட்டுமல்ல சிக்கனமானவரும் கூட....

தன்னைப் போல தன்பிள்ளையும் இருக்க வேண்டுமென்பதே அவரது விருப்பமாகும். ஆனால் இளவரசரோ ஊதாரி... பெரும் செலவாளி. பாடசாலையில் படிக்கும் போதே அவருக்கு இந்தப் பழக்கம் இருந்தது.

அவர் ஒருமுறை தந்தைக்கு எழுதிய கடிதத்தில்-தனக்கு அனுப்பும் பணம் போதாது எனவும் அதை அதிகரிக்குமாறும், பணத்தேவை தனக்கு அதிகமாகி வருவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

மன்னருக்கு வந்ததே கோபம். உடனே ஒரு பதில் எழுதினார். 'அதில் உன் ஊதாரித்தனத்தை மாற்றிக்கொள் பணவிடயத்தில் நீ ஒரு வணிகன் போல் இருக்காவிட்டால் உருப்படவே மாட்டாய்' என எழுதிவிட்டார். இளவரசரிடமிருந்து மீண்டும் பதில் கடிதம் வந்தது.

'உங்கள் ஆலோசனைப்படி நான் வணிகனாக மாறத் தொடங்கிவிட்டேன். கடைசியாக நீங்கள் எழுதிய கடிதத்தைக் கூட 25 பவுண்களுக்கு விற்றுவிட்டேன்.

மன்னருக்கு தலை கிறுகிறுத்தது.... அழுவதா... சிரிப்பதா... அவருக்கு புரியவேயில்லை-

❀ ❀

## நிருபரின் திறமை......



அன்றைய தினம் பிரிட்டிஷ் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சேர்ச்சிலை பேட்டிக்காண முயன்ற எவருக்கும் அவர் பேட்டியளிக்க மறுத்துவிட்டார். வெகுநேரத்தின் பின்னர் ஒருவருக்கு மட்டும் அந்த வாய்ப்பை வழங்கினார்.

'நான் இன்றுகாலை முதல் பேட்டிகாண முயன்ற ஏழட்டுப்பேரை திருப்பி அனுப்பிவிட்டேன்... இன்று நான் அளிக்கும் முதல் பேட்டி உமக்குத்தான்' என்ற சேர்ச்சில் மேசையில் கிடந்த பேட்டிக்கான விண்ணப்பங்களை பெருமையுடன் காட்டினார்.

' எனக்கும் அது தெரியும்' என்றார் நிருபர்'

'எப்படி?' என்றார் சேர்ச்சில் ஆச்சரியத்துடன்.

'அத்தனை விண்ணப்பங்களும் என்னுடையவைதான்-'என்றார் நிருபர் அமைதியுடன்....

- சேர்ச்சில் அதிர்ந்து போனார்...

❀ ❀

## அட... க்கடவுளே.....



அந்தக கணவனுக்கும் மனைவிக்குமிடையே ஓயாத சண்டை... விட்டுக்கொடுக்கும் மனோபாவமே இல்லை....

அன்றைக்கு உச்சகட்டத்தில் இருக்கையில் கணவன் கத்தினான்

'கடவுளே... என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறாய்....? என்னையும் உன்னோடு அழைத்துக்கொள்....'

மனைவியும் விடவில்லை... அதே வார்த்தைகளையே உபயோகித்து கடவுளை நோக்கி கத்தினாள் 'என்னைத்தான் கடவுளே முதலில் அழைக்கவேண்டும்' என்று வலியுறுத்தினாள்....

இனி என்ன சொல்வது என்று யோசித்த கணவன் ஒரு முடிவுக்கு வந்தவனாக கத்தினான்- 'கடவுளே.. நீ முதலில் என் மனைவியின் கோரிக்கையை நிறைவேற்றிவிடு... அது போதும்....'

❀ ❀

## சோகச் செய்தி




ஒரு சிம்பான்ஸி குரங்கு மற்றொரு சிம்பான்ஸி குரங்கின் கைரேகையைப் பார்த்துவிட்டு கவலையுடன் கூறியது.

'ஐயோ பாவம் உன் எதிர்காலம் மிகவும் சோகமாக இருக்கப்போகிறதே.....'

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?' என்றது மற்ற சிம்பான்ஸி.

'நீ எதிர்காலத்தில் மனிதனாகப் பரிமாண வளர்ச்சியை அடையப் போகிறாய் என உன் கைரேகை சொல்கிறது.....!'



# யாருடைய வீடு

**கருணாகரன்.**


இந்த வீடு உன்னுடையதென்று சொல்வதற்கில்லை
ஆனாலும்
நீ சொல்லிக்கொண்டிருக்கிறாய்
இது உன்னுடைய தென்று
பல்லிகள்
கரப்பான் பூச்சிகள்
எல்லாமே உன் வீட்டிலுள்ளன
நீ வளர்க்கும் நாயும்
உன் பூமரங்களும்
உள்ளன இந்த வீட்டில்
நீ சொல்கிறாய் இன்னும்
இந்த வீடு உன்னுடையதென்று

உன்நாய் அதன் இன்னொன்றிடம்
இதைத்தன் வீடென்று சொல்லுமே
உன் வேலையாள் சொல்வானே.
தன் சகாவிடம் இது தன் வீடென்று.
கரப்பான் பூச்சி நினைக்கும்
இது தன் வீடென்று.
பல்லியோசிக்கும்
இதுதானிருக்கும் வீடென்று
சிலந்தியெண்ணும்
இது தன்வீடிருக்கும் வீடென்று
உன்னுடைய பெண் நினைக்கிறாள்
இது தன்னுடைய வீடென்று
இன்னும் நீ சொல்லிக் கொண்டிருக்கிறாய்
இந்த வீடு உன்னுடையதென்று.

❀

# முன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
27 - 06 - 1974



வீரச்சாவு
24 - 11 - 1999

கடற்புலி

## லெப்.கேணல் ஜோன்சன்/இளங்கதிர்

(தவசி இந்திரதேவன்)
சம்பூர் திருமலை

(சம்பவம் : தமிழீழ கடற்பரப்பில் இலங்கை கடற்படையினருடனான மோதலில்)

தேசமது கலங்கக்கண்டு
சினத்துடன் எழுந்த வீரன்
வீசுகின்ற புயலாய் மோதி
வெம்பகை முடிக்க நின்றான்

ஓசையுறு கடலில் வந்த
ஒன்னவர் படையைச் சாடி
மாசறுதல் வீரச்சாவில்
மறைந்தவன் ஜோன்சன் வாழி

த.கண்ணன் (தம்பி)
குடும்பத்தினர்.

(2176)

# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணின் மலராக
22 - 09 - 1976



மண்ணில் விதையாக
20 - 11 - 1997

## லெப். கலைவாணன்

(மகாலிங்கம் சிறிசுதன்)
-சுன்னாகம்,யாழ்-

ஆண்டுகள் தவறாது வருகின்றன
அதற்குள் உன் விதை நாளை –தேடுகிறோம்
வரலாற்றின் அத்தியாயங்களுள் – உங்கள்
திருமுகம் தேடுகிறோம்
புதிது புதிதாக... ஆயிரமாக
உயிர்த்துக்கொண்டேயிருக்கிறது...
அதற்குள் நீயும்... உன் நினைவுகளும்
நித்தம், நித்தம், எம்மில்....

அன்பு அப்பா, அம்மா
அண்ணா, தங்கை, தம்பி.


(சி-7203)


ஈழநாதத்தின் வார வெளியீடான
வெள்ளிநாதத்தில்

தொடரொன்றின்
தொடக்கம்.... விரைவில்

# தாய்மடி வாசம்

தாயக அனுபவங்களைத்
தரும் புதிய தொடர்...



வின்சென்ற் புளோறன்ஸ்

# கேள்விக்குள்ளாகும் சிறீங்காவின் நீதித்துறை

**தேசியத் தலைவர்** மீதான 200 ஆண்டு தண்டனை விதிப்பு பிரதம நீதியரசர் மீதுஅரசு விரோதக் குற்றச்சாட்டு (Impeachmen) சுமத்த அரசு காட்டிய தயக்கத்தின் பின் விளைவா?

தற்போதைய நீதியரசர் சந்திரிகாவால் நியமிக்கப்பட்டவர். இந்த நீதியரசர் மீது பல்வேறு மோசடிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதை தொடர்ந்து அவர்மீது அரசு விரோத குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்னைய ஆட்சிக் காலத்தில் ஐ.தே.கட்சியினரால் பலமாக எழுப்பப்பட்டன.

அண்மையில் விக்ரர் ஐவன் (ராவய ஆசிரியர்) வெளியிட்டுள்ள ஒரு நூலில் பிரதமநீதியரசர் ஒரு ஏமாற்றுப் பேர்வழியாக இருப்பதால் உயர் நீதிமன்றமே ஒரு கேலிக்கூத்து மன்றமாகும் என்று சொல்லி யிருக்கிறார்.

ஆனால் ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்த பின்னரும் பிரதம நீதியரசர் மீது அரச விரோத குற்றச்சாட்டை சுமத்தவில்லை. அதன் பலனை இப்போது அக்கட்சி அனுபவிக்கிறது. அண்மையில் இந்த பிரதம நீதியரசரின் தலைமையிலான உயர் நீதிமன்றமே ஐ.தே.கட்சியின் உத்தேச 19ம் திருத்தத்தை சட்டவிரோத மானதாக அறிவித்து, சனாதிபதியின் அதிகாரங்களை கத்தரிப்பதற்கான முயற்சியை தடம்புரளச் செய்தது. இது சனாதிபதிக்கு தன் விசுவாசத்தைக் காட்டும் ஒரு பக்கச் சார்பான தீர்ப்பாகும்.

இவ்வாறான நபர் பிரதம நீதியரசராக இருப்பது நீதித்துறை மீது வேண்டாத செல்வாக்கை பிரயோ கிப்பதாக இருக்கும் என்று IBA ஐச் சேர்ந்த பிறெனான் பிரபும் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தை 3வது கட்டத்தை எட்டிக் கொண்டிருக்கிறது. யுத்த நிறுத்தம் ஆயுதத் தரகர்களுக்கும் அவர்கள் மூலம் வங்கிகளில் மில்லியன் கணக்கில் வைப்புச் சான்றிதழ்களை குவித்து வைத்திருப்போருக்கும் பெரும் பாதிப்புகளை விளைவித்துள்ளது. எமது துன்பங்களில் பிழைப்பு நடத்திய இக்பால் அத்தாஸ் போன்றோரும் இதற்கு விதிவிலக்கில்லை. இவர்களும், இவர்களுக்கு ஆதரவான படையினர், பொலிசார், மற்றும் துரோகக் கும்பல்களும் போர்நிறுத்தத்தைக் குழப்ப தலைகீழாக முயன்று வருகின்றனர். உதாரணத்துக்கு சிலவற்றைபார்ப்போம்.

1) அக்கறைப்பற்று சம்பவத்தில் ஈ.பி.டி.பியின் கரம் மிகத் தெளிவாகவே தெரிகிறது. கடத்தல் நாடகத்தை அரங்கேற்றிய ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் 10 நாட்களுக்கு முன்புதான் அக்கறைப்பற்று வந்திருக்கிறார்கள். உறங்கிப் போய் கிடந்த அக்கறைப்பற்றுக்கு ஈ.பி.டி.பி அமைப்பாளர் S.M. அஸ்மீ திடீரென உயிர்பெறுகிறார். கடத்தலை சொல்லி கலவரம் மூழ்கிறது.

2) திருமலையில் குண்டெறிந்தது பொலிசார் தான் என்று காயமுற்றவர்கள் கூறுகிறார்கள். அங்கே ஒரு ரத்வத்த (சேனக ரத்வத்த) பொலிசாருக்கு பொறுப்பாக இருந்திருக்கிறார். தொடர்பு ஏதும் இருக்குமா?

3) நியாயப்படுத்த முடியாத விதத்தில் துப்பாக்கிச் சூட்டை காஞ்சிரங்குடா அதிரடிப்படையினர் நடத்தியிருக் கிறார்கள். சாட்சியங்களை உருவாக் கியிருக்கிறார்கள் என்பதெல்லாம் மெய்பிக்கப்பட்டி ருக்கின்றன.

4) கலாச்சார மையம் கட்டும் பிரச்சினையில் தலை நகரின் மையத்திலேயே ஒரு கலவரம் மூண்டது.

5) பேச்சுவார்த்தைகளில் எட்டப்படும் உபகுழு அமைப்பது போன்ற முடிவுகளையே சட்டச் சிக்கல்களில் மூழ்கடிக்க முயற்சிகள் நடப்ப தொன்றும் இரகசியமான விடயமல்ல.

இந்தப் பின்னணியிலேயே எமது தேசியத் தலைவர் மீது மோசடிப் பேர்வழியான ஒரு பிரதம நீதியரசரைக் கொண்ட விக்டர் ஐவன் கூறுவது போன்ற கேலிக்கூத்து மன்றமான... உயர் நீதி மன்றம் வழங்கிய 200 வருட சிறைத்தண்டனை தீர்ப்பை ஆராய வேண்டும்.

**"நீதிமன்ற தீர்ப்பு பேச்சு வார்த்தைகளைப் பாதிக்காது என்று ஜீ.எல் பீரிஸ் கூறினாலும், இறுதியாக பேச்சுவார்த்தை பிரபாகரனில் தான் வந்து நிற்கும் என்பதால் தீர்ப்பு அமைதிப் பேச்சுக்களை குழப்பும் நோக்கத்தையே கொண்டிருக்கிறது."**

**-ஆய்வாளர்கள்**

நீதிமன்ற தீர்ப்பு பேச்சு வார்த்தைகளைப் பாதிக்காது என்று ஜீ.எல் பீரிஸ் கூறினாலும், இறுதியாக பேச்சுவார்த்தை பிரபாகரனில் தான் வந்து நிற்கும் என்பதால் தீர்ப்பு அமைதிப் பேச்சுக்களை குழப்பும் நோக்கத்தையே கொண்டிருக்கிறது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

அமைதிப் பேச்சுக்களுக்கு எதிரான கருத்துக்களை சனாதிபதி அடிக்கடி வெளியிட்டு வருகிறார். அவருக்கு சார்பான பிரதம நீதியரசரைக் கொண்ட நீதிதுறையினர் அவசர அவசரமாக இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கியிருப்பதை ஒரு 'அரசியல்' கேலிக் கூத்து அல்லது 'சதி' என்று கூறுவதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்.

தீர்ப்பு என்று ஒன்றை வழங்கினால் அந்தத் தீர்ப்பை நடைமுறைப்படுத்தினால் தான் அதற்கும் மதிப்பு. அதனை வழங்கியவர்களுக்கும் மதிப்பு. இங்கே தெருச்சண்டையில் அடிவாங்கியவன் வீட்டில் சண்டித்தனம் காட்டுவது போல் தீர்ப்பை வழங்கியதன் மூலம் மோசடி பிரதம நீதியரசர் போர் வியாபாரிகள் சார்பில் அரசைப் பழிவாங்க முனைந்திருக்கிறார். ஆனானப்பட்ட இந்தியாவே ஒரு தீர்ப்பை வழங்கி விட்டு முழி பிதுங்குகிறது. எனவே இந்தத் தீர்ப்பை பற்றி நாம் அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

"மௌனம் கலக நாஸ்தி"

---

# அதிஸ்டலாபச் சீட்டுக்களும் சில அவதானிப்புக்களும்

"ஆ மச்சான் எப்பவந்தனி"

"நேற்று வந்திட்டன்."

"எங்கை தங்கிறனி?"

"லொச்சிலை"

"எனக்கொரு உதவி செய்யோணும்."

"என்ன உதவி?"

"வீட்டை போகோணும்: கையிலை காசில்லை."

வவுனியாவிலிருந்து சிதம்பரபுரம் என்றால் பதினைந்து ரூபா போதும். எடுத்துக் கொடுக்கும் போது கேட்டேன் "ஏன் காசில்லாமல் வந்தனி....?" என்று. அவன் தலையைச் சொறிந்தபடி சொன்னான்

"போன கிழமை வரேக்கை சுரண்டிப் பாக்கிற "டிக்கற்" எடுத்தனான். ஐநூறு ரூபா விழுந்தது. பரிசு இலச்சக்கணக்கிலை. அதிஸ்டம் என்றால் விழும். அந்த ஆசையிலை தான் 'விழும்' என்ற நம்பிக்கையிலை இண்டைக்கு கொண்டு வந்த காசு எல்லாத்துக்கும் 'டிக்கற் எடுத்திட்டன்.' அவன் கலவரத்துடன் கூறினான்.




சீட்டு என்பது ஒரு சூது. அது ஆசைகளை அள்ளி இறைத்தபடியே இருக்கும். கடிவாளம் கழற்றப்பட்ட குதிரைகளாய் கற்பனைகளில் சவாரி செய்யும். இதிகாசங்களில் கூட சூதாட்டத்தால் நாட்டை... மனைவியை..... இழந்த கதாபாத்திரங்கள் கண்கள் முன்விரிகின்றன.

இலங்கை தேசிய லொத்தர் சபையினரால் பல்தரப்பட்ட சீட்டுக்கள் அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றன. செய்யப்படுகின்றன. இச் சீட்டுக்களில் சுரண்டல் முறையிலான சீட்டுக்களே கூடுதலாக விற்பனை செய்யப்படுகின்றன. சூதாட்டம் என்பது எந்தவொரு நாட்டிலும் தடை செய்யப்பட்ட விடயம். அதுக்குத் தண்டனைகளும் சட்டக்கோவைகளில் பக்கங்களை நிரப்புகின்றன. இன்று பெரும்பாலும் சூதாட்டத்துக்கு தண்டனைகள் விதிக்கப்பட்ட அரசுகளாலே சூதாட்டம் நடத்தப்படுகின்றன.

யுத்தம் என்பது அழிவை நோக்கிய பயணம். இந்த அழிவுகளால் நிமிரமுடியாத சிறிலங்கா அரசானது அபிவிரு த்திக்கென உலகநாடுகளிடமிருந்து பெறப்பட்ட நிதியை போருக்குப் பயன்படுத்தியும் போதாமையைப் போக்கவே அதிஸ்டலாபச் சீட்டுக்களை அறிமுகம் செய்து அதன் மூலம் பெறும் வசூலிப்பையும் தமது தேவைகளுக்குப் பயன் படுத்திக் கொள்வது தெரிந்ததே.



அண்மையில் கொழும்பில் "நசீர்" என்பவரைச் சந்தித்து "நீங்கள் அதிஸ்ட லாபச் சீட்டுகள் ஒன்றும் எடுப்பதில்லையா?" என்று கேட்டேன். அவர் சொன்னார் உதெல்லாம் பேய்க்காட்டல். சனங்களுக்கு விழுகிறதே குறைவு- சும்மா ஒரு நம்பரை பேப்பர்களில் போடுகிறார்கள்." என்று

கொழும்புக்குஅடிக்கடி வரும் வன்னி நபர் ஒருவரைக் கேட்ட போது. "சிங்களப் பகுதிகளில் தான் கூடுதலாக விழுகிறது. நான் அநேகம் மதவாச்சியிலையும் அநுராதபுரத்திலும்தான் எடுக்கிறனான்." என்றார்.

இந்த அதிஸ்ரலாபச் சீட்டுக்களை வைத்து சில விற்பனை முகவர்கள் சில ஏற்றுமதிகளை வவுனியா, மன்னார், கொழும்பு போன்ற இடங்களில் நடாத்திவருகின்றதை அவதானிக்க முடிகிறது. கூடுதலாக வன்னியில் இருந்து செல்பவர்களே ஏமாளிகளாகின்றனர். இதற்கு காரணம் அவர்களுக்கு சிங்களம் தெரியாமையும், சீட்டுக்கள் பற்றிய விபரங்கள் புரியாமையுமே ஆகும்.

அதிகப்படியான சீட்டுக்கள் சிங்கள எழுத்துக்களுடன் இருக்கின்றன. சில சீட்டுக்களில் மட்டும் தமிழிழ் விளக்கம் இருக்கின்றன. வன்னியிலிருந்து செல்லும் சிலர், சுரண்டல் முறையிலான சீட்டுக்களை கூடுதலாக எடுப்பார்கள். சுரண்டியதும் அதிஸ்டங்களைப் பார்க்கும் படி முகவர்களிடமே கொடுப்பார்கள். அவர்கள் கிடைக்க வில்லையென்றதும் கொடுத்த சீட்டுக்களை மீளப்பெறாமலே செல்வார்கள். இதனால் அதிஸ்டம் கிடைத்த சீட்டுக்களும் முகவர் கைகளில் போய்ச் சேர்கின்றன.

சில முகவர்கள் தமிழர்களாக இருந்தும் சிங்களத்திலே கதைப்பார்கள். ஒரு சீட்டுபத்து ரூபாவுக்குப் பெற்றுவிட்டு கொடுத்த இருபது ரூபாவில் மிகுதிப்பணத்தைக் கேட்டால் அவர்களின்பாசைகள் புரியாமல் இருக்கும். பத்து ரூபாவுக்குச் சீட்டைப் பெற்றிருக்கும் நபர் மிகுதிப் பணத்துக்கும் சீட்டுக்களைப் பெறும் நிலை தோன்றுகின்றது.

குலுக்கல் முறைகளில் அதிஸ்டம் பார்க்கும்

**எரிசரன்**

சீட்டுக்களைப் பெற்றவர்களும் கூடுதலாக முகவரிடமே சென்று அதிஸ்டங்களைப் பார்ப்பார்கள். தென்பகுதிப் பத்திரிகைகளில் அதிஸ்ட இலக்கங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கும். கூடுதலானவர்கள் பத்திரிகைகள் பார்ப்பதில்லை.

சீட்டுக்களுக்கு கீழ்வரும் முறைகளிலே அதிஸ்டசாலிகளாகின்றார்கள். சில சீட்டுக்களில் ஆறு கூட்டுக்களில் இலக்கங்கள் இருக்கும். அதில் இரு கூட்டு இலக்கங்கள் ஒத்ததாக இருந்தால் பத்து ரூபா அதிஸ்டசாலிகளாகவும் மூன்று கூட்டு இலக்கங்கள் ஒத்ததாக இருந்தால் இருபது ரூபா அதிஸ்டசாலிகளாகவும் அப்படியே ஐநூறு ரூபா, ஐயாயிரம் ரூபா எனவும் அனைத்து இலக்கங்களும் ஒத்ததாக இருந்தால் பத்து இலட்சம் ரூபாவுக்குத் தகுதியுடைய வர்களாகவுமிருப்பர் இதில் குறிப்பாக ஐயாயிரத்துக்குட்பட்ட தொகைப்பணத்தை முகவாகளிடமே பெற்றுக் கொள்ளலாம், அதற்கு மேற்பட்ட தொகைப்பணங்களைத் தேசிய லொத்தர் சபையிடம் பெறவேண்டும்.

சில முகவர்கள் அதிஸ்ட எண்களை மாற்றி எழுதி வைப்பார்கள். குறிப்பாக ஐயாயிரத்துக்குட்பட்ட இலக்கங்களையே மாற்றி எழுதி ஒட்டியிருப்பார்கள். நான்கு எண்களுக்கு ஐயாயிரம் என்றால், ஒரு எண் மாறியிருந்தால் ஐநூறுரூபாவே வழங்கி அச்சீட்டுக்குரிய மிகுதிப்பணத்தை தாங்களே பெறுகின்றனர். கொழும்பு பிரதான வீதியில் ஒருமுகவர் சைக்கிளில் நடமாடும் விற்பனை நிலையத்தை நடாத்தி வருகின்றார். அவருக்கு உதவியாளரும் ஒருவர் இருக்கின்றார். வன்னி நபர் ஒருவர் சுரண்டிபார்க்கும் சீட்டொன்றை எடுத்தார். அவர் சுரண்டிபார்த்ததும் ஐயாயிரம் ரூபாவுக்குரிய அதிஸ்டசாலியாகினார். உடனே உதவியாளர் அதனைப் பெற்று "ஐயாயிரம் ரூபா...ஐயாயிரம் ரூபா.." என்று கத்தினார். அந்த அதிஸ்டத்தை அறிந்த சனங்கள் முகவரை சுற்றி நின்று அவசரமாக சீட்டை பெறத்தொடங்கினர். வன்னி நபர் "ஐயாயிரம்" என்ற மகிழ்வில் நின்றார். முடிவில் சீட்டைக் வாங்கிக் கத்திய நபரைக் காணவில்லை. முகவரைக்கேட்டார். "யாரிட்டைக் கொடுத்தனீர்? எனக்கு அவர் யார் என்று தெரியாது." என்று கூறினார். பாவம் அந்த வன்னிநபர். சிலரின் பரிதாபவார்த்தை களுடன் அந்த இடத்தை விட்டு விலகினார். ஏமாற்று வித்தகர்களும், போலிவிற்பனை முகவர்களும் அதிகரித்ததனால் விபரம் தெரியாத, மொழிகள் புரியாத அப்பாவிகள் ஏமாற்றப்படுவது வேதனை தரும் விடயம். அதுமட்டுமல்ல அதிர்ஸ்டத்தின் பெயரால் மக்கள் ஏமாறத்தயாராக இருக்கும் வரை ஏமாற்றுவோர்களுக்கும் குறைவிருக்காது.

நாமே, நம்மை பிறர் சுரண்ட அனுமதித்துக் கொள்ளும் வரைக்கும் 'சுரண்டுபவன்' பாடு கொண்டாட்டம் தான்.

அறிவு, பழங்காலத்தின் சாரம்; ஆனால் அழகு எதிர்காலம் விடும் அழைப்பு. -ஆலிவர் வெண்டெல் ஹேல்ம்ஸ்

# நறுக்கென...



லண்டன் டெய்லி ரெலிகிராப் (Daily Telegraph) பத்திரிகையின் ஊடகவியலாளரும், பிரபல பத்தி எழுத்தாளரும்

## போல் ஹரிஸும் பொ.ஐ.முன்னணியும்



புகைப்பட இதழியலாளருமான (Photo Journalist) போல் ஹரிஸ் அவர்களுக்கான 'விஸா'வை மேலும் நீடிக்க மறுத்ததன் மூலம் அவர் சிறிலங்காவை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

சிறிலங்காவின் அரசியல் வட்டாரங்களில் கடந்த சில மாதங்களாக இவர் சர்ச்சைக்குரிய ஒருவராகவே விளங்கினார்.

லண்டன் பத்திரிகைக்கான செய்தி சேகரிப்பாளராகவே செயற்பட அனுமதி பெற்று கொழும்புக்கு வந்த போல் ஹரிஸ் அனுமதிக்கப்பட்ட எல்லைகளை மீறி சிறிலங்காவின் உள்நாட்டு விவகாரங்களில் - அரசியலில் தலையிட்டுக் கருத்துக்களைக் கூறியதுடன் கொழும்பிலிருந்து வெளிவரும் டெய்லிமிரர் பத்திரிகையிலும் வாரா வாரம் அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் கடுமையாக விமர்சித்து எழுதிவந்தவர். சில மாதங்களின் முன்னர் கொழும்பில் முக்கியமான பாராளுமன்றக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த சில உறுப்பினர்களுக்கும், ஜே.வி.பியினருக்கும் தனிப்பட்ட அரசியல் கருத்துரையொன்றை நிகழ்த்திக் கொண்டிருந்தார் என்று கூறப்பட்டவர்.

பொ.ஐ.முன்னணியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததுடன், தற்போது நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் கடுமையாக விமர்சித்து உள்ளூர் பத்திரிகைகளில் எழுதியும் வந்துள்ளார்.

எல்லாவற்றிலும் மேலாக பிரிட்டிஷ் MI5 உளவு நிறுவனத்தின் முகவர் என்ற குற்றச்சாட்டும் பகிரங்கமாக இவர் மீது வைக்கப் பட்டபோதும் இவர் இதனை மறுத்து வந்துள்ளார்.

லக்ஸ்மன் கதிர்காமரால் பாராளுமன்றத்திற்கு அழைக்கப்பட்டு அரசு-புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து பொ.ஐ முன்னணி பாராளுமன்றக் குழுவுக்கு விளக்குமாறும் வேண்டப்பட்டவர்....

இப்போது வெளியேறிவிட்டார்.

இவரது வெளியேற்றம் பற்றி அதிகம் கவலைப்படுவது பொ.ஐ.முன்னணியும், சந்திரிகாவும்தான். சந்திரிகா இவருக்கான விஸா மறுக்கப்பட்டமைக்கு கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளார். பத்திரிகையாளர், ஊடகவியலாளர்கள் சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் எப்படி மதிக்கப்பட்டார்கள் என்பதற்கு "சட்டன"பத்திரிகை ஆசிரியர் ரோகண குமார மற்றும் நிமலராஜன் ஆகியோரின் படுகொலைகளே சிறந்த உதாரணமாகும்.

அதுசரி 1998இல் சீனாவின்- பீஜீங்கின்-ஸிங்குவா . நியூஸ் ஏஜென்சியின் பத்திரிகையாளரான 'ஜின்குய்' என்பவரையும் 1996இல் நான்கு டாளிஸ் (டென்மார்க்) பத்திரிகையாளர்களையும் நாட்டைவிட்டு வெளியேற்றிய சந்திரிகாதான் இப்போது போல் ஹரிஸுக்காகப் புலம்புகிறார்.

தனக்குத்தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கென்று அடிக்குமாம்.

## கதிர்காமரின் நம்பிக்கை....



'இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் நம்பிக்கை தருவனவாக அமைந்துள்ளது. என்று ஒரு அசாதாரணமான குரலும் சொல்லியுள்ளது.

குரலுக்குரியவர் லக்ஸ்மன் கதிர்காமர். முன்னாள் வெளியுறவு அமைச்சர், விடுதலைப்புலிகளின் எதிர்ப்புச் சர்வதேசப் பிரச்சாரகர், சந்திரிகாவின் தற்போதைய நம்பிக்கைக்குரிய விசுவாசமான ஆலோசகர். இவரின் இந்தக் குரல் ஆச்சரிய மூட்டுவதாகவே உள்ளது.

பேச்சுவார்த்தையில் முதற்கட்டத்தின் போதே சந்தேகங்களைத் தெரிவித்தவர், மறைமுகமாக எதிர்த்தவர், ரகசியமாக அதனைக் குழப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு களைத்துப்போனவர். இப்போது இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் திருப்திப்படுவதற்கான காரணம் தான் என்ன?

பொ.ஐ.முன்னணியின் ஆதரவுச் சக்திகள் யாவும் சமாதான முயற்சிகளை முற்றாக நிராகரித்து எதிர்க்கும் நிலையில் கதிர்காமரின் இந்தக் கருத்து வெளிவந்துள்ளது. பல்வேறு சந்தேகங்களை எழுப்பவே செய்கிறது.

ஏன், கதிர்காமரின் சகாவான டக்ளஸ் தேவானந்தாவே இரண்டாம்கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஏமாற்றமளிக்கிற தென்றும் 'கவலை தோய்ந்த' குரலில் கூறியிருக்கையில், கதிர்காமர் மட்டும் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் என்றால் ....?

சில நாட்களுக்கு முன்னர் கூட கதிர்காமரின் 'எஜமானி' சந்திரிகா பேச்சுவார்த்தைகள் குறித்து தனக்கு எதுவுமே தெரிவிக்கப்படுவதில்லை எனப் புலம்பியுள்ள வேளையில் அவரது ஆலோசகர் மட்டும் எப்படி பேச்சுவார்த்தைகள் நம்பிக்கையூட்டுவதாக இருக்கின்றதென புரிந்து கொண்டார்? ஆச்சரியம்தான்!

சரி இதனை சந்திரிகாவுக்கு அவர் சொல்லியிருப்பாரா? ஆலோசகரல்லவா? சொல்லாமல் இருப்பாரா? அதுதான் சந்திரிகாவும் தனது கட்சிக்காரரை சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து விமர்சனமோ கருத்தோ வெளியிட வேண்டாமென்று கூறியுள்ளார் போலும். ஆனால் கொழும்பில் அடிபடும் செய்திகளில் வேறுவிதமான தகவல்களும் பரிமாறப்படுகின்றதாக தெரியவந்துள்ளது.

இந்த முன்னாள் வெளியுறவாளரை அவரின் சில வெளியுறவுகளே தொடர்பு கொண்டு சில அழுத்தங்களைச் செய்துள்ளதாகவும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை குழப்பும்படியாக எதனையும் செய்ய வேண்டாமென வலியுறுத்தியுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. முந்தி இவர் சொன்னதை அவர்கள் கேட்டார்கள்.... இப்ப அவர்கள் சொல்வதை இவர் கேட்கத்தானே வேண்டும்.....!

## 'மாரப்பன'வின் அறைகூவல்



சமாதானத்திற்கானநடவடிக்கைகள் தோற்குமேயானால் ஏற்படக் கூடிய சகல நிலைமைகளையும் எதிர்கொள்ள வேண் டிய தரத்தில் இராணுவமும் கடற்படையும் இருக்க வேண்டும் என்று கூறயிருக்கிறார் சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன.....

சமாதானம்மீதான அரசின் நம்பிக்கையின்மையைஅந்த உறுதிப்பாட்டின்மையை அமைச்சரின் கூற்று வெளிப்படுத்துவதாகக் கொள்ளலாமா?

அல்லது 'சும்மா' ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவர் இவ்வாறு கூறினார் என கருதலாமா?

எப்படியானாலும் அரசு ஒருபுறம் பாதுகாப்பு செலவினங்களை குறைப்ப தாகவும், இராணுவத்தினரை ஐ.நா படையில் பணிபுரிய அனுப்பத் திட்டமிட்டுள்ளதாகவும் வெளியே பிரச்சாரம் செய்து கொண்டாலும் உள்ளூர மறைமுகமாக இராணுவ மற்றும் ஏனைய படைப்பிரிவுகளை மேலும் நவீனமயப்படுத்தவும், ஆயுத உபகரணங்களை வளப்படுத்தவும் பல்வேறு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் தெரிய வந்துகொண்டுதான் இருக்கின்றன.

இராணுவ மற்றும் புலனாய்வு அமைப்புக்களின் கட்டமைப்பை முற்றாக, எதிர்கால சவால்களை சந்திக்கும் வகையில் மாற்றம் செய்வதற்கான ஆலோசனைகளும் சிபார்சுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு இராணுவ, புலனாய்வு அமைப்புக்களின் உதவிகள், பயிற்சிகள், ஆலோசனைகள் யாவும் இவை தொடர்பாகப் பெறப்பட்டும் வருகின்றன.

சமாதானத்திற்கான முன்னெடுப்புக்களும் சண்டைக்கான தயாரிப்புகளும் ஏககாலத்தில் நடைபெறுகின்றமையே இந்த நடவடிக்கைகளும், பாதுகாப்பு அமைச்சரின் 'பாதுகாப்பான' பேச்சும் வெளிப்படுத்துவதாக உள்ளது என அவதானிகள் கருதுகின்றனர்.

இதேவேளை இராணுவத்திற்கு மேலும்-உடனடியாக 5000ம் பேரைச் சேர்க்கும் நடவடிக்கைகளும் தீவிரமாக மேற் கொள்ளப் பட்டு வருகின்றன. இதெற்கென கவர்ச்சியான விளம்பரங்களும் வெளியிடப் பட்டுள்ளன. சேவையில் இணைந்த ஓராண்டில் 'லான்ஸ் கோப்ரலாக' பதவியுயர்வு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

ஏனிந்த அவசரம்....? எதற்கு மேலும் மேலும் இராணுவம்?

பாதாள உலகக் கும்பலுள் இன்னும் பலரை இணைப்பதற்காகவா?

அல்லது போருக்குத் தயாராவதற்காகவா?

அமைச்சர் மாரப்பன தான் விளக்க வேண்டும்....

## எல்லைகடந்தஇனவாதமும் அதிகாரப் பரவலாக்கலும்



அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம்தான் நாடு இரண்டாகப் பிளவு படுவதைத்தவிர்க்கலாம் என சிறிலங்காவின் அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் அவுஸ்திரேலியச் செய்தி ஏடொன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பீரிஸ் அவர்கள்'அதிகாரப் பரவலாக்கல்'என்ற சொல்லைச் சந்திரிகாவின் ஆட்சி தொடங்கிய 95ஆம் ஆண்டு காலத்திலிருந்தே சொல்லிவருகிறார். அதுமட்டுமல்ல அக்காலத்தில் ஏதாவது சந்திரிகா அரசிலிருந்து ஐ.தே கட்சிக்கு மாறும் வரைக்கும் அதிகாரப் பரவாக்கல் அடங்கியதீர்வுப் பொதி யொன்றை கொண்டு அலைந்து திரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் சந்திரிகா அவரை ஒரு அரசியல் கோமாளி போலவே நடத்தினார். கடைசியில் பொதி எங்கே என்றும் தெரியவில்லை. போர் வெறியில் சந்திரிகா தீர்வுப் பொதியை மறந்தவராக இருந்தார். அதிகாரப் பகிர்வு என்றாலே அவருக்கு'அலர்ஜி'யை ஏற்படுத்தும் ஒன்றாகிவிட்டது.

எனினும் கட்சி மாறினாலும் 'பீரிஸ்' அதிகாரப் பரவலாக்கலை விடவில்லை.

அதிகாரத்தை எப்படிப் பரவலாக்குவது என்பது தான் இப்போதுள்ள பிரச்சினை. சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட நிலையில், பாரம்பரிய பிரதேசங்களை ஏற்றுக்கொண்ட நிலையில், வடக்கு - கிழக்கு இணைப்பை அங்கீகரித்த நிலையில் அதிகாரப்பரவலாக்கலை மேற்கொள்வதென்றால் அதற்கு சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் ஒத்துக்கொள்வார்களா? அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என ஒரு கதைக்கு வைத்துக் கொண்டாலும் நிறைவேற்று அதிகார சனாதிபதியும் அவரது ஆட்களும் ஒப்புக்கொள்வார்களா?பேரினவாதிகள் சம்மதிப்பார்களா?

இதற்கும் பீரிஸ் அவர்கள் தான் விடைசொல்ல வேண்டும். இதேவேளை பீரிசுக்கு அவுஸ்திரேலியாவில் வாழும் சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டம்செய்து எதிர்ப்பைக் காட்டியுள்ளார்கள். விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என அவருக்கு பட்டம் சூட்டியுள்ளார்கள். மெல்போர்ன் நகரில் அவரை உரையாற்றவிடாது தடுத்துள்ளார்கள்.

எல்லை கடந்த பயங்கரவாதம் பற்றிப் பேசுவோர் எல்லைகடந்த இனவாதம் பற்றி யோசிப்பதும் நல்லது.

அவுஸ்திரேலியாவில் இலங்கைத் தூதராக உள்ள முன்னாள் சிறிலங்காவின் இராணுவத்தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா இந்த ஆர்ப்பாட்டத்தின் போது என்ன செய்திருப்பார்.

இனவெறியாளரான அவர் முன்னர் இத்தகைய இனவாத ஆர்ப்பாட்டங்கள் கூட்டங்களில் கலந்து கொள்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பீரிஸ் அவர்கள் அதிகாரப் பரவலாக்கம் குறித்து சிங்கள மக்களுக்கு விளக்கி அவர்களின் ஆதரவைப் பெறாத வரை அதிகாரம் பரவலாகாது என்பதைப் புரிந்துகொண்டால் நல்லது.

## உள்ளத்தை உறுத்துபவை



அண்மையில் கிளிநொச்சியில் உள்ள ஒரு பிரபலமான உணவுச் சாலைக்கு மதிய உணவிற்காக சென்றிருந்தேன்.

அந்த உணவுச் சாலையில் ஏராளமான உள்ளூர் மற்றும் வெளியூர் பயணிகள் இருந்தனர்.

அங்கு கைகழுவும் இடத்தில் கைகழுவுவதற்காக சென்ற போது நீரைப்பெற்றுக்கொள்ளும் குழாயிலிருந்து ஏராளமான நீர் கழிவுத்தொட்டியினூடாக வழிந்து நிலத்தில் சிறு குட்டையைப் போலத் தேங்கி நின்றது.

அங்கு செல்லும் எல்லோரது முகங்களையும் சுழிக்க வைத்ததோடு சுகாதார சீர்கேட்டிற்கும் காரணமாக இருந்தது.

பின்னர் பல தடவை சென்ற போதும் அந்த நீர்த் தொட்டியில் எந்தவித மாற்றமும் இல்லை. அந்த நிறுவனத்தின் நிர்வாகம் அதனை கவனித்ததாகவும் இல்லை.

அள்ள, அள்ள குறையாத சுவையோடு உணவை வழங்குகின்ற அந்த நிறுவனம் இதை மட்டும் கவனித்ததாக தெரியவேயில்லை. 'வேழினி'

ஒருவர் ஒரு புத்தகத்தை உருவாக்க, நூல் நிலையத்தில் பாதியைப்புரட்டுவார். - ஸேம்யஸ் ஜான்ஸன்

நேர்நோக்கு

# இழுத்தடிப்புக்கள் நம்பிக்கை தரா....

விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்துக்கு மிடையேயான சமாதான முயற்சிகளின் அங்கமாக அமைக்கப்பட்ட உபகுழுக்கள் இப்போது செயற்படத் தொடங்கிவிட்டன. தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின் பெறுபேறாக எட்டப்பட்ட இவ் உபகுழுக்கள் மூலம் இரண்டு விடயங்கள் சாதிக்கப்படக் கூடியவையாகும். முதலாவது கடந்த 20 வருடங்களாக தமிழ் மக்கள் சந்தித்து வந்த அவலங்களிலிருந்து மீண்டு இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்கான வாய்ப்பு. இரண்டாவது 50 வருடங்களுக்கு மேலாகப் புரையோடி போயிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வாய்ப்பு.

யுத்த நெருக்கடிக்குள் மக்களை வைத்துக்கொண்டு, மக்கள் துன்பங்களுக்கு மத்தியில் சிக்கி உழலும் போது இனப் பிரச்சினைக்குத்தீர்வு காணமுடியாது என்பது புலிகளால் நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டு வந்த ஒன்று. அதாவது இராணுவ நெருக்கு வாரங்கள் மூலம் அரைகுறைத் தீர்வொன்றை திணித்துவிட கடந்தகால அரசாங்கங்கள் செய்து வந்த முயற்சியை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்வாறொரு நெருக்குவாரத்தின் மத்தியில் பெறப்படும் தீர்வானது நிரந்தரமானதாகவும் இருக்கமாட்டாது. அத்துடன் அதனை சிறிலங்காத் தரப்பு சரிவர நிறைவேற்றும் என்ற நம்பிக்கை தமிழர் தரப்பில் ஏற்படவும் மாட்டாது.

எனவே இந்த அழுத்தங்களிலிருந்து விடுபட்டு ஓர் இயல்பு நிலையைத் தோற்றுவித்து அமைதியான ஒரு சூழலில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்றே புலிகள் வலியுறுத்தி வந்தனர். இந் நிலையில் தாய்லாந்தில் இரண்டாம்கட்டப் பேச்சுகளில் எட்டப்பட்ட முடிவுகள், இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் அதேவேளை இனப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண்பதற்கான அடிப்படைச் செயற்பாடுகளை ஆரம்பிக்கவும் வழிவகுத்துள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது கட்சியும் இராணுவ அழுத்தத்தின் மத்தியில்-அவற்றை அப்படியே வைத்துக் கொண்டு அவர்களின் நினைத்த தீர்வொன்றைத் திணித்துவிட எடுத்த முயற்சிகள் கடந்த காலத்தில் தோல்வியிலேயே முடிவடைந்தன. அத்துடன் அவரது ஆட்சியின் இறுதிக்காலத்தில் நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட சில சமாதான முயற்சிகளின் போது, அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒருநேர அட்டவணைக்கு விடுதலைப்புலிகள் சம்மதிக்க வேண்டும் என சந்திரிக்கா அம்மையார் வலியுறுத்தி வந்தமையாலே அந்த முயற்சிகள் பயனளிக்காமல் போயின.

எனவே இப்பொழுது சமாதான முயற்சிகள் முன்னோக்கிப் போவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது வெளிப்படையான விடயம். ஆனால் இந்தச் சூழ்நிலையைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்வதிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது.

ஆனால் இந்த முயற்சிகள் விடயத்தில் படைத்தரப்பு நடந்து கொள்ளும் விதம் சமாதானம் விரும்பும் மக்களுக்கு குழப்பத்தையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்துவதாகவே இருந்துவருகின்றது. ஆரம்பத்தில் நெடுஞ்சாலைகளைத் திறந்துவிடுவது தொடக்கம் ஒருசில காவலரண்களை அகற்றுவதுவரை, படைத்தரப்பு இந்த முயற்சிகளுக்கு மனமொத்து ஆதரவு வழங்கியது போலத் தெரியவில்லை.

ஏ-9, நெடுஞ்சாலை, மன்னார் வீதி என்பவற்றை திறக்கும் போது குறிப்பிட்ட நாட்களில் மட்டுமல்ல குறிப்பிட்ட நேரத்தில் திறந்துவிடச், கூட முயாலாமல் இறுதிநிமிடம் வரை படைத்தரப்பு இழுத் தடித்தே வந்தது. இதற்குப் படைத்தரப்பு பல சாக்குப் போக்குகளைக் கூறியது.

அப்பொழுது சமாதான முயற்சிகள் ஆரம்பகட்டத்தில் இருந்தன. பரஸ்பரம் தொடர்பாடல்கள் குறைவாக இருக்கையில், சந்தேகங்கள் அவநம்பிக்கைகள் தோன்ற வாய்ப்புக்களும் இருந்தன. ஆனால் இப்பொழுது சமாதான முயற்சிகள் பல படிகள் முன்னேற்றம் கண்டுள்ளன. பல சந்திப்புக்கள் கலந்துரையாடல்கள் விட்டுக்கொடுப்புக்கள் முடிவுகள் என தொடர்ந்து கொண்டிருக்கின்ற வேளையிலும் படைத்தரப்பு நம்பிக்கையூட்டும் விதத்தில் செயற்படாதது. மக்களுக்கு கவலையை ஏற்படுத்தும் விடயமாகும்.

மக்களால் நிராகரிக்கப்பட்ட ஈ.பி.டி.பி போன்ற குழுக்களைத் தொடர்ந்து பேணி வருவது, அவர்களுக்காக மக்களைத் தாக்குவது என்பது படைத்தரப்பு மீது அவநம்பிக்கையை வளர்க்கவே உதவக் கூடியதாகும்.

அதுமட்டுமல்ல, இப்பொழுது மக்கள் படிப்படியாக இயல்புவாழ்விற்கு திரும்பி வரும் வேளையில், அவர்களின் பெருமளவான குடியிருப்புக்கள், விளைநிலங்கள், தொழில்நிறுவனங்கள், தொழிற்சாலைகள் என்பவற்றை படையினர் தம்வசம் வைத்துக்கொண்டு உயர்பாதுகாப்புபக்கு அவை அவசியம் என்றும் கூறிக் கொண்டிருப்பது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடியதல்ல.

அண்மையில் கூடிய உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான உபகுழுக் கூட்டங்கள் பயன்தரக்கூடிய முடிவேதுமின்றி முடிவடைந்திருப்பது தமது சொந்த இடங்களில் குடியேறி தமது சொந்த வாழ்க்கையை நிம்மதியுடன் வாழலாம் என எண்ணியிருந்த பெருமளவான மக்களுக்கு பெரும்விசனத்தை ஏற்படுத்தி யுள்ளது. இந்த மக்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் தாம் சொந்த இடங்களில் மீளக்குடியேற அனுமதிக்க வேண்டுமெனக் கோரி மனுக்களை அனுப்பியும் போராட்டங்களை நடத்தியும் தமது விருப்பத்தை வெளிப்படுத்தி யிருக்கின்றனர். இவர்கள் தொடர்ந்து ஏமாற்றத்திற்கு உள்ளாவது சமாதானத்தின் மீதுள்ள நம்பிக்கையைச் சிதறடிக்கக் கூடியதாகும்.

அதேபோல, கடந்த பல ஆண்டுகளாக சரிவரத்தொழில் புரியமுடியாது அல்லற்படும் கடற்தொழிலாளர்கள் தமது தொழிலைச் சுதந்திரமாகச்செய்யும் விருப்பத்தைப் பலமுறை வெளிப்படுத்தியுள்ளார்கள். தமது தொழிலுக்கு படையினர் போட்டுள்ள தடைகளும் நடைமுறைச்சட்டங்களும் எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்பது குறித்தும் அவர்கள் மனுக்கள் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றனர். இவ்விடயத்திலும் சாதகமான முடிவேதும், இதுவரை எட்டப்படவில்லை என்பதும் கவலைக்குரிய விடயமாகும்.

கடந்த 9 மாதங்களுக்கு மேலாக மக்கள் தமது இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் விடயங்களை நீக்கிவிடுமாறு கோரி பல சாத்வீகப் போராட்டங்களை நடத்தியிருக்கின்றனர். இவற்றில் மீள்குடியேற்றம், வீதி திறப்பு, மீன்பிடித் தொழிலுக்கான அனுமதி என்பன முக்கிய இடம் பெற்றிருக்கின்றன. இவை அனைத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவேண்டியவையாகும். இவற்றுக்காக மக்கள் போராட்டம் நடத்தவேண்டிய சூழலை படையினர் ஏற்படுத்தியதே கவலை தரும் விடயமாகும்.

இவ்வாறன நிலையில் இப்பொழுது நடைபெற்று வரும் உபகுழுக்களின் சந்திப்புக்கள் தீர்க்கமான முடிவுகள் எதுவுமின்றி முறிவடைவது மக்களுக்கு மேலும் கவலையை ஏற்படுத்தக் கூடியதாகும். அதேவேளை சமாதான முயற்சிகளின் வேகமும் வெற்றியும் இந்த உபகுழுக்களில் எடுக்கப்படும் தீர்மானங்களிலும் அவை நிறைவேற்றப்படுவதிலுமேயே தங்கியுள்ளன.

**வேலவன்**

2ம் பக்கத் தொடர்ச்சி....

அவர்கள் நிரூபித்துக்காட்டுவதற்கான வாய்ப்பினையே ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அந்த வகையில் கடற்படையினருக்கு நன்றி சொல்லலாம்.

நெடுந்தீவில் முகாமமைக்க தரையிறக்கம் செய்துள்ள ஈ.பி.டி.பியினருக்கு பாதுகாப்பாக பெருமளவில் பொலிசாரும் கடற்படையினரும் குவிக்கப்பட்டுள்ள நிலையில் ஈ.பி.டி.பியினரை அங்கிருந்து வெளியேறக் கோரி நெடுந்தீவு மக்கள் முற்றுகைப் போர் ஒன்றை கொட்டும்மழையிலும் மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. துறைமுகப்பகுதிக்குள் தற்போது நிலைகொண்டுள்ள ஈ.பி.டி.பியினர் அங்கிருந்து முற்றாக வெளியேறும்வரை தமது போராட்டத்தை தொடரப்போவதாக மக்கள் தெரிவித்துள்ளமையானது அவர்கள் மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பினை துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது.

முன்னரும் மக்கள் தீவிலிருந்து ஈ.பி.டி.பியினரை வெளியேற்றிய போது அவர்களுக்காக குரல் கொடுத்து , அச்சம்பவத்தைப் பற்றி முழுமையாக விசாரணை செய்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கூறியவர் அவர்களின் கூட்டமைப்பின் தலைவியான சந்திரிகா மட்டுமே.

இப்போது கடற்படைத் தளபதியாக இருக்கும் தயாசந்தகிரி சந்திரிகாவின் ஆசீர்வாதத்தை அதிகமாகவே பெற்றவர். ஒரே தடவையில் மூன்றாண்டுகால பதவி நீடிப்பினை சந்திரிகா அவருக்கு வழங்கி அவரது உச்சி குளிரவைத்து தனது நிரந்தர விசுவாசியாக அவரை மாற்றிக் கொண்டுள்ளார்.

எனவே சந்திரிகா , கடற்படை, ஈ.பி.டி.பி கூட்டுப் பற்றி கூறத் தேவையில்லை. இந்தத் தரை யிறக்கம் கூட சந்திரிகாவின் ஆசியுடனும், ஆணையுடனும்தான் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்று எவரும் நினைத்தால் அதில் சந்தேகம் கொள்ளவும் இடமில்லை.

நெடுந்தீவை மீண்டும் கடற்படை ஈ.பி.டி.பியின் உயர்பாதுகாப்பு வலயமாக்கி அந்தத் தீவின் அமைதிவிரும்பும்- சுதந்திரம் விரும்பும் மக்களை கொத்தடிமைகளாக மீண்டும் மாற்றும் திட்டத்தின் மூலோபாய நடவடிக்கைகளில் ஒன்றே இந்தத்தரையிறக்க நிகழ்வாகும்.

தரையிறங்கியோரை - இறக்கப் பட்டோரை- கரைதாண்டவிடாது மக்கள் நடத்தும் போராட்டம் மதிக்கப்பட வேண்டியதே...

இந்தத்தரையிறக்க நிகழ்வினை செய்ததன் மூலமும் மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததன் மூலமும்புரிந்துணர்வு உடன் பாட்டை மீறியுள்ள கடற்படை -பொலிஸ்படை- மற்றும் அவர்களின் துணைப்படையினர் மீதான கண்காணிப்புக்குழுவினரின் பார்வை எந்தவகையில் அமையப் போகிறது என்பதை வைத்தே அவர்கள் மீதான மக்களின் நம்பிக்கையும்அமையும்.

கடற்படையினரின் இந்த நடவடிக்கை சமாதானம் குறித்த அவர்களின் கருத்தை வெளிப்படுத்துவதுடன், மக்களின் அமைதி மீதான நம்பிக்கையையும் கேள்விக்குறியாக்கியுமுள்ளது.


27ம் மாத நினைவலைகளுடன்

தாயின் மடியில்
12 * 01 * 1976



தாயக மண்ணில்
29 * 08 * 2000

மேஜர் சாரங்கன்/அழகன்

(மயில்வாகனம் அரவிந்தன்)

யாழ்.மாவட்டம்.

அன்னை மடியினில் வந்து
உதித்த முத்து நீ
அன்னை மண்ணிலே விதைத்திட்ட
வித்து -நீ மண்ணிலே ஒரு
மதியாய் இருந்தவன்
கடமையது பெரிதெனப் பணிபுரிந்தவன்
கல்லறையில் கண்துயிலும் காவியமே!
தனக்கென வாழாது தமிழுக்காய் வாழ்ந்தவனே
காலம் எல்லாம் வாழும் வீரனே
தாயின் மடியில் தவழ்ந்து
தரணி போற்றும் தலைவன் சேனையில்
இணைந்து சாவுக்குச் சரித்திரம் எழுதிய புயலே
வீழாது உன் புகழ்
அகலாது நீண்ட உன் புகழ்
உன் கனவு நனவாகும் நிம்மதியாகத் தூங்கு

குடும்பத்தினர்

(2178)


படிப்பதிலிருந்து கற்குமளவு, எழுதுவதிலிருந்தும் கற்றுக்கொள்.

- ஆக்ட்டன் பிரபு

# படமும் தகவலும்



படத்தில் நடவடிக்கை ஒன்றிற்கான ஒழுங்குகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் விசேட பாதுகாப்பு பிரிவான பொம் ஸ்குவாட் (Bomb Squad) ஐச் சேர்ந்த படைவீரர்களைக் காணலாம். அண்மையில் தாய்லாந்தின் ரோஸ்காடன் விடுதியில் இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கையிலேயே இவர்கள் ஈடுபடுகின்றனர்.



பறவைகள் உல்லாசமாக கூடு கட்டி அமர்ந்திருப்பது பண்டைய நகரம் ஒன்றில் எஞ்சியிருக்கும் தூண் ஒன்றின் உச்சியிலே ஆகும். மத்திய ஐரோப்பாவில் அழிந்து கொண்டிருக்கும் இச் சின்னங்களை காப்பதற்கு இப் பறவைகளுக்கும் சிறு ஆசையோ!

இப்பொழுது யாழிலும் நிகழும் இவ் அழிவுகளையும் மறைவுகளையும் காப்பதற்கு ஒரு "பறவைகளும்" இல்லையோ?




செய்மதிகள் மூலமாக மனிதர்களை விண்வெளிக்கு அழைத்துச் செல்வதாக கூறும் தொலைபேசிகள் பாவனைக்கு வந்து விட்ட நிலையில் இப்பொழுது செய்மதிகள் சாதாரண வீடுகளுள்ளும் வந்துவிடுமாறு வானொலிப் பெட்டிகள் சந்தைக்கு வந்து விட்டன. அவ்வாறான செய்மதி வானொலிப் பெட்டி ஒன்று மேலே.

சுற்றுலாவரும் சிறுவர்களுடன் சிநேகிதமாக பழகுவதில் இக் குரங்குகள் புத்தி சாதுரியமாக செயற்படுகின்றன. பாலித் தீவில் உல்லாசப் பிரயாணிகளை கவருவதில் அங்குள்ள கோயில்களில் உள்ள குரங்குகள் முதலிடம் வகிக்கின்றன.

அண்மையில் பாலித் தீவில் இடம் பெற்ற குண்டு வெடிப்புக்கள் அந்த நாட்டின் பெரும் அந்நியச் செலவாணியை ஈட்டித்தரும் உல்லாசப் பயணத் துறையை பாதிப்புக்கு உள்ளாக்கியிருக்கின்றன. இந் நிலையில் பாலி அரசுக்கு இக் குரங்குகள் கை கொடுக்குமா?!








ஓயாத அலைகள் —1
சித்திரக்கதை
விரைவில் வெளிவருகிறது.
விற்பனை முகவர்கள்
தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.




எம் விடிவுக்காய்
உயிர் தந்த
மாவீரர்
இலட்சியங்கள்
ஈடேறும்
இந்நாளில்
அவர் தம்
ஆன்மாவிற்கு
வீரவணக்கம்!
எம் சிரம் தாழ்த்தி .

சுத்தமான 22 கரட் தங்கத்தில்
நயம்பட கை தேர்ந்த நகைத்
தொழிலாளிகளால்
வடிவமைக்கப்பட்ட
நகைகளையும் சிங்கப்பூரில்
இருந்து தருவிக்கப்பட்ட
எல்லா விதமான நகைகளையும்
நியாய விலையில்
பெற்றுக் கொள்ள நாட வேண்டிய
நம்பிக்கையான நிறுவனம்.

லாவண்யா ஜுவல்லறி

இல 60, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
✆ 024 – 22484
Fax– 024 –20236

(C-7495)



இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு நவம்பர் மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.